*Government Oriental Manuscripts Library, Madras-5.*

# பிரபந்த மரபியல்

# PRABANDHA MARAPIYAL

Edited by :

M. ARUNACHALAM, M.A.,

Director (Tamil Division) of Tamil, Sanskrit and other
Indian Languages Research Institute, Madras.

General Editor :

C. R. VITTOBABU

Assistant Director of Collegiate Education, Madras-6.
and
Curator-in-charge, Government Oriental Manuscripts Library,
Madras-5.

1976

©
GOVERNMENT OF TAMIL NADU

# பிரபந்த மரபியல்

பதிப்பாசிரியர் :

**மு. அருணாசலம்,** எம்.ஏ.,

இயக்குநர் (தமிழ்ப் பிரிவு) தமிழ், வடமொழி, மற்றும் பிற இந்திய
மொழிகள் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.

பொதுப்பதிப்பாசிரியர் :

**சி. ஆர். விட்டோபாபு,**

உதவி இயக்குநர், கல்லூரிக் கல்வி இயக்ககம், சென்னை-6.

&

பாதுகாவலர்-பொறுப்பு, அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்,
சென்னை-5.

1976

©

தமிழ் நாடு அரசு

# உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| | பொதுப்பதிப்பாசிரியரின் ஆங்கில முகவுரை | ... | vii |
| | பதிப்பாசிரியரின் ஆங்கில முகவுரை | ... | ix |
| | முன்னுரை | ... | 1 |
| 1. | நூற்பெயர் | ... | 47 |
| 2. | பிரபந்த இலக்கணம் : | | |
| | 1. பிள்ளைக்கவி | ... | 47 |
| | 2. பிள்ளைக்கவியின் பாடல் தொகை | ... | 48 |
| | 3. கலம்பக உறுப்புக்கள் | ... | 48 |
| | 4. கலம்பக இலக்கணம் | ... | 49 |
| | 5. கலம்பகப் பாடல் தொகை | ... | 49 |
| | 6. பன்மணி மாலை | ... | 50 |
| | 7. வெண்பா அந்தாதி, கலித்துறை அந்தாதி | ... | 50 |
| | 8. வருக்கக் கோவை | ... | 50 |
| | 9. கோவை | ... | 50 |
| | 10. இரட்டைமணிமாலை, இணைமணிமாலை மும்மணிக்கோவை | ... | 51 |
| | 11. ஒலியந்தாதி | ... | 51 |
| | 12. இருபா இருபது | ... | 52 |
| | 13. பயோதரப்பத்து, நயனப்பத்து | ... | 52 |
| | 14. தசாங்கப்பத்து | ... | 52 |
| | 15. குடை, செங்கோல், நாடு, ஊர், சிலை, வாள் வேல், பரி, யானை—விருத்தங்கள் | ... | 53 |
| | 16. ஊசல் | ... | 53 |
| | 17. வருக்கமாலை | ... | 54 |
| | 18. மும்மணிமாலை, நான்மணிமாலை | ... | 54 |
| | 19. அலங்காரப் பஞ்சகம் | ... | 54 |
| | 20. அட்டமங்கலம் | ... | 55 |
| | 21. நவமணிமாலை, ஒருபா ஒருபது | ... | 55 |
| | 22. பல்சந்தமாலை | ... | 55 |
| | 23. ஆற்றுப்படை | ... | 56 |
| | 24. பாதாதிகேசம், கேசாதிபாதம் அங்கமாலை | ... | 57 |
| | 25. மங்கலவெள்ளை, மெய்க்கீர்த்திவஞ்சி | ... | 57 |
| | 26. பெருமகிழ்ச்சிமாலை, நாமமாலை, கைக்கிளைமாலை | ... | 58 |
| | 27. உலா | ... | 58 |
| | 28. இன்ப மடல் | ... | 59 |
| | 29. உலா மடல் | ... | 59 |
| | 30. அனுராகமாலை, தூது | ... | 59 |

பக்கம்

31. பொருள், இடம், காலம், தொழில் பற்றிய மாலை, மஞ்சரி, காஞ்சிமாலை, முல்லை, கலி, சதகம் ... 60
32. வெட்சிமாலை முதலிய ஏழு, தானைமாலை ... 60
33. தாரகைமாலை ... 61
34. தசப்பிராதுற்பவம் ... 61
35. நாழிகை வெண்பா ... 61
36. செருக்களவஞ்சி, வரலாற்றுவஞ்சி, ஆனைத்தொழில் ... 62
37. பரணி ... 62
38. பெருங்காப்பியம் ... 63
39. காப்பியம், புராணம் ... 63

3. பொது இலக்கணம் :

1. நூற்பெயர் எய்தும் முறை ... 64
2. கையறத்துக்கு ஆகாத பா ... 64
3. வாழ்த்துக்குரிய பா .. 64
4. நாற்சாதிக்கும் உரிய பா ... 64
5. நாற்பாவுக்குமுரிய நிலம், நிறம், நாள் ... 65
6. நாற்பாவுக்குமுரிய ஓரை (இராசி) ... 65
7. நாற்பாவுக்குமுரிய கோள் ... 66
8. கவிஞன் இலக்கணம் ... 66
9. நாற்கவி ... 66
10. அரங்கேற்றற் சிறப்பு ... 67
11. தமிழ்க்குலப் பெண் ... 67
12. பெண்ணின் சுற்றத்தார் ... 68
13. பரிசில் வழங்காதவன் அழிவு ... 68
14. குற்றமில்லாத பாட்டும், குற்றமுடைய பாட்டும் பலனும் ... 69
15. பிற்குறிப்பு ... 70
16. பிரபந்த வளர்ச்சி ... 72
17. அனுபந்தம்-1
ஐந்திலக்கணமும் பாட்டியல் நெறியும் ... 74
18. விளக்கக் குறிப்பு ... 76
19. அனுபந்தம்-2
96 பிரபந்தங்களின் அட்டவணை ... 77
20. அனுபந்தம்-3
பிரபந்தமரபியல்-சிதம்பரப்பாட்டியல் ஒப்புமை. 79
21. செய்யுள் முதற்குறிப்பு அகராதி ... 81

# GENERAL EDITOR'S NOTE

We have started publishing a critical edition of a work in each volume from the 20th number onwards in our Bulletin. The 20th volume carried a work in Sanskrit by name "Bṛhadyātrā of Varāhamihira" critically edited by Dr. David Pingree of Brown University, U.S.A.

Accordingly in this 21st volume we are publishing a critical edition of a rare Tamil work on poetics by name "Prabandha marapiyal" critically edited by Thiru M. Arunachalam, M.A., Director (Tamil Division) of Tamil, Sanskrit and other Indian Languages Research Institute, Madras.

This Library possesses only one paper manuscript (R. 411) of the work "Prabandhamarapiyal", which contains many omissions owing to the fragmentary condition of the palm leaf manuscript. The palm leaf manuscript is not available to-day.

The learned editor Thiru Arunachalam has taken much pains to edit the work with all care and supplied the omissions and written valuable notes on the text and also written an exhaustive introduction tracing the literary history of the Prabandha literature.

I take this opportunity to express my profound thanks to Thiru Arunachalam, for having edited such a rare work which has a valuable historic importance.

In consideration of the work's importance and usefulness to the scholars and students of Tamil language and literature it is also printed separately as a priced publication. The publication

of "Prabandha Marapiyal" as a separate book, has been sanctioned in the G.O. Rt. No. 2423 Education, dated 12-11-1973.

I hope this publication will be of much interest and use to the scholars in general and to the Post Graduate students of Tamil language and literature in particular.

C. R. VITTOBABU,
*General Editor and Curator-in-charge,*
*Govt. Oriental Manuscripts Library.*

MADRAS,
16-12-1976

# INTRODUCTION

The ancient Tamil language has been considered to have three branches—*iyal, isai* and *natakam* (poetic literature, musical composition and drama). However, the tradition has been continuous only in respect of *iyal; isai* had a broken history, while *natakam* had been defunct for quite a long period. Tolkappiyar, the earliest grammarian, took up the grammar of Tamil poetic literature and dealt with it in three divisions—*eluttu, sol* and *porul* (orthography, etymology and syntax, and poetic themes). Under the last division he included prosody, and what we may consider as the beginnings of rhetoric. Some centuries after him, prosody seems to have been evolved into a separate division, called *yāppu,* as we may conclude from a reference in *Iraiyanār kalaviyal.* This was by the 8th century A.D. During the period, there seems to have been quite a large literary effort in the field of poetics. A very large number of books seems to have been written then and three distinct scholls of grammatical theories known as the *Tolkāppiyam* school, the *Avinayam* school and the *Indrakāliyam* school had been in existence. But unfortunately the latter two schools had disappeared, while the *Tolkāppiyam* school alone flourishes to this day. *Aṇi-iyal* as a branch of grammar makes its appearance now, but along with other treatises on poetics, the first book on this branch has also disappeared.

A study of the fragments from the various books of poetics which have come down to us through citations by commentators gives us a glimpse into the subject matter which was dealt with by the new branch of grammar. This laid down rules for poetic composition and for happy relations between the patron, his name, his star etc. on the one hand and the type of verse, the initial word, the initial letter etc. in the new composition on the other

This was called *porutta-iyal.* It was generally believed that adherence to the laws laid down in this section was conductive to the welfare of the patron, while violation of the rules resulted in calamity to the patron.

A second section of the new book of poetics deals with what we now call *prabandha* (minor poems). This lays down rules for the different types of poems, the type of verses, their number, their themes such as romantic or heroic, and the like. This was called *pāṭṭiyal* or even *prabandha-iyal.* These two sections namely *porutta-iyal* and *pāṭṭiyal* did not exist before the 8th century. However, after this period there had been quite a large growth of this type of treatises till the 17th century. An important treatise of this series is the *Prabandha marapiyal,* now being published.

*Prabandha marapiyal* is a rare work defining the nature of the *prabandhas* or minor poems. It was written in the 16th century. The treatise consists of 35 verses in the *nūrpā* or blank verse metre. The first 21 verses define the 96 *prabandhas.* Verses 22—27 refer to the naming of the poems, appropriate metres and other details. Verses 28—30 define the poet. Verse 31 deals with the publication of the poem; 32 & 33 personify the poem as a damsel and indicate her kith and kin. Verses 34 & 35 state that the patron will come to grief if he does not honour the poet in a fitting manner.

This treatise has two aspects of importance in the history of Tamil literature. One is that this mentions for the first time the *prabandhas* as 96 in number. Till the publication of this treatise, the earliest reference was only an allusion by Padikkasup-pulavar of the late 17th century, in his *Sivanteḻunda-pallavan ula.* The date of the present treatise is fixed as the first quarter of the 16th century, and therefore it takes back the concept of the 96 *prabandhas* in Tamil literature to a period earlier by a century and a half. This is a remarkable contribution to Tamil literary history.

The second aspect is the personification of a poem as a damsel. The writer says (verse 33) the poet is the father of the damsel (poem); poverty-her mother; the audience constitute the sages; the person who reads the script—elder brother of the damsel; those who commend the poem—kith and kin; the patron who gives a prize—her husband. This is an unusual feature, not met with anywhere in all literature.

Only a very imperfect paper manuscript is available for this work in the Madras Government Oriental Manuscripts Library, copied from a palm leaf which was itself in a very bad condition. The original palm leaf is not available. The text is now seeing the light of print for the first time; it has been considerably reconstructed from that manuscript. Many lines and phrases of the text are missing. The copyist had not done the copy well and this has added to the difficulty in the decipherment of the text. However this was to some extent easy because of the similarity found in another treatise by name *Cidambarap-pāṭṭiyal*, whose author (Middle of the 16th century) closely follows this treatise.

The colophon at the end of the paper manuscript leads us to conclude that the work considered of five chapters of which this is the concluding chapter. The earlier chapters are not available. Still we are fortunate that at least this much has been preserved for us, The text gives a complete treatment to the subject and to that extent I am happy that it has been possible to edit and publish this text.

I had studied this manuscript in 1940 and now I am thankful to the authorities of the Library for having assigned to me the work of editing it. The introduction to the small text is very exhaustive and deals with the history of the subject over the whole range of Tamil literature. A complete historical picture of the

grammar of *pāṭṭiyal* and *prabandha-tyal* is here drawn for the first time.

Lovers of Tamil are certain to be grateful to the Madras Government Oriental Manuscripts Library for having taken this work on hand published it.

M. ARUNACHALAM

# முன்னுரை

## முத்தமிழ்

தமிழை முத்தமிழ் என்பது மரபு; இயல், இசை, நாடகம் என்ற மூன்று பிரிவுகள் பெற்றிருந்தமையால். தென் மதுரையில் தலைச் சங்கமும், கபாடபுரத்தில் இடைச்சங்கமும் இருந்து தமிழை வளர்த்தன இவ்விரு நகரங்களும் கடல்கொண்டபின், வடக்கே இப்போதுள்ள மதுரையில் (இது இந்திய நாட்டின் தென்பகுதியில் இருந்தபோதிலும் முச்சங்க வரலாறுகளை நோக்க வடமதுரை என்றே சொல்லப்படும்) பாண்டி மன்னர் ஒரு சிறப்பான தமிழ்ச் சங்கம் (தமிழ்ச் சர்வ கலாசாலை) நிறுவித் தமிழ் வளர்த்தார்கள். இச்சங்கங்களைக்குறித்த செய்திகளை, இறையனுர் களவியல் உரை, சிலப்பதிகார உரை, இளம்பூரணர் உரைக் குறிப்புக்கள் முதலியவற்ருல் அறிகிறோம். கடைச்சங்க காலத்திலேயே இசை நூல்களும், நாடக நூல்களும் அருகி விட்டன போலும். அக்காலத்தில் தமிழுக்குத் தாயகமாகப் பாண்டியர் அரசு புரிந்த மதுரை மாநகரம் இருந்து வந்தது. கி. பி. மூன்ரும் நூற்ருண்டில் மதுரை நகரைக் கருநாடகத்திலிருந்து வந்த களப்பிரர் என்ற இனத்தார் கைப் பற்றி அரசு புரிந்த காலத்தில், இசையும் நாடகமும் ஒடுக்கப்பட்டு மறைந்துபோயின. ஆயினும், இவை முற்காலத்தில் எவ்வளவு விரிவா யிருந்தன என்பதைச் சிலப்பதிகார உரைகள் நமக்குக் காட்டுகின்றன.

## இயல் தமிழ்

பிற்காலத்தில் வளர்ச்சி பெற்றது தமிழில் இயல் பகுதி ஒன்று தான். இன்று கிடைக்கின்ற தமிழ் இலக்கண இலக்கிய நூல்களில் பழமையானவற்றுள் ஒன்று என்று கருதத் தக்க தொல்காப்பியத்துள் இசையும் நாடகமும் இல்லை; இயல் ஒன்றுக்குத்தான் தொல்காப்பியர் நூல் செய்தார். அவருக்குப் பிற்காலத்தில் ஐந்திலக்கணம் (பஞ்சலட்சணம்) என்று சொல்லுகின்ற மரபு ஏற்பட்டது. ஐந்திலக்கணமாவன, எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன. தொல்காப்பியர் அதிகாரம் என்ற பெயர் கொடுத்து, எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று பகுதிகளுள் இலக்கணம் முழுமையும் அடக்கி விட்டார். எழுத்தும் சொல்லும் அப்படியே பிற்கால இலக்கணங்களுள் கொள்ளப் பட்டிருக் கின்றன. ஆனால், பொருள் அதிகாரத்தில் மாறுதல் உண்டு. பொருள் என்பது தமிழுக்குச் சிறப்பான பொருளிலக்கணம். இப்பகுதியினுள் தொல்காப்பியர் அகப்பொருள், புறப்பொருள் என்பவற்றையும், கவிதைக்கு இலக்கியமாகிய பிற பொருள்களையும் அமைத்து வைத்தார். இவர் குறிப்பிட்ட செய்யுளியல் என்பது, பிற்காலத்தில் யாப்பிலக்கண

மாக வளர்ந்தது. உரி இயலிலும், உவம இயலிலும், மரபியலிலும் இவர் குறிப்பிட்டுள்ள கருத்துக்கள் மேலும் விரிவு பெற்றுத் தனியான அணி இலக்கணமாயின. அணி என்ற சொல்லைத் தொல்காப்பியர் சொல்ல வில்லை. பிற்காலத்தில் யாப்பதிகாரம் என்று இறையனார் அகப்பொருள் கூறுகிறது: நூல் இல்லை. இன்னும் பிற்காலத்தில் ஐந்திலக்கணங் களையும் அமைத்துச் செய்யப் பெற்ற வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் ஆகிய நூல்கள் தோன்றின. ஆனால் அவற்றுக்கு ஆட்சி இல்லை. யாப்பும் அணியும் மட்டும் கூறு கின்ற தனி நூல்கள் இன்று வரை சிறப்பான ஆட்சி பெற்றிருக்கின்றன— யாப்பருங்கலக் காரிகை, தண்டியலங்காரம்.

## செய்யுளியல்

இனி, நாம் கருதுகின்ற பிரபந்த இலக்கண வரலாற்றைக் கூறுவதானால், தொல்காப்பியத்திலிருந்து முறையாகத் தொடர்ந்து இலக்கண வரலாற்றைப் பார்க்க வேண்டும். அதன் பொருளதிகாரத்தில் அகத்திணை, புறத்திணை, களவு, கற்பு, பொருள், மெய்ப்பாடு, செய்யுள், உவமம், மரபு என ஒன்பது இயல்கள் உள்ளன. அவற்றுள் அகத்திணை, களவு, கற்பு, பொருள், மெய்ப்பாடு என்ற ஐந்தும் அகப் பொருளைக் குறித்தன. புறத்திணை ஒன்று மட்டும் புறப்பொருளைக் குறித்தது. செய்யுளியல், யாப்பையும் அதை ஒட்டிய பொருளையும் குறித்தது. உவம இயல், மரபியல் இரண்டின் பகுதிகள் அணி இலக்கணமாக வளர்ந்தன. இதனில் உவமானம் மட்டும் கூறுகின்ற ஒரு தனிப்பகுதியும் பின்னர் கிளைத்தது. இங்கு நாம் பிரபந்த இலக்கண வரலாறு ஆராய் வதற்கு, செய்யுளியலின் வளர்ச்சியைத் தொடர வேண்டும்.

செய்யுளியலானது இரு பிரிவுடையது எனக் கருதலாம். ஒன்று யாப்பியல்; மற்றது பாட்டியல். யாப்பியல் என்பது செய்யுளின் பகுதிகளைக் கூறுவது ; யாத்தல்—கட்டுதல். இதனால் இப்பகுதி யாப்பியல் ஆகிறது. இதன் பகுதிகள் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பனவாகும். யாப்பருங்கலம் ஓத்து என்ற பெயர் கொடுத்து இவை ஒவ்வொன்றையும் எழுத்தோத்து அசையோத்து என்பன போல அமைத்து நூற்பாவால் இலக்கணம் வகுக்கிறது ; இறுதியில் செய்யு ளியல், ஒழிபியல் என்ற இலக்கணங்களையும் சேர்த்துத் தனி நூலாகத் தருகிறது. இதன் சுருக்கமாக இதன் ஆசிரியரே யாப்பருங்கலக் காரிகை என மற்றொரு நூலும் கட்டளைக் கலித்துறையால் செய்தார்.

செய்யுளிலக்கணம் உணர்த்துவது செய்யுளியல். அது மாத்திரை, எழுத்து, அசை, சீர், அடி, யாப்பு, மரபு, தூக்கு, தொடை, நோக்கு, பா, அளவு, திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள், துறை, மாட்டு, வண்ணம் என்ற

26 உறுப்புகளைப் பெற்று நடப்பது என்று தொல்காப்பியம் பொருளதிகாரம் செய்யுளியல் முதற் சூத்திரம் கூறும் (313). இவற்றோடு வனப்பு எட்டையும் கூட்டிச் செய்யுட்குறுப்பு 34 என்று பேராசிரியர் எழுதக் காணலாம். செய்யுள் இலக்கணம் 'யாப்பதிகாரம்' என்று பெயர் பெற்றது என்று இறையனார் களவியலுரையால் அறிகிறோம். தொல்காப்பியச் செய்யுளியலின் பின் சுமார் ஆயிரம் ஆண்டு கழித்து, யாப்பருங்கலமும், யாப்பருங்கலக் காரிகையும் செய்யுள் இலக்கணத்தை மிகவும் விரித்துக் கூறுகின்றன; இவற்றின் காலம் பதினோராம் நூற்றாண்டு.

மேற்சொன்ன செய்யுள் உறுப்புக்களில் சில தனிநூல்களாகவும் செய்யப் பெற்றிருந்தன. யாப்பு, செய்யுள் இலக்கணத்துக்கோர் உறுப்பே ஆயினும், செய்யுள் இலக்கணம் முழுவதுக்குமே யாப்பிலக்கணம் என்று பெயர் வழங்கலாயிற்று. மரபு என்று மேலே சொல்லியது, செய்யுளுக்குரிய மரபு என்ற சுருங்கிய பொருள் உடையது. பொருள் இலக்கணத்துக்கு உரிய மரபைத் தொல்காப்பிய மரபியல் கூறும். திணை நூல் என ஒரு நூல் இருந்தது என்றும், கூற்றுக்களை விளக்கும் கூற்றியல் என ஒரு நூல் செயிற்றியனார் செய்தார் என்றும், யாப்பருங்கல விருத்தியாலும், களவியல் உரையாலும் அறிகிறோம். இவை பொருள் இலக்கணத்துக் குரியன. இவை போல, மெய்ப்பாட்டைக் கூறும் மெய்ப்பாட்டியல் (தொல்காப்பியம்) பொருள் இலக்கணத்துக்கு உரியது.

## பாட்டியல்

சங்க காலத்தின் பின் பிரபந்தங்கள் பெருகலாயின. உலகியலில் மக்களின் தலைவர்களாக விளங்கியவர்களை மட்டுமே புகழ்ந்து நூல் செய்கின்ற காலம் சங்க காலம். உதாரணமாக, அக்காலத்திற்கு உரிய பத்துப் பாட்டைப் பார்த்தால், அங்கு ஐந்து ஆற்றுப்படைகள் உள்ளன. முருகு, பொருநாறு, சிறுபாண், பெரும்பாண், கூத்தர் என்பன. இவற்றுள் பிந்திய நான்கும் தலைவர்களையே புகழ்வன. முந்தியதாகிய திருமுருகாற்றுப்படை மட்டும் இறைவனாகிய முருகனைப் புகழ்வது. தெய்வத்தைப் புகழும் நூல் சங்க காலத்தில் மிகவும் அபூர்வம்; இப்பாடலும், பரிபாடலுட் சிலவும் மட்டுமே தெய்வத்தைப் புகழும். மற்றவை யாவும் தனிப் பாடலாகவோ அரசர் அல்லது தலைவரைப் புகழ்வனவாகவோ இருக்கின்றன. பிற்காலத்தில் கடவுளரைப் புகழ்கின்ற பாடல்களே மிக அதிகம். இன்னும் பின்னால் கடவுளரையும், கடவுளை ஒத்த ஆசாரியர், அரசர், வள்ளல் போன்றோரையும் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பலவகைச் சிறுநூல்கள் பாடப் பெற்று வந்தன இந்நூல்களுக்கு இலக்கணம் வரையறுக்கு முகமாகவே பாட்டியல் என்ற பிரபந்த இலக்கண நூல்கள் தோன்றலாயின.

செய்யுளாலாகிய இலக்கியங்கள் எழுந்த பின், அவற்றின் தன்மையை வரையறுத் துரைக்கும் இலக்கண நூல்கள் எழுகின்றன; இவையே பாட்டியலாகும். பாட்டு என்பது இங்கே ஆகு பெயர்; அது இங்கு செய்யுளைக் குறிக்காமல் செய்யுளால் ஆன நூலைக் குறிக்கின்றது; இயல்–இலக்கணம். செய்யுளால் ஆன நூல் பிரபந்தம் எனப்பட்டது. பிரபந்தங்களின் இலக்கணம் கூறும் நூல் பாட்டியலாகும். செய்யுளியல் பாவையும் பாவினத்தையும் கூற, அதாவது பாடலை எப்படிப் பாடுவது என்று தனியாக இலக்கணம் வகுக்க, பாட்டியலானது பிரபந்தங்கள், அவற்றின் இலக்கணம், பாடும் முறை, பாடல் பாடுதற்கு உரியார், பாடல் பெறுதற்கு உரியார், அரங்கேற்றுதல், அவையின் இலக்கணம், பரிசில் அளித்தல், பரிசில் அளியாமையால் வரும் இழிவு முதலான பொருள்களைக் கூறுகின்றது. பாட்டியலுக்கு, கலாவியல், கவியியல், பாவியல் என்ற பெயர்களும் வழங்கின என்று நவநீதப் பாட்டியல் உரையால் அறிகிறோம்.

பாட்டியல் என்பது, பாட்டில் பொருளை அமைக்கும் முறையைக் கூறுகிறது. பாடப்படுவது பாட்டு; பாட்டுக்குரிய பொருத்தத்தையும், பாட்டின் (அதாவது நூலின்) வகையையும், பாடும் முறை முதலிய வற்றையும் கூறுவது பாட்டியல். இது பொதுவாக மூன்று பிரிவுகளை யுடையது: முதல் மொழியியல், செய்யுள் மொழியியல், பொது மொழியியல் என; முதல் மொழியியலாவது பொருத்த இயல்; செய்யுள் மொழியியலாவது பிரபந்த இயல்; பொதுமொழியியலாவது இப்பகுதி களுக்குரிய ஒழிபியல் அல்லது கவிதை மரபியல் என்று சொல்லலாம்.

பாட்டியல் என்பது, தனிநிலையும் தொடர் நிலையுமான செய்யுளிலக்கணங்களை விளக்கிக் கூறுகிற இலக்கண விசேடமாகும். தனிநிலைச் செய்யுளிலக்கணம் கூறுவனவற்றைச் செய்யுளியல் என்றும் தொடர்நிலைச் செய்யுளிலக்கணம் கூறுவனவற்றைப் பாட்டியல் என்றும் வழங்குவதும் உண்டு. தனிநிலைச் செய்யுளிலக்கணம் கூறுவன யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை முதலியனவாம். தொடர்நிலைச் செய்யுளிலக்கணம் கூறுவன பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல் முதலியனவாம். இம்முறையில் சிதம்பரப் பாட்டியல் போன்ற சில பாட்டியல் நூல்கள் தனிநிலையும், தொடர்நிலையுமான செய்யுளிலக்கணம் கூறுவன. தொடர்நிலையாகச் செய்யுள் வரும்போதுதான் நூல் என்று பெயர் பெறுகிறது. தனிநிலையான செய்யுள், நூலானது அருமை; உலா, தூது என்பன எடுத்துக்காட்டு.

## காப்பியம்

தமிழில் முதன் முதலாகப் பாட்டியல் இலக்கண நூல்கள் கி. பி. எட்டாம் நூற்றாண்டின் இறுதியிலும் ஒன்பதாம் நூற்றாண்டின்

தொடக்கத்திலும் தோன்றலாயின. அக்காலத்தில் பேரிலக்கியங்கள் என்று கூறத்தக்க சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை என்பன முன்னமே தோன்றியிருந்தன. இவை ஆசிரியப் பாவால் இயன்றவை. விருத்தப்பாவில் சிந்தாமணி, கம்பராமாயணம், வளையாபதி போன்ற காப்பியங்கள் இனித்தான் தோன்றப் போகின்றன. கல்வெட்டுக்களால் நாம் அறிய வருகின்ற தமிழ்ப் படுத்திய இதிகாசங்களான இராமாயணம், மகாபாரதம் என்பனவும் ஆசிரியப்பாவில்தான் செய்யப் பெற்றிருந்தன; அருமையாக இவற்றுள் வெண்பாவும் உண்டு. (இவை இக்காலத்துக் கிடைக்கப் பெறவில்லை.) இவ்வாறு தோன்றிய இலக்கியங்கள் உறுதிப் பொருள்கள் நான்கையும் சொல்லியதோடு அன்றி, கவிதையில் அழகு படுத்திச் சொல்லத்தக்க எல்லாப் பொருள்களையும் அமைத்துப் பாடி யிருந்தன. இவ்வியல்புகள் பற்றி இவை காப்பியங்கள், என்றும் பெருங்காப்பியங்கள் என்றும் வழங்கப் பெற்றன.

## சிறுகாப்பியம்

காப்பியங்கள் அல்லாத சிறுநூல்களும் மேலே குறிப்பிட்ட காலத்துக்கு முன்னதாக இருந்தன. இவை ஒரு கவிதை அமைப்பு உடையனவாகவும் இருந்தன. சங்க காலத்து நூல்களில் அமைப்பு எதுவுமில்லை. அவை பெரும் பான்மை தனிப்பாடலின் தொகுப்பு ஆகும். பதிற்றுப் பத்தை வேண்டுமானால் ஓர் இலக்கிய அமைப்புடைய தென்று கூறலாம். இது பத்துப் பத்துப் பாடல்களாக அமைந்தது. திருமுருகாற்றுப் படையும், பிற ஆற்றுப் படைகளும் அமைப்புடைய தனிப்பாடல்களே. சங்க காலத்தின் பின், இலக்கிய அமைப்புடைய தனிச் சிறுநூல்கள் பல எழுந்திருந்தன. காரைக்காலம்மையார் பாடிய இரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி, அப்பர் பாடிய திரு அங்க மாலை, சம்பந்தர் பாடிய திரு எழு கூற்றிருக்கை, திருமங்கை யாழ்வார் பாடிய திருமடல், பெரியாழ்வார் பாடிய திருப்பல்லாண்டு, ஆண்டாள் பாடிய திருப்பாவை, சேரமான் பெருமாள் பாடிய பொன் வண்ணத் தந்தாதி, திருக்கயிலாய ஞான உலா, திருவாரூர் மும்மணிக்கோவை ஆகியவற்றைக் குறிப்பிடலாம். விரிவான அமைப்புடையதான பாண்டிக்கோவை என்ற ஒரு கோவை நூலும் அக்காலத்தில் பாடப் பெற்றிருந்தது. இவற்றோடு பதினெண் கீழ்க் கணக்கிலுள்ள நாற்பது முதலாக எண்ணிட்டு முடிகிற நூல்களையும் சேர்க்கலாம். இவற்றுக்குச் சிறுகாப்பியம் என்ற பெயர் சூட்டப் பெற்றது என்று நாம் கருதலாம். இதே காலத்தில் இவ்வாறு அமைந்துள்ள பெருங் காப்பியங்களுக்கும் சிறு காப்பியங்களுக்கும் இலக்கணம் அமைக்க வேண்டுமென்ற உணர்ச்சி தோன்றியிருக்கிறது. இதன் விளைவாய் எழுந்ததே பாட்டியல். பாட்டியலானது நூலின் இலக்கணம் கூறுவது. இத்தகைய சிறுகாப்பியமாகிய நூலையே

பிரபந்தம் என்று குறிப்பிடும் மரபு காலத்தால் பிற்பட்டு எழுந்தது. இதுவரை கூறியதெல்லாம் எட்டாம் நூற்ருண்டு வரையில் நிலவிய நிலை.

## பிரபந்தம்

பிரபந்தம் என்ற சொல் வடமொழி ; செம்மையாக யாக்கப்பட்டது என்பது இதன் பொருள், இக்காலத்தில் இதைச் சிற்றிலக்கியம் என்று சொல்கிருேம். காப்பியங்களைப் பேரிலக்கியும் என்று கருதி, இதனுல் பிரபந்தத்தைச் சிற்றிலக்கியம் என்று சொல்லுகின்ற மரபு[1] புதிதாகப் படைத்துக் கொள்ளப் 'பட்டிருக்கிறது. ஆனுல் இப்புதுச் சொல் அவ்வளவு பொருள் பொதிந்த சொல்லாக இல்லை. பிரபந்தம், நூல் என்ற பொருளில் வைணவ வியாக்கியானங்கள் கூறுகின்றன. அடியார்க்கு நல்லார் காலத்தில் பிரபந்தம் என்ற சொல்லுக்குச் சிற்றிலக்கியம் என்ற பொருள் இல்லை. சிலப்பதிகார அரும்பதஉரைகாரர் அகக் கூத்திற்கு ' கந்த முதலாகப் பிரபந்தம் ஈருக 28 உரு' என்று எழுதுகிருர். அடியார்க்கு நல்லார், ' பிரபந்தம் என்பது அடிவரையறை இன்றிப் பல தாளத்தாற் புணர்ப்பது ' என்று கூறுகிருர். இங்கெல்லாம் பிரபந்தம் என்பது நாடகத்துக்கு உரியதாக வருகின்றது. அடுத்து, தொல்காப்பியச் செய்யுளியலில் விருந்து என்பதற்கு விளக்கமாகப் பேராசிரியர் கூறுவது கருதத்தக்கது: ' புதுவது கிளந்த யாப்பின் மேற்று என்ற தென்னையெனின், புதிதாகத் தாம் வேண்டியவாற்ருற் பல செய்யுளுந் தொடர்ந்து வரச் செய்வது. அது முத்தொள்ளாயிரமும், பொய்கையார் முதலானோர் செய்த அந்தாதிச் செய்யுளுமென உணர்க ; கலம்பகம் முதலாயினவுஞ் சொல்லுப.' இங்கு, பிரபந்தம் என்ற சொல் வராவிட்டாலும் கூட, அந்தாதி கலம்பகம் என்ற பிரபந்தங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. முத்தொள்ளாயிரமும் ஒரு பிரபந்தம் என்றே இவ்வாசிரியர் கருதுகிருர் என்று தெரிகிறது. ஆழ்வார்கள் அருளிச் செய்த அருட்பாசுரங்கள் தொடக்கத்தில் தனித்தனிப் பெயர் கொண்டவையாக இருந்தன. பெரியாழ்வார் திருமொழி, நாச்சியார் திருமொழி, பெருமாள் திருமொழி, பெரிய திருமொழி, திருவாய் மொழி என்றும், திருவந்தாதி, திருமடல் என்றும் இவை வழங்கப் பட்டன. ஆழ்வார்கள் இவ்வருட் பாசுரங்களைப் பாடிச் சிலகாலம் சென்ற பிறகும் கூட, இவை தனித்தனிப் பெயர்களே பெற்றிருந்தன. தொகுப்பான பெயர்கள் இவற்றுக்கு வழங்கவில்லை. ஒன்பதாம் நூற்ருண்டின் இறுதியில் நாதமுனிகள் நம்மாழ்வாருடைய அருளால் ஆழ்வார்

1. இருபதாம் நூற்ருண்டில் பிரபந்தமெதையும் சிற்றிலக்கியம் என்று கூறும் வழக்கத்தைக் காண்கிருேம். பாட்டியல் நூல்கள் பெருங்காப்பியத்தைக் கூடப் பிரபந்த வகையுள் அடக்கிக் கூறுகின்றன. ஆதலால் சிற்றிலக்கியம் என்ற சொல்லாட்சி பொருந்துவதன்று.

அனைவருடைய அருளிச் செயல்களை ஒருசேரப் பெற்றுத் தொகுத்து வைத்த போதுதான் இவற்றுக்குத் திவ்வியப் பிரபந்தம் என்றும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என்றும் தொகுப்பான பெயர் அமையலாயிற்று. நாலாயிரம் என்று கணக்கிடுபவர்கள், முதலாயிரத்தில் பத்துப் பிரபந்தங்கள், இரண்டாமாயிரத்தில் மூன்று பிரபந்தங்கள், மூன்றுமாயிரமாகிய இயற்பாவில் பத்துப் பிரபந்தங்கள், நாலாமாயிரமாகிய திருவாய்மொழி ஒரே பிரபந்தம் ஆக 24 பிரபந்தங்கள் எனக் கணக்கிடவும் காண்கிறோம்.

வைணவம் போலச் சைவத் திருமுறைத் தொகுப்பிலும் சற்றுப் பிற்காலத்தில் (11 ஆம் நூற்றாண்டின் தொடக்கம்) திருமுறைகளைப் பாகுபாடு செய்து தொகுத்த நம்பியாண்டார் நம்பி, தனித்தனியாகக் கிடைத்த சிறுநூல்களையெல்லாம் தொகுத்துப் பதினோராந் திருமுறையாக்கி, அதற்குப் ‘பிரபந்த மாலை’ என்று பெயரிட்டுள்ளமையும் இங்கு அறியத் தக்கது.

## பிரபந்தத் தொகை

பிரபந்தங்கள் எத்தனை என்று ஆன்றோர் கணக்கிட்டிருக்கிறார்கள்; இவை தொண்ணூற்றாறு என்பது தமிழ் வரலாற்றில் ஒரு பழமையான வழக்கு; எனினும், இதற்குப் பழைய ஆதாரம் எதுவும் இல்லை. ‘தொண்ணூற்றாறு கோலப் பிரபந்தங்கள் கொண்ட பிரான்’ என்று படிக்காசுப் புலவர் தம்மை யாதரித்த வள்ளலாகிய சிவந்தெழுந்த பல்லவராயன் மீது பாடிய உலாவில் கூறியிருப்பதாக ஐயரவர்கள் எடுத்துக் காட்டுவர். சிவந்தெழுந்த பல்லவராயன் இறந்தது 1686; 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி; இந்நூல் அச்சாகவில்லை. இன்றுள்ள நூல்களில், பாட்டியல் எதுவும் 96 என்ற எண் வரையறையைக் குறிப்பிடவில்லை. இன்னும் பின்னால் எழுந்த சதுரகராதிதான் இதைக் குறிப்பிடுகிறது. இவ்வகராதி, தம் இறுதிநாளில் கண்ணிழந்திருந்த பெரும்புலவராகிய சுப்பிரதீபக் கவிராயரால் செய்து கொடுக்கப் பெற்று, பெஸ்கி என்ற இயற்பெயருடைய வீரமாமுனிவர் செய்ததாக அச்சிட்டு வழங்குவது. இதனுள், பிரபந்தம் தொண்ணூற்றாறு எனக் குறிப்பிட்டு விளக்கமும் தரப்பட்டுள்ளது. மிகவும் பிற்காலப் பிரபந்தங்கள் பலவும் இதில் சேர்க்கப் பட்டுள்ளன.

சதுரகராதிக்குச் சற்று முன் பின்னாக, குடுமியாமலை சுப்பிரமணிய பாரதியார் என்பவர் செய்த பொருள் தொகை நிகண்டு என்ற தொகைப் பொருள் விளக்கும் நிகண்டில் 96 என்ற எண்ணுக்கு உரிய பொருள்களாகத் தத்துவங்களும் பிரபந்தங்களும் சொல்லப்படுகின்றன. இங்கு பிற்காலப் பிரபந்தங்களும் சேர்த்து 96 வகை கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், 16ஆம் நூற்றுண்டுக் குரியது எனக் கருதத்தக்க பிரபந்த மரபியல் என்ற சிறுநூல், 96 பிரபந்தங்களைக் கூறியிருப்பது இலக்கிய வரலாற்றுச் சிறப்புடையது. பிள்ளைக்கவி முதல் புராணம் ஈருகப் பிரபந்தம் தொண்ணூற்ருறு என இது வரையறுத்துச் சொல்வது காணத்தக்கது :

**பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈருகத்**
**தொண்ணூற் ருறெனும் தொகைய தான**
**முற்பக ரியல்பு முன்னுறக் கிளக்கும்**
**பிரபந்த மரபியல்**

என்பது இதன் முதற் சூத்திரம். முழுமையும் சிதைந்துள்ள இந்நூற் பிரதியால், 96 என்ற எண்ணை வரையறை செய்வது அருமையாயிருந்த போதிலும், இதன் காலப் பழமையால் இலக்கண வரலாற்றில் இது முக்கிய இடம் பெறுகிறது. இது வரையறுத்துக் கூறும் 96 பிரபந்தங்களையும் ஒரட்டவணையாக்கிப் பின்னே காட்டியிருக்கிறோம்.

முதலில் தோன்றிய பாட்டியல் நூல்கள், சொல்லும் பிரபந்தங்கள் எத்தனை என்று கணக்கிட்டுச் சொல்லவில்லை. பிரபந்த மரபியல் தான் தொண்ணூற்ருறு என்று வரையறுத்துச் சொல்கிறது. எவ்வாறு இது இவ்விதம் வரையறுக்க நேர்ந்தது என்பது சொல்ல முடியவில்லை. தத்துவங்கள் தொண்ணூற்ருறு என்ற ஒரு கணக்கு, சைவ சமயத்தில் நெடுங் காலமாக உள்ளது. பிரபந்தமும் தொண்ணூற்ருறு என்ற கருத்தை ஒரு கால் அவை தோற்றுவித்திருக்கலாம். வெண்பாப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல் இன்னும் பின் வந்த இலக்கணப் பாட்டியல் போன்றவை இவ்வெண்ணைச் சொல்லவில்லை. சிலப்பதிகாரம் கனுத்திறம் உரைத்த காதையில், பாசண்டச் சாத்தன் என்றவிடத்து, ‘பாசண்டம்—தொண்ணூற்ருறு வகைச் சாத்திரக் கோவை ; என்னை ?

**பண்ணுற் றிறத்திற் பழுதின்றி மேம்பட்ட**
**தொண்ணூற் றறுவகைக் கோவையும் வல்லவன்**
**விண்ணு றியங்கும் விறலவ ராயினுங்**
**கண்ணுறி நோக்கிக் கடுநகை செய்வான்**

என்ருர் வளையாபதியினுமாதலின், இயற்றிற்கு முதலாயுள்ள சாத்திரங்களைப் பயின்றவன் ’ என்று அடியார்க்கு நல்லார் எழுதுவதும் இங்குக் கருதத்தக்கது.

## பிரபந்த இலக்கணமும் பிரபந்தங்களும்

பின்னே, பிரபந்த இலக்கணம் கூறும் நூல்கள் என்ற தலைப்பில், இன்று நூல் வடிவில் கிடைக்கின்ற பிரபந்த இலக்கண நூல்கள் பற்றிய சுருக்கமான குறிப்பொன்று தந்திருக்கிறோம். அதன்படி, இன்று

கிடைக்கிற பாட்டியல் நூல்களுள் மிகவும் முற்பட்டது பன்னிரு பாட்டியல். இதன் காலம் பத்தாம் நூற்றாண்டு. இதனுள் கூறப்பட்டுள்ள பிரபந்தங்களை ஊன்றி நோக்கும் போது, நமக்கு ஓர் ஐயம் எழுகின்றது. இது கூறும் பிரபந்த வகைகள் 81. காலம் செல்லச் செல்லப் புதிய பிரபந்தங்கள் தோன்றி வளர்கின்றன. ஆகவே, பின் வந்த பாட்டியல் நூல்கள் இதனினும் அதிகமான பிரபந்த வகைகளைச் சொல்வதே இயல்பாகும். ஆனால் உண்மை நிலை இவ்வாறு இல்லை. பன்னிரு பாட்டியலை அடுத்துத் தோன்றிய சிறப்பான பாட்டியல்களான வச்சணந்தி மாலை என்னும் வெண்பாப் பாட்டியலும் (12ஆம் நூற்றாண்டு) நவநீதப் பாட்டியலும் (14ஆம் நூற்றாண்டு) அதை விட மிகவும் குறைவான பிரபந்த வகைகளையே சொல்லுகின்றன. இவ்வாறு குறைவதற்கு என்ன காரணம் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

## பன்னிரு பாட்டியலின் நிலை

இது பற்றிய ஒரு கருத்தைக் கூறுமுன், பன்னிரு பாட்டியல் கூறும் பிரபந்தங்களின் வகையைச் சிறிது பாகுபடுத்திப் பார்க்கலாம்.

1. உண்மையாகவே அப்பாட்டியலுக்கு முன்னும் செய்யப் பெற்றிருந்து பின் வந்தோராலும் கொள்ளப்பெற்ற வகைகள் : ஆற்றுப் படை, இரட்டை மணிமாலை, உலா, ஊசல், கலம்பகம், கோவை, தசாங்கம், நான்மணிமாலை, ஒருபா ஒருபது, மடல், மும்மணிக்கோவை, மெய்க் கீர்த்தி முதலாயின ; வெண்பா அந்தாதி கலித்துறை அந்தாதி.

2. முன் இருந்தும் பின் வந்தோரால் பிரபந்தம் எனக் கொள்ளப் படாதவை: தாண்டகம், பதிகம் முதலாயின.

3. பிரபந்த வகையாகப் பன்னிரு பாட்டியல் குறிப்பிட்டு, பின் வந்த பாட்டியல்கள் குறிப்பிடாதனவான யாப்பு விகற்பங்கள்: ஒரு போகு, மருட்பா.

4. ஷை ; அப்படியே குறிப்பிடப் பெறுதனவான புறத்துறைகள், குடைமங்கலம், இயன் மொழிவாழ்த்து, வாயுறை வாழ்த்து, செவியறி வுறூஉ.

5. பன்னிரு பாட்டியல் குறிப்பிட்ட பிரபந்த வகைகளான சங்க நூல்களும் பிறவும்: பாட்டு (பத்துப்பாட்டு) கீழ்க்கணக்கு (பதினெண் கீழ்க்கணக்கு).

6. எட்டுத்தொகையை மேற்கணக்கென்று கொள்ளுமாறு பன்னிரு பாட்டியல் சூத்திரம் செய்கிறது. ஆனால் தமிழ் இலக்கியப் பரப்பில்

மேற் கணக்கென்ற கூற்று எங்குமே காணப்படவில்லை. பாட்டும் கணக்கும் பிரபந்தவகை என்பதுகூட ஒரு பொருத்தமற்ற கூற்றே யாகும்.

7. பிரபந்தவகைகளாகப் பன்னிருபாட்டியல் குறிப்பிடினும், பின்னால் கலம்பக உறுப்புக்களாகமட்டும் கொள்ளப்பெற்றவை : மறம், குறம்.

8. பன்னிருபாட்டியல் இலக்கணம் கூறியும், அதன் காலத்தில் இல்லாதிருந்து பின்னால் மிக்க சிறப்புடைய பிரபந்த இலக்கியங்களாக வளர்ந்தவை: பரணி, பிள்ளைத்தமிழ்.

9. விறலியாற்றுப்படையை இப் பாட்டியல் கூறுகிறது; ஏனையவை கூறவில்லை. ஆனால் 18ஆம் நூற்றாண்டில்தான் விறலி யாற்றுப்படை என்ற தனிப் பிரபந்தவகை எழுகிறது. இருப்பினும், இப் பெயரில் தனிச் செய்யுள் புறநானூற்றில் இருப்பதும் குறிப்பிடத் தக்கது. சின்னப்பூ என்பது மற்றொன்று; இதை இப்பாட்டியலும் பின் வந்த பாட்டியல்களும் குறிப்பிட்டபோதிலும், 15ஆம் நூற்றாண்டில் தத்துவராயர் செய்த ஒரு பிரபந்தம் தவிர, வேறு எந்தப் பிரபந்தமும் இப் பெயரில் எழவே இல்லை. பல் சந்தமாலை, ஒலியந்தாதி என்ற பிரபந்த வகைகள் இப்பாட்டியலும் பின் வந்தவையும் சொல்லியபோதிலும்; முன்னும் இல்லை, பிற்காலத்தில் தோன்றவும் இல்லை.

10. துயிலெடை நிலை, யாண்டு நிலை என்பவை இவருக்கு முன்னமே தோன்றியிருந்த பள்ளியெழுச்சி பல்லாண்டு என்ற பிரபந்த வகைகளைக் குறிப்பனவாகலாம்.

இந்த நிலைமைகளைச் சிந்திக்கும்போது, பன்னிருபாட்டியலுடையார் கற்பனையாகிய பிரபந்தங்களின் பட்டியலைத் தயாரித்தாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஒன்று, பல பிரபந்த இலக்கணங்கள் இதனுள் இடைச் செருகலாயிருக்கவேண்டும். அல்லது காலக் கண் கொண்டு நோக்கும்போது, இல்லாத இலக்கியத்துக்கு அப்பாட்டியல் ஆசிரியர் இலக்கணம் செய்திருக்கவேண்டும். இவருக்கு முன்னமேயே பள்ளியெழுச்சி, பல்லாண்டு என்ற பெயர்களால் பிரசித்தமாகியிருந்த பிரபந்தங்களை இவர் அப்பெயர்களால் குறிப்பிடவில்லை. துயிலெடை நிலை, யாண்டு நிலை என்று குறிப்பிடுகிறார். இவை புறத்துறைப்பெயர்கள். இவற்றைப் பார்க்கும்போது, இவர் கூறுவது கற்பனையான இலக்கண மென்றே நாம் கருத வேண்டியிருக்கிறது.

மேலும், பன்னிரு பாட்டியலானது, இறந்துபோன பல பாட்டியல் களிலிருந்து கிடைத்த நூற்பாக்களின் தொகுப்பு என்றும் அறிகிறோம். வருங்காலத்தில் நூல் செய்வோர் இன்னநெறியில் இன்னபொருள்

களைப் பாட்டாகப் பாடவேண்டும் என்று முன்னோர் ஒரு நூல் நெறி வகுத்திருந்தார்கள் போலும். அவர்கள் வகுத்துச் சொல்லியிருந்து கிடைத்த நூற்பாக்களைப் பன்னிரு பாட்டியலுடையார் தொகுத்துக் கொண்டார். இது வரலாற்றில் ஒரு விசித்திரமான நிலை. இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்புதல், இலக்கியத்தினின்று எடுபடும் இலக்கணம், இலக்கியம் இன்றேல் இலக்கணம் இன்று என்பதெல்லாம் வரலாற்று நெறி என்பது உண்மை. ஆனால், பன்னிருபாட்டியலின் தோற்றம் இந்த நெறியைக் கடந்திருக்கிறது. அதாவது தோன்றிய நூல் களின் இயல்புகளைச் சொல்வதோடு அமையாது, எதிர்காலத்தில் புது நூல் செய்வோர் இன்ன நெறியில் நூல் செய்யவேண்டும் என்று வழியும் வகுக்கிறது

இப்படியும் ஒரு நிலை இருக்கமுடியுமா என்று நாம் வியப்படைய வேண்டியுள்ளது. ஆனால் இந்த வியப்புக்குரிய நிலையே உண்மை என்று கூறவேண்டும். மற்றுமொரு குறிப்பு. பிற்காலப் பிரபந்தங்களுள், மிகவும் சிறப்பான ஒன்று தூது என்பது. 14ஆம் நூற்றாண்டில் உமாபதிசிவாசாரியர் தம் குருவின் மீது நெஞ்சுவிடுதூது என ஒரு பிரபந்தம் பாடிய காலம் முதல், தூதுப்பிரபந்தம் மிகவும் சிறப்பு வாய்ந்த ஒரு சிறு காப்பியமாக வளர்ந்து விளங்குகிறது. இதைப் பன்னிரு பாட்டியல் சொல்லவில்லை; வச்சணந்திமாலையும் சொல்லவில்லை; இது இயல்பே; இவ்விருபாட்டியல்களும், உமாபதியார் நூலுக்குக் காலத்தால் முற்பட்டவை. இதற்குப் பிற்பட்டதான நவநீதப் பாட்டியலும் தூதைச் சொல்லவில்லை. இது பற்றி மற்றுமொரு நிலையையும் இங்குச் சுட்டிச் செல்லலாம். தனி நூலாக இதைச் சொல்லாவிட்டாலும், வெண்பாப் பாட்டியலானது இதைக் கலம்பகத்தின் 18 உறுப்புக்களில் ஒன்றாகச் சொல்லுகிறது. பன்னிருபாட்டியல் இவ்விதம் சொல்லவில்லை; அது பொருளையும் யாப்பையும் துறையையும் சேர்த்தே கலம்பக உறுப்புக் களாகச் சொல்கிறது. தூது என்ற தனியான ஒரு பிரபந்தத்தை முதன் முதலாகக் குறிப்பிடும் இலக்கணம், இப்போது நாம் கருதும் பிரபந்த மரபியலேயாகும்.

பன்னிரு பாட்டியல் கூறுகின்ற பிரபந்தங்கள் யாவும் முன்னமே இருந்து பிற்காலத்தில் இறந்து போயின என்றும் சிலர் சொல்லக்கூடும்; இருந்தன என்பதற்கு எங்கும் ஆதாரமில்லை.

இதுகாறும் கூறியது, பன்னிரு பாட்டியல் முதலான சில இலக்கண நூல்கள், புதுவதாகச் சிறு காப்பியம் (பிரபந்தம்) இயற்றுபவர்கள் இன்ன நெறியில் தான் செய்யவேண்டும் என்று வரம்பு கோலுகின்றன என்று மட்டுமே கருதவேண்டும் என்பதாகும்.

## அடியார்க்கு நல்லார் கூற்று

அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் பல்வரிக் கூத்து என்ற தலைப்பில் 19 கண்ணி கொண்ட ஒரு நீண்ட கலிவெண்பாவைத் தருகிறார். அதில் நூறு கூத்து வகைகள் சொல்லப்பட்டுள்ளன. வரி என்றமையால் அவை இசையோடு பாடி யாடற்குரியன என்பது தெளிவு. அவற்றுள் பாம்பாட்டி, அம்மனை, பந்து, கழங்காடல், தோள் வீச்சு (தோணோக்கம் போலும்), சாழல், உந்தி போன்ற பல பிற்காலப் பிரபந்தங்களையும் காண்கிறோம். பின்னும் சில கூத்துக்கள் தத்துவ ராயர் பாடல்களிலும், தனிச் சிறு பிரபந்தங்களாகவும் வந்துள்ளன. இவற்றைப் பார்க்கும்போது, அடியார்க்கு நல்லார் கூறும் கூத்து வகைகள், அவர் காலத்துக்கு முன், இக் கலிவெண்பா தோன்றிய காலத்துக்குமுன், தனியான பாடல் தொகுதிகளைப் பெற்றிருந்தன என்று தெரிகிறது. (இக் கலிவெண்பாவை இவரே செய்தும் இருக்கலாம்.) குரவை என்று இவ்வரிக் கூத்து வகையுள் வருவது, இதற்கும் முன் சிலப்பதிகாரத்துள் ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை எனப் பல வடிவங்கள் பெற்றிருப்பதையும் காண்கிறோம். இவ்வகையான அமைப்புடைய பாட்டுக்களைத் தான் பிற்காலத்தில் பெயரிட்டு வழங்கத் தலைப்பட்டோம். ஆதலால் அடியார்க்கு நல்லார் குறிப்பிடும் கூத்துக்கள் பலவற்றுக்கான பாடல்கள், அதாவது பிரபந்தங்கள், முன்னமே இருந்தன என்று அறிகிறோம். பாடல் இல்லாவிட்டால் வரிக் கூத்து இல்லை; இல்லாத வரிக்கூத்தை அடியார்க்கு நல்லார் கற்பித்துச் சொல்ல வில்லை. ஆகவே, பாடல்களாகிய பிரபந்தங்கள் இருந்தன என்பது உறுதி. இவை வாய் மொழியாகவும் இருந்திருக்கலாம்; எழுத்து வடிவமாக எழுதி வைக்கப்பட்டும் இருந்திருக்கலாம்.

## பிரபந்தங்களின் முறைவைப்பு

பொதுவாகப் பாட்டியல் இலக்கணங்களில், பிரபந்தங்களின் வைப்புமுறை பெரிதும் மாறுபடுகிறது. எனினும் எல்லா நூல்களும் பிள்ளைத் தமிழை வைத்தே தொடங்குகின்றன. பிள்ளைப்பருவத்துக்குரிய பாடல்களையே முதலில் வைக்கவேண்டும் என்ற கருத்து எல்லா ஆசிரியருக்கும் உடன்பாடென்பது இதனால் தெளிவாகிறது. பன்னிரு பாட்டியல் மட்டும், பிள்ளைத் தமிழுக்கு முன்னதாக, பிள்ளைக்குச் சாதகம் கணிக்கவேண்டும் என்று கருதி, சாதகம் என்ற ஒரு பிரபந்தத்தை முதலாவதாகத் தொடங்கிப் பிள்ளைத்தமிழை இரண்டாவ தாகக் கூறுகிறது. குழந்தை பற்றிச் சாதகம் எழுதியல்லது வேறு பாடல் தோன்றாது ஆதலாலும், குழந்தைப்பருவத்துக்குரிய பிரபந்த மாகிய பிள்ளைத்தமிழைச் சில ஆசிரியர் முதலில் அமைத்துக் கொண்டாராதலாலும், சாதகத்தை அதற்கும் முன்னதாக அமைத்தார். காலத்தால் மிகவும் பிற்பட்ட பொருள்தொகை நிகண்டு, சதுரகராதியும்

பிரபந்த தீபிகையுமே சாதகத்தைக் கூறுகின்றன. வேறெந்தப் பாட்டியலும், பிரபந்தமரபியலும் கூட, இதைக் கூறவில்லை.

பெரும்பான்மையான பாட்டியல்கள் பரணி, பெருங்காப்பியம் என்று பிரபந்த வரிசையை முடிக்கின்றன. பிரபந்த மரபியல் போன்ற சில, பெருங்காப்பியத்தை அடுத்து, காப்பியம் புராணம் என்று சேர்த்துக் கூறுகின்றன. எழுகூற்றிருக்கை ஒரு பழமையான பாடல்வகை; பிரபந்தமென்று கொள்ளத்தக்கது. ஆனல் பழைய பாட்டியல்கள் இதைக் குறிப்பிடவில்லை; இதை ஒரு சித்திரக்கவி என்று கருதி, விலக்கின போலும்.

பன்னிரு பாட்டியல், உழத்திப்பாட்டு குறத்திப்பாட்டு என்று கூறுகிறது. அது விளக்கிக் கூறும் இலக்கணத்தால் இவை ஒரு கால் பின்வந்த பள்ளு குறவஞ்சி என்பவற்றைக் குறிப்பிடுவனவாகலாம். இவற்றை வேறு எந்தப்பாட்டியலும் குறிப்பிடவில்லை. இவை பிற் காலத்தில் சேர்க்கப்பட்ட இடைச்செருகல்களாகலாம்; அல்லது முன் குறிப்பிட்டபடி, அந்நூலாசிரியர் இந்நெறிகளைப் புதிதாக அமைத்துக் காட்டியிருக்கலாம்.

## நிகண்டுகளும் பாட்டியலும்

ஆதி நிகண்டுகளான திவாகரமும் பிங்கலந்தையும் முறையே ஒன்பது பத்து நூற்றுண்டுகளில் செய்யப்பெற்றவை. பாட்டியல் என்பது பொருளமைதியால், நிகண்டுகளில் சொல்ல வேண்டிய பொருளன்று. எனினும் இவ்விரு நிகண்டுகளும் பாட்டியல்–பிரபந்த வியல்–செய்திகள் பலவற்றை விரிவாகக் கூறுகின்றன. இந்த நிலைக்குக் காலத்தால் ஓர் அமைதி புலப்படுகின்றது. எட்டாம் நூற்றுண்டில் வாழ்ந்த ஓர் அகத்தியர் விரிவான ஒரு புதிய பாட்டியல் நெறி என்ற இலக்கண நெறியைத் தோற்றுவித்தார். அவரிடம் பன்னிரு மாணுக்கர் இருந்தனர். அவர் ஏவவே, அவர்களுள் பலரும் தத்தம் பெயரால் புதிய பாட்டியல் நூல்கள் அமைத்தார்கள். இவ்வமைப்பு ஒன்பதாம் நூற்றுண்டிலும் விரிவாக வளர்ந்தது. இவ்வளர்ச்சியைத் திவாகரர் தமக்கு உடன் காலத்தில் நன்கு கண்டார். கண்டபோது, இவற்றுள் பலவற்றைத் தமது நிகண்டு நூலில் உரிய தலைப்புக்களில் குறிப்பிட்டார். அவர் குறிப்பிட்டவை தாண்டகம், பதிகம், வள்ளைப்பாட்டு என்ற பிரபந்த வகைகள்; காஞ்சி என்ற சொல் அமைந்த பெயருடைய நால் வகைக் காஞ்சிகள்; முதுபாலை, குறுங்கலி, இல்லாண்முல்லை என்ற புறத்துறைகள். இப்பிரபந்தங்கள் அன்றி, செய்யுளிலக்கணப் பகுதிகள் பலவும் திவாகரத்துள் குறிப்பிடப்படுகின்றன.

பிங்கலந்தை இன்னும் விரிவாகப் போகிறது. பிங்கலருடைய காலத்தில் பாட்டியலும் பிரபந்தவியலும் விரிவாக வளர்ந்ததோடு, ஆட்சி பெற்று விளங்கியதையும் அவர் கண்டிருக்கக்கூடும். ஆகவே, அவற்றுட் சிறந்தனவற்றைச் சொல்லா விட்டால் தம் நூல் நிறைவு டையதாக ஆகாது என்று அவர் கருதியிருக்கலாம். தம் நூலுள் பல பொருள்களைக் கூறுகிறார். கூறுபவற்றுட் சில: பொருத்தம் பத்து—நற் கணம், தீக்கணம், எழுத்து, நற்றானம், தீத்தானம், நாள், உண்டி, புள், கன்னல், பெயர், பால், மங்கலச் சொல் என்பன: (இவை முதன் மொழி இயல்). பின் செய்யுள் மொழியாகிய பிரபந்தப் பகுதி—பிள்ளைத் தமிழ் இலக்கணம், அதில் சொல்லத்தக்க காப்புக் கடவுளர்; பின் பொது மொழி இயல்-நாற்சாதிக்கும் உரிய பாவளவு, கவியரங்கேற்ற முறை, பரிசில் பெறாத புலவன் தலைவனுக்குச் செய்யும் வசை ஆகியவை. பொருத் தங்கள், பிள்ளைத் தமிழ் இலக்கணம், அரங்கேற்றம், பரிசில் முதலான பொருள்கள் நிகண்டில் அமையவேண்டியவை அல்ல. இருப்பினும், இந்நிகண்டுகள் இத்தகைய பொருள்களைக் குறிப்பிட்டிருப்பதன் காரணம், தங்கள் காலத்திலும் தங்களுக்கும் சற்று முன்னும் தமிழ் இலக்கிய உலகில் பாட்டியல் எழுதுவதிலும் புதுவகைப் பிரபந்தங்கள் இயற்றுவதிலும் தோன்றிய பெருமுயற்சியைக் கண்டு இவற்றைத் தாங்களும் தங்கள் நிகண்டு நூல்களில் சொல்லிவைக்கவேண்டும் என்று எழுந்த எண்ணமொன்றே.

பிங்கலந்தை தோன்றிய காலம் கி. பி. 900-925 ஆகும். இதே பத்தாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் (975-1000) பன்னிரு பாட்டியல் தொகுத்தவர் தமக்குக் கிடைத்த பாட்டியற் சூத்திரங்கள் அனைத்தையும் ஒரு நூலாகத் தொகுத்துவைத்த செய்தியும் இங்கு நினைவு கூரத்தக்கது. இந்த நூலே கிடைக்கிற பாட்டியல் இலக்கண நூல்களுள் காலத்தால் முந்தியதாகும்.[1]

## பாட்டியல் நெறிகள்

பாட்டியலைக் குறித்த பல செய்திகளை இன்று நாம் அறிவதற்குப் பெருந்துணை செய்பவை இலக்கண உரைகள். இன்று கிடைக்கின்ற பாட்டியல் நூல்களில் காலத்தால் மிகவும் முற்பட்டது பன்னிரு பாட்டியல் 10-ஆம் நூற்றாண்டு. அதற்கு முற்பட்ட பாட்டியல் நூல் எதுவும் இன்று நமக்குக் கிடைக்கவில்லை. எனினும், பின் வந்த பல உரைகளால் 10-ஆம் நூற்றாண்டுக்கு முன் பாட்டியல் நூல்கள் பல இருந்தன என்று நாம் அறிகிறோம். அது மட்டுமல்ல; பாட்டியல்

1. பிங்கலந்தை பன்னிரு பாட்டியல் ஆகிய இருநூல்கள் பற்றிய விரிவான ஆராய்ச்சியை எமது பத்தாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றில் காணலாம்.

நெறிகளே இருவகையாய் இருந்தன என்றும் தெரிகிறது. ஒன்று அகத்தியர் நெறி; மற்றொன்று இந்திரகாளிய நெறி. வெண்பாப் பாட்டியலின் உரையானது நூலின் வழியைக்கூறுமிடத்து, அந்நூல் இந்திரகாளியவழி என்று கூறுகிறது. வழியே யென்பது இன்னதின் வழித்தென்றல். இஃது எந்நூல் வழித்தோ வெனில், இந்திரகாளி யென்னும் பாட்டியன் மரபின் வழித்து.'

அகத்தியர் விரிவான ஒரு பாட்டியல் நெறியைத் தோற்றுவித் திருந்தார். அன்றியும், அவர் ஆணையின்படி மாணாக்கர் பலர் பல பாட்டியல் நூல்கள் செய்தனர் என்று யாப்பருங்கல விருத்தி உரையால் அறிகிறோம். அகத்தியர் பாட்டியலின் வழி எழுந்த பாட்டியல் நூல்கள் நவநீதப் பாட்டியல், சிதம்பரப்பாட்டியல், பிரபந்த மரபியல் முதலாயின. இனி இந்திரகாளியம் யாமளேந்திரர் செய்தது என்று சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரையால் அறிகிறோம். இந்திரகாளியம் யாமளேந்திரர் என்ற பாரசவ முனிவர் செய்த இசை இலக்கண நூல் என்று நல்லார் கூறுகிறார்; இந்நூல் சிலப்பதிகார உரை எழுத அடியார்க்கு நல்லார் கொண்ட ஆதார நூல்களில் ஒன்று. இது இசைக்கு அங்கமாகப் பாட்டியலையும் கூறியது போலும். இப் பாட்டியலின் வழியே அகத்தியர் நெறிக்கு வேறான மற்றொரு பாட்டியல் நெறி தோன்றி வளர்ந்தது. இதன் வழியே எழுந்த நூல் வெண்பாப் பாட்டியல் என்று முன்னமே கண்டோம்.

அவிநயம் என்பது மற்றொரு சிறப்பான இலக்கண நூல். இதற்குத் தண்டலங்கிழான் இராசபவித்திரப் பல்லவதரையன் என்பவர் சிறப்பான உரை செய்திருந்தார் என்று மயிலைநாதர் உரையால் பெறுகிறோம். யாப்பருங்கல உரை இந்நூலை மிகவும் சிறப்பாகக் கூறுகிறது. இதுவும் ஒரு தனி நெறிபோலும்.

இருப்பினும், இந்த நெறிகளில் எழுந்த பண்டைய நூல்கள் ஒன்று கூட நமக்குக் கிடைக்கவில்லை.

## அகத்தியர் பாட்டியல்

தமிழ் இலக்கிய இலக்கணங்களில் நாம் பல வகைப்பட்ட அகத்தியரைச் சந்திக்கிறோம். வடமொழிப் புராணக்கதைகள் சம்பந்தப் பட்டவர் ஒருவர். கயிலாயத்தில் சிவபெருமான் திருமணம் நடந்தபோது, தேவர் அனைவரும் அங்கு திரண்டு வந்தமையால், வடதிசை தாழ்ந்தது; இதனால் தென்திசை உயர்ந்தது; இரண்டையும் சமன் செய்யும் பொருட்டுச் சிவபெருமான் அகத்தியரைத் தென்திசைக்கு அனுப்பினார்; அவர் ஒருவருடைய வலிமையால் தென்திசை அழுந்தும் என்பது கருத்து; வரும்போது அகத்தியர் தென்திசைக்குரிய தமிழ் இலக்கணம்

கூற்றுவந்தார். விந்திய மலையை அடக்கினார்; இவர் மனைவி உலோபா முத்திரை—என்பன புராணக்கதைகள். அகத்தியர் சிவ சந்நிதியில் யாழ் வாசிக்கிறார் என்று சேரமான் பெருமாள் கூறுகிறார். வந்தவர் பொதிய மலையில் தங்கியமையால் பொதியின் முனிவர் எனப்பட்டார்; வடிவில் சிறியவராயிருந்தமையால் குறுமுனி என்னவும் பெற்றார். கடல் கொண்ட தென்மதுரையில் அகத்தியரொருவர் புலவர்களுள் தாமும் ஒருவராய் அமர்ந்து இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழையும் வளர்த்தார்; முத்தமிழுக்கும் இலக்கணம் செய்தார்; இதுபற்றியே 'தமிழெனும் அளப்பரும் சலதி தந்தவன்' என்று கம்பராமாயணம் இவரை உபசாரமாகக்கூறும். இந்த அகத்தியரே தொல்காப்பியருக்கு ஆசிரியர். இவருக்கு மாணாக்கர் பன்னிருவர் என்றும் சொல்வதுண்டு. இவர் செய்த நூல் அகத்தியம். இந்நூல் கடைச்சங்க காலத்துக்கு நெடுங்காலம் முன்னமேயே இறந்து போயிற்று. இதன் பாக்கள் சில இலக்கண இலக்கிய உரைகளுள் பயிலப்பெறும். இவர் செய்த நூல்கள் பேரகத்தியம் சிற்றகத்தியம் என இரண்டு என்றும் சொல்வர்.

அகத்தியர் பாட்டியல் செய்தார் என்ற ஒருவரலாறு எல்லா நூல்களிலும் சொல்லப்படுகிறது. பாட்டியற் செய்திகளை அறிவிக்கும் நூல்கள் மூன்று. பன்னிருபாட்டியல், யாப்பருங்கலவிருத்தியுரை, நவநீதப்பாட்டியலின் பழைய உரை என்பன. இவை எண்ணற்ற பாட்டியல் நூல்களையும் செய்திகளையும் உரைக்கின்றன. அகத்தியர் இலக்கணம் செய்தது மட்டுமன்றித் தம் பெயரால் ஒரு பாட்டியல் செய்தார் என்பதும் இங்குச் சொல்லப்படுகிறது. தானம் பொருத்தம் கூறுமிடத்தில் அகத்தியர் பாட்டியல் சூத்திரங்கள் இரண்டைப் பன்னிருபாட்டியல் கூறுகிறது. முக்கியமாக யாப்பருங்கலவிருத்தியுரையினால் அகத்தியர் ஒரு பாட்டியல் செய்தார் என்பது விளக்கமாகத் தெரிகிறது. ஆனால், அகத்தியர் என்பவர் ஒருவரே என்ற உணர்வுதான் வரலாற்றில் இருந்து வருகிறது. பலவேறு அகத்தியர் பல்வேறு காலங்களில் இருந்து பலவகைப்பட்ட நூல்களைச் செய்திருக்கமுடியும் என்ற உணர்வு இன்மையால், ஆதியில் தென் மதுரைத் தமிழ்ச்சங்கத்திருந்த அகத்தியர் முதல் நேற்று அகத்திய வைத்தியநூல் செய்த அகத்தியர் வரையில், எல்லோரும் ஒருவரே என்ற ஆராய்ச்சியில்லாத கருத்து நிலவி வருகிறது. இதனால் ஆதி அகத்தியரே பாட்டியலும் செய்தார் என்று பண்டை உரையாசிரியரும் கூறியிருக்கிறார்கள். இவை வரலாற்றுணர்வின்மையால் எழுந்த கூற்றாகும். பொதிய மலையில் அகத்திய முனிவர் சித்தராய் இன்னும் வாழ்கிறார் என்று நம்புவோரும் இருக்கிறார்கள் அல்லவா?

---

பேரகத்தியத்திரட்டு என்ற பெயரால் பவானந்தம் பிள்ளை பதிப்பித்த சூத்திரங்கள் பிற்காலத்தன; இவை அகத்தியர் செய்தனவாயிருக்கமுடியாது. அகத்தியம் இரண்டு என்ற கருத்துக்கும் ஆதாரமில்லை. உரைகளில் வரும் அகத்தியச் சூத்திரங்கள் கூட, ற்கால நூலின் பகுதிகளோ என்று எண்ணும்படியுள்ளன.

அகத்தியர் பலர் பல காலங்களில் இருந்தனர்; அல்லது பல காலங்களில் வாழ்ந்து பல வகைப்பட்ட நூல்செய்த பல புலவர்கள் அகத்தியர் என்று பெயர் புனைந்து கொண்டார்கள்; அல்லது தாங்கள் செய்த நூல்களை அகத்தியர் பெயராலேயே செய்து வைத்தார்கள் என்று நாம் கொள்ளவேண்டும்.

இதையொட்டி, நவநீதப் பாட்டியலின் பிந்திய உரையின் கூற்றொன்று இங்கே குறிப்பிடத் தக்கது. "அகத்திய பகவான் முதற்சங்கம் கபாடபுரத்தில் உண்டாக்கிய காலத்தில் சங்கப்பலகை ஏறினவர்கள் நாலாயிரத்துத் தொளாயிரவரும், நடுச்சங்கம் உத்தர மதுரையிலுண்டாக்கிய காலத்தில் சங்கப்பலகை ஏறியவர் நானூற்றுத் தொண்ணூற்றுவரும், கடைச்சங்கம் சிறு மதுரையிலுண்டாக்கிய காலத்தில் சங்கப்பலகை ஏறியவர்கள் நாற்பத்தொன்பதின்மருமாக, முச்சங்கத்திலும் ஏறின புலவர்கள் ஐயாயிரத்து நானூற்று முப்பத்தொன்பதின்மர்களால் ஆராயப்பட்ட இந்தப் பாட்டியல்—." பாட்டியலானது தமிழ்ச்சங்கங்களில் ஆராயப்பட்டதென்பதற்கு இவ்வுரைகாரர் கூற்றையன்றி வேறு ஆதாரமில்லை. இக்கூற்று பிழை. சங்க காலங்களில் பிரபந்தங்கள் விரிவடையவில்லை; அவற்றுக்கு இலக்கணம் தனியே உரைக்கும் நிலையும் எழவில்லை. ஆகவே அப்போது எந்தப் பாட்டியலும் செய்யப்பட்டதில்லை. அகத்தியர் என்ற பெயரைச் சொன்ன மாத்திரத்தில் எல்லோரும் ஒருவரல்லர். பாட்டியல் தொடர்புடையவர் வேறொருவர். நக்கீரர், கபிலர், அவ்வை, பெருந்தேவனார், கல்லாடர் முதலிய பெயர் கொண்டோர் பலர் இருந்தமை போல, அகத்தியர் என்ற பெயரைச் சூட்டிக்கொண்டவர்களும் பலர் இருந்திருக்கின்றனர் எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒருவர் பாட்டியல் செய்தார். பதினான்காம் நூற்றாண்டில் ஓர் அகத்தியர் வாழ்ந்து சிவாலய முனிவருக்காகத் தேவாரத்திரட்டுத் தொகுத்துக்கொடுத்தார். அவர் பெயரால் அத்தொகுப்பு அகத்தியர் தேவாரத்திரட்டு என்று இன்றும் வழங்குகிறது. பிற்காலத்தில் இன்னும் பலர் இருந்து, பல வகையான வைத்திய நூல்கள் செய்தனர்.

நவநீதப் பாட்டியலிலுள்ள மற்றொரு குறிப்பும் இங்கு ஆராயத் தக்கது. 'முத்தமிழையும் உரைத்த குறுமுனியாகிய அகத்திய முனிவர் திருவாக்கில் உண்டாக்கப்பட்ட பருணர் பாட்டியல் என்னும் பரப்பினை விரிந்த நூலுணர் மேதினியோர்க்குப் பயன் படப் பாட்டியலென்று தொகுத்துரைத்தான் .............. நவநீதநடன்' என்பது. அகத்தியர் பாட்டியலுக்குப் பருணர் பாட்டியலென்பது ஒரு பெயரென்று இதனால் தெரிகிறது. இக் கூற்றுக்கு வேறு ஆதாரமில்லை. பன்னிரு பாட்டியலில், அகத்தியர் பாட்டியல் என்ற பெயரால் இரு சூத்திரங்களும் பரணர் பாட்டியல் என்ற பெயரால் பல சூத்திரங்களும் காணப்படுகின்றன. இரண்டும் வெவ்வேறென்றே கருதுதற்குரியன. பருணர்

பாட்டியல் என்பதற்குப் பருணப்பாட்டியல் என்ற பாடபேதமும் உண்டு. நவநீதப் பாட்டியலுரையின் கூற்று மெய்யென்று கொள்வோமானால் அகத்தியர் பாட்டியலே வருணப் பாட்டியல் என்று பெயர் பெற்றிருக்கலாம்; வருணப்பாட்டியலென்றே இலக்கண விளக்கப் பாட்டியலுடையாரும் குறிப்பிடுகிறார். முதன் முதல் பாட்டியல் நெறியில் வருணம் முதலிய அங்கங்களை இவர் கூறினார் என்ற காரணத்தால் இப்பெயர் அகத்தியர் பாட்டியலுக்குப் பொருந்தியிருக்கலாம்.

இனி, ஆனந்தப்பையுள் ஒரு செய்யுட் குற்றம் என்று கூறி, யாப்பருங்கல விருத்தியானது அகத்தியனார் எடுத்தோதிய நூற்பாவொன்றைத் தருகிறது. ஆனந்தக் குற்றத்தைப் பேராசிரியர் குறிப்பிட்டு, அகத்தியனார் செய்த மூன்று தமிழினும் ஆனந்த ஓத்தென்பது அடங்காது என்று கூறியுள்ள குறிப்பால் அவர் கருத்தின்படி ஆனந்த ஓத்துச் சூத்திரம் செய்தவர் அகத்தியர் என்ற பெயருடையவராயிருந்தால் அவர் மூன்று தமிழும் செய்த அகத்தியனார் அல்லர், பிற்காலத்தாரொருவர் என்றாகிறது. இதனாலும் பாட்டியல் செய்தவர் பிற்காலத்தவரே என்ற கருத்து தெளிவாகிறது. அகத்தியரைக் குறித்த இடத்தில் நவநீதப்பாட்டியலுரைகாரர் ஆனந்தக் குற்றங்கள் ஆறைக் குறிப்பிடுகின்ற நூற்பாக்கள் ஆறு தருகிறார். இவற்றையே இலக்கண விளக்கப் பாட்டியலுரையும் குறிப்பிடுகிறது. இவையாவும் சேர்ந்து, பிற்கால அகத்தியரொருவர் இருந்தார்; அவர் பாட்டியல் செய்தார் என்று திட்டமாக உணர்த்துகின்றன.

பொருளதிகாரம் கிடைக்கவில்லை என்று இறையனார் பெரிதும் கவல்கின்ற எட்டாம் நூற்றாண்டில் யாப்பதிகாரம் இருந்தது என்று அவரே சொல்லுகின்றமையால், அந்நூற்றாண்டில் யாப்பு-பாட்டு பற்றிய பெரியதொரு நூல் எழுச்சி இருந்ததென்றும், அக்காலத்தில் ஒரு புலவர் வாழ்ந்து அகத்தியர் என்று பெயர் தரித்துக்கொண்டு பாட்டியல் இலக்கணம் செய்தார் என்றும் கருதுகிறோம். அவருடைய மாணாக்கரால் அந்த நெறி பின்னும் பெருகிற்றென்று தெரிகிறது.

## அகத்தியர் மாணாக்கர்

அகத்தியரின் மாணாக்கர் பன்னிருவர் என்று ஒரு வரலாறு சொல்லப்படுவதுண்டு. அவர்களாவர்: தொல்காப்பியன், அதங்கோட்டாசான், துராலிங்கன், செம்பூட்சேய், வையாபிகன், வாய்ப்பியன், பனம்பாரன், கழாரம்பன், அவிநயன், காக்கைபாடினி, நற்றத்தன், வாமனன், என்போர்.[1] இவர்களிற் சிலர் பாட்டியல் செய்ததாக வரலாறு உண்மையின், இவர்களைக் குறித்துச் சில சொற்கள் சொல்வது அவசியமாகிறது.

1. இக்கூற்றிற்கு ஆதாரம் எதுவும் காணப்படவில்லை. பவானந்தம் பிள்ளையின் தொல்காப்பியப் பொருளதிகாரப் பதிப்பு, பேரகத்தியத் திரட்டுப் பதிப்பு என்பவற்றில் மட்டுமே இப்பெயர்கள் சொல்லப்பட்டுள்ளன.

இவர்களைக் குறித்த பல செய்திகள் உரைகளில் வழங்குகின்றன. அவற்றை முறையாக இங்கு ஆராய்வோம். முதலாவது, பெரிதும் ஒப்புக்கொள்ளக் கூடியது, அதங்கோட்டாசான் தலைமையில் தொல்காப்பியர் பாண்டியன் மாகீர்த்தியின் அவைக்களத்தே தம் நூலை அரங்கேற்றினார் என்பதும் அச்சமயம் பனம்பாரனார் அந்நூலுக்குச் சிறப்புப்பாயிரம் செய்தளித்தார் என்பதும் உரைகாரர் கூறும் வரலாறுகள். இதன்படி, அதங்கோட்டாசானும் பனம்பாரனாரும் தொல்காப்பியர் காலத்தே வாழ்ந்தவர்கள். இவ்விருவருள், அதங்கோட்டாசானைக் குறித்த எச்செய்தியும் தெரிந்திலது. பனம்பாரனார், இச்சிறப்புப் பாயிரமே யன்றி, தம் பெயரால் பனம்பாரம் என்ற ஓர் இலக்கண நூல் செய்திருந்தார்; நன்னூற் பாயிரச்சூத்திரங்களில் இரண்டை 'இவை பனம்பாரம்' என்று மயிலைநாதர் குறிப்பிடுவதால் இதை அறிகிறோம். நன்னூற் பாயிரம் முழுமையும் பவணந்தி முனிவர் பாடவில்லை: பாயிரச் சூத்திரங்கள், பனம்பாரம், பாடலம் முதலான பண்டைய இலக்கணங்களிலிருந்து எடுத்தமைக்கப்பட்டவை; நன்னூலாருக்கு (13ஆம் நூற்றாண்டு) ஆயிரம் ஆண்டுகளுக்குமேல் முற்பட்டிருக்கலாம். இப்பனம்பாரரும் தொல்காப்பியரும் சமகாலத்தவர்கள் என்பதில் ஐயமில்லை.

குறுந்தொகையின் 52ஆம் பாடல் ஒரு பனம்பாரனார் செய்தது. இதனால், இவர் கடைச் சங்ககாலப் புலவர் என்பது தெரிகிறது. தொல்காப்பியத்துக்குப் பனம்பாரனார் சிறப்புப் பாயிரம் செய்தார் என்று காட்டுகின்ற 'வடவேங்கடம் தென் குமரியாயிடை' என்ற பாடல் தொல்காப்பியர் காலமல்ல; மிகவும் பிற்காலத்தில் செய்து சேர்க்கப்பட்டது என்ற ஒரு கருத்து தமிழறிஞரிடை உள்ளது. இக் கருத்தின்படி, பனம்பாரனாரும் அதங்கோட்டாசானும், தொல்காப்பியருக்குச் சமகாலம் அல்ல என்றாகவே, அகத்தியர் மாணாக்கர் தொல்காப்பியர் பனம்பாரர் உள்ளிட்ட பன்னிருவர் என்ற கதையும் போலியாகிறது. எனினும், இப்பனம்பாரர் தம் பெயரால் மயிலைநாதர் குறிப்பிட்ட பனம்பாரம் செய்திருக்கலாம்; குறுந்தொகைப் பாடலும் பாடியிருக்கலாம். ஆனால், இவர் தொல்காப்பியர் காலமல்ல; தொல்காப்பியர், காலத்தால் இன்னும் முற்பட்டிருக்கலாம் என்பது பெறப்படுகிறது.

'அகத்தியர் மாணாக்கர் பன்னிருவருள் சிகண்டி என்னும் அருந்தவ முனி, இடைச் சங்கத்து அநாகுலனென்னும் தெய்வப்பாண்டியன் விசும்பு செல்வோன் திலோத்தமை பால் பெற்ற சாரகுமாரன் என்பவன் இசையறிதற் பொருட்டுச் செய்த இசை நுணுக்கம்' என்று அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் எழுதுகிறார். அகத்தியரின் மாணாக்கரென்று சம்பிரதாயமாய்ச் சொல்லி வரும் பன்னிரு பெயரில் சிகண்டி பெயர் இல்லை. காலம் இடைச் சங்கம் என்றும் இவர் செய்தது இசைத்

தமிழ் என்றும் கூறுவது அறியத்தக்கது இச்சிகண்டி ஒருகால் தொல்காப்பியர், அதங்கோட்டாசான், பனம்பாரர் என்ற மூவருக்கும் உடன் மாணுக்கராயிருந்திருக்கலாம்.

## தொல்காப்பியர் பாட்டியல்

மேற்காட்டியவாறு, எட்டாம் நூற்ருண்டில் வாழ்ந்து பாட்டியல் செய்த அகத்தியர் மாணுக்கரான தொல்காப்பியரொருவர் தம் பெயரால் ஒரு பாட்டியல் செய்தார் என்று தெரிகிறது. அடுத்துக் காட்டிய 'தொல்காப்பியப் புலவோர்' என்ற வெண்பா இதை உணர்த்தும். யாப்பருங்கல விருத்தியுரையானது, பாக்களின் அடி வரையறை உணர்த்துமிடத்து, ஆறு சூத்திரங்களைத் தந்து, 'என்ருர் தொல் காப்பியனுர்' என்று கூறுகிறது. அவற்றுள் முதல் ஐந்தும் தொல் காப்பியம் செய்யுளியலுக்கு உரியன. ஆருவது, 'முடிபொருளில்லா தடியளபிலவே' என்பது. இது தொல்காப்பியத்தில் இல்லை. பொதுவாக, தொல்காப்பியம் முழு நூலாக இன்று கிடைப்பது. தொல்காப்பியத்துள் பாக்கள் எவையும் இறந்தனவாக வரலாறு இல்லை. ஆதலால் இவ்வடி, வேறுமொரு தொல்காப்பியத்துக் குரியதாதல் வேண்டும். தொல் காப்பியர் என்ற பெயரில் வெவ்வேறு புலவர்கள் இருந்தனர் என்ற நினைவு இல்லாமையால், விருத்திகாரர் அந்நூற்பாக்களை ஒருவர் செய்தனவாகவே குறிப்பிட்டார். அன்றியும் நவநீதப்பாட்டியலுரையில்,

> 'மேவிய செய்யுளின் முதற்சீர்க் கண்ணே
> விலங்கின் கதியும் நரக கதியும்
> பாவியல் பாடப் பழியது முடியும்

என்ருர் தொல்காப்பியனுர்' என்று காணப்படுகிறது. இது பாட்டியலின் பொருத்தவியலுள் கதிப்பொருத்தம் பற்றிய நூற்பா. தொல் காப்பியத்துள் பாட்டியலும் இல்லை, பொருத்தவியற் பகுதியும் இல்லை. ஆகவே, இந்நூற்பா இதுவரை கூறிவந்தவாறு, பின்வந்த மற்ருெரு தொல்காப்பியர் செய்தார் என்று நாம் கருதுகின்ற தொல்காப்பியப் பாட்டியல் என்ற நூலுக்கு உரியதாகலாம்.

அகத்தியர் மாணுக்கர் பன்னிருவரும் சேர்ந்து, புறப் பொருள் பன்னிரண்டு கூறுகின்ற பன்னிருபடலம் செய்தார்கள் என்று ஒரு வரலாறு உண்டு. இன்றுள்ள நூல்களிற் புறப் பொருள் வெண்பா மாலை இதை விளங்க உரைக்கிறது. அந்நூல் செய்த ஐயனுரிதனுரைச் சிறப்பிக்கும் சிறப்புப் பாயிரத் தொடக்க வரிகள் பின் வருவன :

> மன்னிய சிறப்பின் வானேர் வேண்டத்
> தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்
> தன்பால் தண்டமிழ் தாவின் றுணர்ந்த.

**துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதற்**
**பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த**
**பன்னிரு படலமும் பழிப்பின் றுணர்ந்தோன்.**

பன்னிருபடலத்தின் வழி, ஐயன்ஆரிதனுர் தமது புறப்பொருள் வெண்பா மாலை செய்தார் என்பது அனைவரும் கூறுவது. அகத்தியர் செய்த நூல் முதனூல்; அதை நன்கு கற்றுத் தொல்காப்பியர் வழிநூல் செய்தார் என்பது ஒரு பழைய கருத்து. தொல்காப்பிய நூல் இருக்க, பல்காயனுரும் காக்கைபாடினியாரும் அதன் வழியே நூல் செய்தனர் என்று யாப்பருங்கலவிருத்திகாரர் ஒரு வெண்பாவைக் காட்டுகிருர்:

**தொல்காப் பியப்புலவோர் தோன்ற விரித்துரைத்தார்**
**பல்காய ஞர்பகுத்துப் பன்னினர்—நல்யாப்புக்**
**கற்ருர் மதிக்கும் கலைக்காக்கைப் பாடினியார்**
**சொற்ருர்தம் நூலுள் தொகுத்து.**

இக்கருத்துக்களை மனத்தில் வாங்கி, பல்காயனுர், தொல்காப்பியா செய்த கருத்தும் சொல்லும் பொருளும் செய்திற்றிலர்; செய்யு ளிலக்கணம் அகத்தியத்துப் பரந்து கிடந்ததனைத் தொல்காப்பியர் சுருங்கச் செய்திருத்தலின் அருமை நோக்கிப் பகுத்துக் கூறினுர்; பிற்காலத்தில் காக்கைபாடினியாரும் அவரோடு பொருந்தவே நூல் செய்தார் என்று பல நிலைகளையும் பொருத்தி எழுதுகிருர். மேலும் ஒன்று; பன்னிருபடலத்துள் வெட்சிப்படலம் தொல்காப்பியர் செய்தார் என்பார் கருத்தை மறுத்து இளம்பூரணர், தொல்காப்பிய வெட்சித் திணை பாடியவர், பன்னிருபடல வெட்சி பாடியிருக்க முடியாது என்று திட்டமாக எழுதுகிருர்.

ஆக, இங்கு பிற்காலத்தில் தொல்காப்பியர் பற்றி வந்த பல கருத்துக்களையும் ஆயும்போது, முன் குறிப்பிட்ட திட்டமான நிலைமை நன்கு விளங்கும். தொல்காப்பியம் செய்த தொல்காப்பியர் பண்டைக் காலத்தவர். அவர் பொருளதிகாரத்தில் செய்யுளியல் செய்தாரே யன்றிப் பாட்டியல் செய்யவில்லை. பிற்காலத்தில் ஓர் அகத்தியர் இருந்தார்—சுமார் எட்டாம் நூற்ருண்டில். இவருடைய மாணுக்கரே தொல்காப்பியர் முதலானேர். இவரும் பிறரும் இக்காலத்தில் புதிதான பாட்டியல் இலக்கண நூல் பல செய்தார்கள். இவர்களுக்குச் சுமார் ஐந்நூறு ஆண்டு பிற்பட்டு வாழ்ந்த பேராசிரியர் காலத்தில் இரு வேறு காலங்களில் வாழ்ந்த இரு வேறு தொல்காப்பியர் என்ற கால உணர்வு மங்கிப்போய், இருவரும் ஒருவராகவே வைத்து எழுதும் குழப்பம் ஏற்பட்டிருந்தது என்று நாம் காண்கிறேம். பாட்டியல்-தொல்காப்பி யருக்கு (எட்டாம் நூற்ருண்டு) முந்நூறு ஆண்டு பிற்பட்டும், பேரா சிரியர் போன்ருருக்கு இருநூறு ஆண்டு முற்பட்டும் வாழ்ந்த இளம்

பூரணருக்குப் பல ஐயங்கள் எழுந்தன. ஆகவேதான் அவர், தொல் காப்பியர் இருவர் என்பதை நினைக்காவிட்டாலும் பன்னிரு படலத்தின் வெட்சிப்படலம் எல்லாரும் சொல்கிறபடி தொல்காப்பியர் (தொல் காப்பியம் பாடியவர்) செய்திருக்க முடியாது என்று திட்டமாய் எழுதினர்.

இந்தக் குழப்பநிலைக்குக் காரணம், எட்டாம் நூற்றுண்டில் எழுந்த பாட்டியல் நூல்களுள் ஒன்றுமே பிற்காலத்தில் கிடைக்காமற் போனமையே. என்ன காரணமோ, எல்லாமே அழிந்து போயின. பன்னிருபாட்டியல் தொகுத்தார், காதில் விழுந்த நூற்பாக்களெல்லா வற்றையும், இவையேனும் இனி இறந்து போகாதிருக்கட்டும் என்று ஒரு நூலாகத் தொகுத்துவைத்தார். இவர் செய்தது பெரிய உபகாரம். யாப்பருங்கல விருத்தியில் உரைகாரர் மிகவும் அதிகமான செய்யுளியற் பகுதிகளை எடுத்துக் காட்டுவதும், சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லார் மிகவும் அதிகமான இசைத்தமிழ், நாடகத்தமிழ் நூல்களை எடுத்துத்தருவதும், இத்தகைய ஓர் உபகார உணர்ச்சியே. அதாவது, இவர்கள் தங்களுக்கு முன்னும், தங்கள் கண்முன்னும் அளவற்ற நூல்கள் இறந்துபோனதைக் கண்டார்கள். தாங்கள் அறிந்தனவேனும் பிற்காலத் தமிழருக்குக் கிடைக்கவேண்டுமே என்ற உபகார உணர்வு தான் இவர்கள் தங்கள் உரைகளில் எண்ணற்ற பண்டை நூற் பகுதிகளை எடுத்துத்தரச் செய்தது.

உரைகளில் வரும் பாட்டியல் சூத்திரங்களை நோக்குமிடத்து அகத்தியர் மாணுக்கர் என்று பெயர் குறிப்பிடப்படும் பன்னிருவருள், அதங்கோட்டாசான், துராலிங்கன், வையாபிகன், கழாரம்பன், வாமனன் என்ற ஐவர் தவிர ஏனையோர் பெயரால் பாட்டியலும் பிற இலக்கணப் பகுதிகளும் குறித்த இலக்கணம் கூறும் நூற்பாக்கள் காணப்படு கின்றன. இவற்றுல் உண்மையில் எட்டாம் நூற்றுண்டில் ஓர் அகத்தியர் பாட்டியலொன்று செய்தார்; அவரிடமே இங்குப் பெயர் கூறிய பன்னிரு மாணுக்கரும் இருந்தார்கள்; இவர்களே பாட்டியல் நூல் செய்தார்கள் என்று உறுதியாய்க் கொள்ள இடமிருக்கிறது. அகத்தியர், தொல்காப்பியர், பனம்பாரர், அதங்கோட்டாசான் என்ற நால்வரும், இக்காலத்துக்கு மிகமுற்பட்ட காலத்திலே வாழ்ந்தார்கள். இத்தொல்காப்பியரே இன்றுள்ள தொல்காப்பியம் செய்தார் ; பனம்பாரர் சிறப்புப்பாயிரமும் பனம்பாரமும் செய்தார் ; பிற்காலத்தில், எட்டாம் நூற்றுண்டில், இந்நான்கு பெயர்களையும் சூடிக்கொண்ட ஆசிரியர் வாழ்ந்தார்கள் ; அவர்களுள் அகத்தியர் பெயரைச் சூட்டிக்கொண்டவர் பிறர் அனைவருக்கும் ஆசிரியர் ; ஏனையோர் மாணுக்கர் என்று நாம் கருதலாம். இம் மாணுக்கர் பலருள்ளும், முன் கூறிய ஐவரும் பனம்பாரரும்

நீங்கலாகப் பிற அறுவரும் தத்தம் பெயரால் இலக்கண நூல் செய்தார்கள் என்று தெரிகிறது. இவற்றைப் பின்னே விளங்கக் குறிப்பிடுவோம். குறிப்பிடுமுன், யாப்பருங்கலவிருத்தியில் காணும் மற்றெரு செய்தி யையும் இங்கு ஆராய்வோம்.

அகத்தியர் பாட்டியல் நூல் செய்யும்படி இம்மாணுக்கருக்கு ஆணையிட்டார் என்று அவ்விருத்தி கூறுகிறது: 'அகத்தியர் ஆணையினுற் செய்யப்பட்ட நூல்களெல்லாம்'; அகத்தியர் ஆணையினுல் இவர் மாணுக்கர் நூல் செய்தார்கள்; அந்நூல்கள் பாட்டியல் இலக்கண நூல்கள் என்பது தெளிவு. இதுமட்டுமன்றிப் பின்வரும் அவ்விருத்தி மேற்கோளும் இக்கருத்தை ஆதரிக்கிறது:

'தகைபெறு பொதியிலெம் தலைவ னுணையில்
தொகைவகை விரிபடச் சொற்ற நூல்களுள்
வகையுளி சேர்த்துதல் வகுப்பர் ஆதலால்
நகைபெற நாலசை நடப்ப தில்லையே.

இதனுலும், பொதியில் தலைவராகிய அகத்தியர் ஆணையின்படி மாணுக்கர் தொகை வகை விரிபட (இலக்கணம்—பாட்டியல்) நூல்கள் செய்தனர் என்பது தெளிவு. இதனை ஆதரிப்பதுபோல, மற்றெரு பாடலும் இங்குக் காணப்பெறுகிறது. யாப்பருங்கல விருத்தியுரையில், செய்யுளுறுப்புக்களைக் கூறுமிடத்து,

தொல்காப் பியப்புலவோர் தோன்ற விரித்துரைத்தார்
பல்காய னுர்பகுத்துப் பன்னினுர்—நல்யாப்புக்
கற்ருர் மதிக்கும் கலைக்காக்கைப் பாடினியார்
சொற்ருர்தம் நூலுள் தொகுத்து.

எனவும் போந்த இவற்றை விரித்துரைத்துக் கொள்க' என்று எழுதுகிருர். இதனுல், தொல்காப்பியர், பல்காயனுர், காக்கை பாடினியார் என்ற மூவர் நூல்களும் தொகைநூல், வகைநூல், விரி நூலாக அமைந்திருந்தன வென்று ஏற்படுகிறது. தொல்காப்பியரும் காக்கைபாடினியாரும் அகத்தியர் மாணுக்கர் என்று சொல்லப் பட்டுள்ளது. ஆதலால் இம்மூவரும் சமகாலத்தினர் என்றும் ஏற்படுகின்றது. எனவே, அகத்தியர் தொல்காப்பியர் பல்காயனுர் காக்கைபாடினி ஆகிய நால்வரும் முன் காட்டியவாறு எட்டாம் நூற்றுண்டில் வாழ்ந்தார்கள் என்பதும் தெளிவாகிறது. இவருள் பிந்திய இருவர் நூற்பாடல்கள் யாப்பருங்கலவிருத்தி பன்னிரு பாட்டியல் முதலான நூல்களில் காணப்படுகின்றன.

## பிரபந்த இலக்கணம் கூறும் நூல்கள் :

### அ. இன்றுள்ளவை

பாட்டியல் (இலக்கண) நூல்கள் பல தோன்றியிருந்தன என்றும், அவற்றுட் பழமையானவை பெரும்பாலன எப்படியோ இறந்துபோக பின்வந்த சில நூல்களே இன்று கிடைப்பன என்றும், முன்னமே குறிப்பிட்டோம். இவ்வாறு முழுமையுமோ ஒருபகுதியோ கிடைப்ப வற்றைக் கால முறைப்படி அட்டவணைப்படுத்திக் கீழே விவரிக்கின் றோம். அவற்றின் பொருளமைப்பு, காலம், ஆசிரியர், உரைகள் முதலான செய்திகள் உடன் சொல்லப்பட்டுள்ளன.*

## பன்னிரு பாட்டியல்

இன்று கிடைக்கும் பாட்டியல் நூல்களுள் காலத்தால் மிகவும் முற்பட்டது; 10ஆம் நூற்றூண்டு. இது ஒரு தொகுப்பு நூல்; நூற்பாவால் ஆனது. தொகுப்பாசிரியர் பெயர் தெரியவில்லை. இவர் காலத்தில் அல்லது அதற்குமுன் இருந்த பாட்டியல் நூல்கள் இறந்து போகவே, இவர் தம் நினைவிலிருந்தும் வேறுவகையாலும் கிடைத்த வற்றையெல்லாம் தொகுத்துவைத்தார். ஒரே பொருள் பற்றிப் பல சூத்திரங்கள் இருப்பது இவ்வெண்ணம் தருகிறது. இங்கு பதினைந்து ஆசிரியர் பெயர்கள் சொல்லப்பட்டுள்ளன; செய்த தனி நூல்கள் ஒன்றும் இல்லை. மேலும், இதனுள் பெயர் சுட்டிய ஆசிரியர் சிலர் நூல் செய்தார்களா என்பது ஐயப்பாட்டுக்கு இடம். அதிகமான நூற்பாக்கள் இந்திர காளியார், கல்லாடர், கோவூர் கிழார். பரணர், பொய்கையார் பெயர்களில் உள்ளன.

செய்யுள் தொகை 360. தனியான சொல்லின் கிழத்தி வணக்கம் முதலில். இவற்றுள் வெண்பா ஒன்று; குறள் வெண்பா 11. ஏனையவை யாவும் நூற்பாக்கள். தொகுப்பாசிரியரே சில செய்யுட் களைச் செய்து சேர்த்திருக்கவும் கூடும். இந்நூல் எழுத்தியல், சொல் லியல், இனவியல் என்ற மூன்று பிரிவுகளாக உள்ளது. எழுத்தியல் ஒன்பது பொருத்தங்களும், சொல்லியல் மூன்று பொருத்தங்களும் கொண்டவை. பன்னிரு ஆசிரியர் செய்து இந்நூல் பன்னிரு பாட்டியல் எனப்பெயர் பெற்றது என்று சொல்வோர் கூற்றுப்பிழை; பன்னிரு பொருத்தங்களைக் கூறுவதால் பன்னிரு பாட்டியல் என்று பெயர் பெற்றது. இனவியல் பல பாவினங்களையும், பிரபந்தங்களையும் கூறு கிறது. இதில் சொல்லப்பட்ட பிரபந்தங்கள் 91. மிகைச் சூத்திரங்கள்

* இங்குச் சொல்லப்பட்ட நூல்கள் பற்றிய விரிவான ஆராய்ச்சியை அந்தந்த நூற்றூண்டுக்குரிய எமது தமிழ் இலக்கிய வரலாற்றில் காணலாம்.

161 நூலில் அச்சிடப்பட்டுள்ளன (மதுரைத் தமிழ்ச்சங்கப் பதிப்பு 1905, 1951). தஞ்சை சரசுவதி மகால் ஏட்டில் 401 சூத்திரங்கள் என்று எண்ணிடப்பட்டுள்ளன.

## வச்சணந்தி மாலை (வெண்பாப் பாட்டியல்)

12ஆம் நூற்றாண்டு. குணவீர பண்டிதர் தம் ஆசிரியரான வச்சணந்தி முனிவர் பெயரைச் சூட்டிச் செய்தது. பாயிரமுள்பட 104 வெண்பாக்களுடையது. முதன்மொழி, செய்யுள், பொதுஇயல் என்ற மூன்று பிரிவுகளையுடையது. வெண்பாக்கள் அந்தாதித் தொடை. இந்நூலாசிரியரின் மாணக்கரே செய்த சிறப்பான உரை இதற்குண்டு. உரையினால் இது இந்திர காளியத்தின் வழியே செய்யப்பட்டது என்று தெரிகிறது. பாட்டியலைப் பயில்கின்ற மரபு இருந்தவரையில் இந்நூலே பிற அனைத்தினும் அதிகமாய் ஆட்சி பெற்றிருந்த நூல். கூறப்பெற்ற பிரபந்தங்களின் தொகை 62. (சென்ற நூற்றாண்டிலேயே இந்நூல் உரையுடன் பலரால் பதிப்பிக்கப் பெற்றிருக்கிறது )

## நவநீதப் பாட்டியல் (கலித்துறைப் பாட்டியல்)

14ஆம் நூற்றாண்டு. நவநீத நடர் என்பவர் இயற்றியது. 108 கட்டளைக் கலித்துறைப் பாடல்களும் பின் சேர்த்த 27 மிகைச் செய்யுட்களும் கொண்டது. முதன்மொழி (பொருத்த) இயல், செய்யுள் மொழி இயல், பொது மொழியியல் என்ற மூன்று பிரிவுகள். இதற்குப் பழமையான இரு வேறு உரைகள் உள்ளன. முதல் உரையானது, இன்று பெயர் தானும் அறியப்படாத பல பாட்டியல் நூல்களையும், நூற்பாக்களையும், செய்திகளையும் கூறுகிறது. மற்றது இதனினும் காலத்தால் பிந்திய உரை. இப்பாட்டியல் அகத்தியர் பாட்டியலின் வழிச் செய்யப்பட்டது. 'அகத்தியர் ஆனந்த வோத்து' என்று உரைகாரர் எடுத்துக் காட்டுகிறார். இதில் கூறப்பட்ட பிரபந்தங்கள் 57. (இதன் முதன் மொழியியல் மட்டும் உரையோடு தனியே பதிப்பிக்கப் பெற்றிருந்தது. பின் வையாபுரிப்பிள்ளை பதிப்பு, புத்துரையுடனும், பல்வகையான சிறப்பு மிக்க அகராதிகளுடனும் 1943; இரண்டு உரைகளுடன் அடையாற்றுப் பதிப்பு 1944.)

## வரையறுத்த பாட்டியல்

14ஆம் நூற்றாண்டு. சம்பந்த முனிவரின் சீடர் செய்தது. இதன் பொருத்தவியல் பகுதி மட்டும் அச்சாகியுள்ளது. கட்டளைக் கலித்துறை, பத்துப் பாடல். அச்சான பகுதி பிரபந்தங்களைச் சொல்லவில்லை. இந்நூல் பற்றி வேறு எச்செய்தியும் தெரியவில்லை.

## பிரபந்த மரபியல்

16ஆம் நூற்றுண்டின் தொடக்கம். இங்கு ஆராய்கின்ற இந் நூல் ஐந்து இயல் கொண்ட பெரிய நூலின் ஒரு பகுதி போலும். இப்போது அச்சிடும் பகுதி 35 நூற்பா வுடையது. முதற் செய்யுளால் இது 96 பிரபந்தங்களையும் சொல்வது என்று கருதலாம். இது அகத்தியர் வழி என்று தெரிகிறது.

## சிதம்பரப் பாட்டியல் (விருத்தப்பாட்டியல்)

16ஆம் நூற்றுண்டின் இடைப்பகுதி. புராணத் திருமலைநாதரின் புதல்வர் பரஞ்சோதி இயற்றியது. ஆசிரியர் தில்லை நடராசப் பெருமானிடத்துப் பக்தி மிக்கவர்; முதற்செய்யுளில் அவருக்கு வணக்கம் கூறுகிறுர்; இதுபற்றியே நூல் இப்பெயர் பெற்றது போலும். எண்சீர் ஆசிரிய விருத்தப் பாவால் ஆனமையால் விருத்தப் பாட்டியல் என்றும் சொல்வதுண்டு. நூலமைப்பினுலும், கருத்து, தொடர், சொற்களாலும், இது பிரபந்த மரபியலை அடியொற்றிச் செய்யப் பெற்றதென்று சொல்லலாம். அந்தாதித்தொடை. கடைசி இரு செய்யுட்களால் இவர் அகத்தியர் பாட்டியல் வழித் தம் நூலைச் செய்தார் என்று தெரிகிறது. 47 பாடல்கள்; உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல், பொருத்த இயல் மரபியல் என ஐந்து பகுதிகள். பொதுவாய்ப் பாட்டியல்களில் உறுப்பியலும் செய்யுளியலும் இருக்க மாட்டா; முன்னே குறிப்பிட்டது போல, இது தனிநிலைச் செய்யுள் இலக்கணமாகிய செய்யுளியலும், தொடர் நிலைச் செய்யுளிலக்கணமாகிய பாட்டியலும் கொண்டிருக்கிறது. முதல் மூன்று இயல்களுக்கும் ஆசிரியரே செய்த சிறப்பான உரை உண்டு. பொருத்தவியல், மரபியல் இரண்டுக்கும் உரை இல்லை. மரபியல் என்பதே முந்திய நூலின் தழுவலாகிய பிரபந்த மரபு கூறும் பகுதி. இதன் உரை மேற்கோட் செய்யுட்கள் யாவும் முந்தைய யாப்பருங்கலம், தொல்காப்பியம் உரைகளிற் கண்டவைகளே. இது கூறும் பிரபந்தங்ளின் தொகை 88 (மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்பு 1932).

## இலக்கண விளக்கப் பாட்டியல்

17 ஆம் நூற்றுண்டு. இலக்கண விளக்கம் பாடிய வைத்திய நாத தேசிகர் புதல்வர் தியாகராச தேசிகர் பாடியதென்று சிறப்புப்பாயிரம் கூறும். நூற்பா 181 கொண்டது. அவரே செய்த உரை. பிரபந்தங்கள் 77. (இருமுறை அச்சாகியுள்ளது.) இது பிள்ளைத்தமிழ் முதல் பெருங் காப்பியம், காப்பியம் ஈருகத் தொடர்நிலைச் செய்யுள் 55 என்றும், வளமடல் முதல் மஞ்சரி ஈருகத் தனிநிலைச் செய்யுள் 22 என்றும் பிரித்துக் கூறுகிறது. பிற பாட்டியல்கள் இவ்வாறு பிரித்துக் கூற வில்லை. பிரபந்த அமைப்பில் இது வெண்பாப் பாட்டியலைத் தழுவிய தாகத் தெரிகிறது.

## பிரபந்தத் திரட்டு

தொண்ணூற்ருறு பிரபந்தங்களின் இலக்கணங்களையும் விரிவாகக் கூறும் நூலொன்று இப் பெயரில் இருந்திருக்கிறது. இதில் திரட்டியல், புறனடையியல், கருப்பொருளியல் பொருத்தவியல், உவமாருட வியப்புசார்வியல், விசேட வணி வியப்பு சார்வோரியல், சாதிமரபு சார் வோரியல், குலநிலவியப்பு சார்வோரியல், தொழிலியல், கொடையியல் என்னும் பத்து இயல்கள் உள்ளன ; வெண்பாவும் விருத்தமுமாக இதில் 525 பாக்கள் உள்ளன. 96 பிரபந்தங்களைச் சொல்வதாகத் தொடங்கி, இறுதியில் 96ஐயும் தனியே தொகுத்துக் காட்டவும் பெற்றிருக்கிறது. சாதகம் பிள்ளைத்தமிழ் என்றே நூல் தொடங்குகிறது. ஆனுல் இது கூறும் பிரபந்தங்கள் பண்டை இலக்கணங்களில் சொல்லப்பட்டவை யல்ல ; அவற்றுட் பலவற்றையும் மிகவும் பிற்காலப் பிரபந்தங்கள் பல வற்றையும் சேர்த்தே இது 96 என்று முடித்துக் காட்டுகிறது. பெயர் பிரபந்தத் திரட்டு என்று இருந்தபோதிலும் கூட, இது பாட்டியல் நூல் களில் கூறுகிற பொருத்தம் முதலான பிற பொருள்கள் பலவும் கூறு கின்றது ; இதன் பொருட் பாகுபாடு இதை விளக்கமாய்க் காட்டும். (திருவான்மியூர் டாக்டர் சாமிநாதையர் நூல் நிலைய ஏடு.)

## பிரபந்த தீபம்

இது 18ஆம் நூற்ருண்டு போலும். ஐயரவர்கள் தம் பதிப்புக் களில் இதன் பாடல்களை எடுத்து மேற்கோள் தந்திருக்கிருர்கள். நூற்பா ; அச்சாகாமையால் வேறு செய்திகள் அறிய இயலவில்லை.

## பிரபந்த தீபிகை

18ஆம் நூற்ருண்டின் இறுதி. வேம்பத்தூர் வேங்கடசுப்புப் பாரதி பாடியது. 26 நீண்ட ஆசிரிய விருத்தப் பாடல்கள் ; அபூர்த்தி; 82 பிரபந்தங்கள். (செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளிவந்தது.)

## சதுரகராதி

இது 18 ஆம் நூற்ருண்டின் தொடக்கத்தில் பெஸ்கி என்ற வீரமா முனிவர் பெயரால் வெளிவந்தது. செய்து தந்தவர் கண்ணிழந்தவரான சுப்பிரதீபக் கவிராயர். பெயரகராதி, பொருளகராதி, தொகையகராதி, தொடையகராதி என்ற நான்கில் தொகையகராதியில் 96 என்ற எண்ணுக்கு விளக்கமாக ஆசிரியர் இரு பொருள்களை உரைக்கிருர். ஒன்று 96 தத்துவங்கள். மற்றது 96 பிரபந்தங்கள். கவிராயர் இங்கு இலக்கண விளக்கப் பாட்டியலைப் பின்பற்றியே பிரபந்தங்களையும் அவற்றின் விளக்கத்தையும் சொல்லுகிருர்.

## பாட்டியல் எழுதப் பெற்ற யாப்பு

பாட்டியல் இலக்கண நூல் வளர்ச்சியில் ஒரு யாப்பு நெறியைக் காண முடிகிறது. முதலில் தோன்றியது நூற்பா யாப்பு; இன்று கிடைக்கும் பாட்டியல் நூல்களில் பழமையானது பன்னிரு பாட்டியல். இது நூற்பா (சிறுபான்மை 11 குறள் வெண்பாக்களும் ஒரு வெண்பாவும் இதில் உள்ளன) அடுத்தது வெண்பா யாப்பு—வெண்பாப் பாட்டியல் என்னும் வச்சணந்தி மாலை. பின் வந்தது கட்டளைக் கலித்துறை—கலித்துறைப் பாட்டியல் என்னும் நவநீதப் பாட்டியல், வரையறுத்த பாட்டியல் என்பன. இறுதியாக விருத்தப்பா—சிதம்பரப் பாட்டியல். இவ்விதமான ஒரு யாப்பு நெறியைப் பாட்டியலில் மட்டுமன்றி, நிகண்டு, உவமான சங்கிரகம் முதலான வேறு இலக்கணத் துறைகளிலும் காண முடிகிறது. இந்த நிலைமை 10–16 நூற்றாண்டு களில் உள்ளது. இக்காலத்தின் பின் இந்த யாப்பு முறை வழங்கவில்லை. நூற்பா முதல் விருத்தம் வரை வந்து வளர்ச்சி முற்றிய பிறகு தோன்றிய நூல்கள் பல்வேறு யாப்புக்களிலும் அமைந்திருக்கும்.

ஒன்பதாம் நூற்றாண்டு வரையிலும் பாட்டியல் நூல்கள் நூற்பா, குறட்பா, கலிவிருத்தம் முதலான யாப்புக்களில் செய்யப் பெற்றிருந்தன என்று தெரிகிறது. ஆனால் 10ஆம் நூற்றாண்டு முதல் அவற்றின் அமைப்பில் முறையான ஒரு வளர்ச்சியைக் காண்கிறோம். அதைப் பின்வருமாறு அட்டவணைப் படுத்திக் காட்டலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | பன்னிரு பாட்டியல் | நூற்பா | 10 | ஆம் | நூற்றாண்டு |
| 2. | வச்சணந்தி மாலை | வெண்பா | 12 | ,, | ,, |
| 3. | நவநீதப் பாட்டியல் | கட்டளைக் கலித்துறை | 14 | ,, | ,, |
| 4. | சிதம்பரப் பாட்டியல் | விருத்தம் | 16 | ,, | ,, |
| | [பிரபந்தமரபியல் | நூற்பா | 16 | ,, | ,,] |

## ஆ. இறந்துபோனவை

யாப்பருங்கல விருத்தியும் நவநீதப் பாட்டிய லுரையும் குறிப்பிடும் பாட்டியல் நூல்களை இங்குக் குறிப்பிடுகிறோம்; இவற்றுள் ஒன்றும் இப்போது இல்லை.

## செய்யுள் வகைமை

நவநீதப் பாட்டியலுரை இதன் பாடல்கள் பத்தைத் தருகிறது. இவை பிள்ளைத்தமிழ், கலம்பகம், மும்மணிக்கோவை, மும்மணி மாலை, நான்மணிமாலை, கைக்கிளை, இசைச்செய்யுள் என்ற பிரபந்தப் பொருள் களையும், வெற்றி தோல்வி, செய்யுள் செய்யத் தகாதவர், பரிசில் நல்காதவர் என்ற பொருள்களையும் கூறுகின்றன. ஆதலின் இது

பிரபந்த இலக்கணம் முழுமையும் கூறுகின்ற நூல் என்பது நன்கு தெளிவு. இது பற்றிய வேறெச் செய்தியும் கிடைக்கவில்லை.

## திணை நூல்

இது செய்யுளுக்குத் திணை முதலியன கூறித் தனியே எழுந்த இலக்கணப் பகுதி போலும். பொருளிலக்கணத்துட் கூறப்படும் திணை வேறு. செய்யுளுக்கு வருணம் முதலியன சொல்வது ஒரு மரபாக யாப்பிலக்கணம் விரிவடைந்தபோது கொள்ளப்பட்டது. "இவற்றுக்கு (செய்யுட்கு) நிறமும் திணையும் பூவும் சாந்தும் புகையும் பண்ணும் திறனும் இருதுவும் திங்களும் நாளும் பக்கமும் கிழமையும் பொழுதும் கோளும் இராசியும் தெய்வமும் திசையும் மந்திரமும் பண்டிலமும் பொறியும் எழுத்து முதலாகிய பண்பும் அறிந்து ஆராதிப்ப அவை யாவர்க்கும் கல்வியும் புலமையு மாக்கி நன்மை பயக்கும். இவையெல்லாம் திணை நூலுள்ளும் பிறவற்றுள்ளும் கண்டு கொள்க. அவற்றுட் சில வருமாறு :

**வெண்பா முதலாக வேதிய ராதியா**
**மண்பால் வகுத்த வருணமாம்—ஒண்பா**
**வினங்கட்கும் இவ்வாறே என்றுரைப்பர் தொன்னூல்**
**மனந்தட்பக் கற்றோர் மகிழ்ந்து."**

இவ்வாறு யாப்பருங்கல விருத்தி பத்துப் பாடல்களைத் தருகிறது. இவை வருணம் இராசி நாள் நிறம் சாந்து மருட்பா எழுத்து என்ற பொருள்களைச் சொல்லுகின்றன. இவை யாவும் திணை நூலென்றே கருத இடமுண்டு. மருட்பாவைக் குறித்த பாடலை மட்டும் எடுத்துக் காட்டாகக் கீழே தருகிறோம் :

**வேதவாய் மேன்மகனும் வேந்தன் மடமகளும்**
**நீதியாற் சேர்ந்து நிகழ்ந்த நெடுங்குலம்போல்**
**ஆதிசால் பாவும் அரசன் வியன்பாவும்**
**ஓதியவா றொன்றி மருட்பாவா யோங்கியதே.**

மருட்பா, கைக்கிளைக் குரிய பாவா யிருப்பினும், தனிப் பிரபந்தமாகவே பன்னிரு பாட்டியல் கூறுகிறது. ஆகவே இதை விளக்கும் திணை நூல் ஏனைய பிரபந்தங்களையும் விளக்குதல் கூடும்.

## திருப்பிரவாசிரியர் தூக்கியல்

இப்பெயர் கொண்ட ஒரு நூலை நவநீதப் பாட்டியலுரை எடுத்துத் தருகிறது. இந்நூற்பா, பரிசில் நீட்டித்தால் வருங் குற்றத்தைக் கூறுகிறது *(104)*:

**பாடிய செய்யுட் பலநாட் கிடப்பினும்**
**கேடென மொழிப கேட்போர் தமக்கே.**

நூலின் பெயர் தூக்கியல் ஆனமையால், இது 'செய்யுள் உறுப்புக்கள் 26 இல் ஒன்ருகிய தூக்கு என்பதைப் பற்றி மட்டும் கூறுவது போலும். இவ்வுறுப்புக்களைத் தொல்காப்பியம் செய்யுளியல் முதல் சூத்திரம் சொல்லுகிறது. தூக்கு என்பது பாக்களைத் துணிந்து நிறுத்தல் என்பது பேராசிரியர் கருத்து. திணை நூல், செயிற்றியஞர் கூற்றியல் என்பவை எழுந்திருந்தமை போல, தூக்கியலும் இவ்வுறுப்பைக் குறித்த தனி இலக்கணப்பகுதி போலும்.

இந்நூலாசிரியர் பெயர் விளக்கமாயில்லை. திருப்பிரவாசிரியர் என்ற பெயர் பொருள் தரவில்லை. ஒருகால் இது திருப்பெயராசிரியர் என்றிருக்கலாம். (திரு என்ற பெயர் அமைந்த ஆசிரியர் என்பது பொருள்). மேலும் நவநீதப் பாட்டியலுள் இரண்டிடங்களில் இப்பெயர் மேற்கோட் பாடலுள் வருகிறது. ஒன்று (52):

**இளைய மகளிர நியம்பின என்பது**
**திருவின வாசிரியர் தூக்கிய லாகலின்.**

இது தாரகைமாலை முதலிய பிரபந்த வகைகளைக் கூறுமிடம். இந்நூற்பா செய்தவர் யார் என்பது சொல்லவில்லை. மற்ருேரிடம் (83) கல்லாடம் என்ற பெயரில் வருகிறது.

**திருவினு சிரியர் தூக்கிய லுரைத்தன**
**யாவையும் இயற்பெயர்க் கல்லது**
**பொருத்தம் வேண்டார் புலமை யோரே.**

இது கல்லாடர் கலாவியல் என்ற பாட்டியல் நூலுக் குரியது. இவ்விரு மேற்கோட் பகுதிகளாலும் அவ்வாசிரியர் பெயர் திருவின் ஆசிரியர் (இது திருப் பெயராசிரியர் ஆகும்) என்றும், இந்நூற் பெயர் தூக்கியல் என்றும் அறிகிருேம். மேலும் இங்கு கல்லாடரும் மற்ருேர் ஆசிரியரும் தூக்கியலின் கூற்றை எடுத்து மேற்கோளாய்க் குறிப்பிடுவதால், அந்நூல் ஒரு சிறந்த பிரமாண நூல் என்றும் நாம் கருதலாம். அன்றியும் அது கல்லாடர் பாட்டியலுக்குக் காலத்தால் முற்பட்டது என்பதும் பெறுகிருேம். நூல் இப்போது இல்லை. வேறெங்கும் இதைச் சொல்லவில்லை.

## பாட்டியல் மரபு

இந்நூற் பெயரை யாப்பருங்கல விருத்தி கூறுகிறது. மரபு என்று இங்கு வரும் நூற்பெயர் இவ்வாறு வரும் பிற நூற்பெயர்களோடு ஒப்பு நோக்கத்தக்கது. பெயரிஞலேயே இது பாட்டியலுக்குரிய மரபை உணர்த்தும் என்று கருதலாம். ஆரிடச்செய்யுளைக் குறிப்பிட்ட இடத்து, அவ்விருத்தி இதன் செய்யுள் மூன்றைத் தருகிறது: ஆரிடம் என்பது எது, பாடுதற்குரியோர் யாவர் என்பதைப் பாடல்கள் கூறு

கின்றன. தொல்காப்பிய மரபியலுரையில் பேராசிரியர் (109) 'நின்று பயனின்மை' என்னும் குற்றத்துக்கு விளக்கம் சொல்லி, 'பாட்டியன் மரபு எனக் காட்டுவனவும் அவை' என்று எழுதுகிறார். அவர் கருத்தின்படி இவ்வகை நூல்கள் சான்றோர் செய்யுட்குப் பயன்படா என்பதாகும். யாப்பருங்கல விருத்திகாரர் தாண்டகத்தைச் சொல்லிய விடத்து, 'பாட்டியன் மரபு, மாபுராணம் முதலிய தமிழ்நூலுள்ளும் புகுதி யுடையார்வாய்க் கேட்டுக்கொள்க' என்றெழுதுகிறார். அவர் இங்குக் குறிப்பிடுவது செய்யுளிலக்கணமே யாயினும், பன்னிரு பாட்டியல் தாண்டகம் ஒரு பிரபந்தம் என்று குறிப்பிடுவதால், பாட்டியல் மரபு பிரபந்த இலக்கணமும் கூறிய நூலாயிருக்கலாம்.

'விருந்தேதானும்' என்ற தொல்காப்பியச் சூத்திரத்துக்கு நச்சினார்க் கினியர் கூறிய உரையைப் பின்னே குறிப்பிடுகிறோம். அதில், முத்தொள்ளாயிரமும் பின்னுள்ளார் பாட்டியன் மரபிற்கூறிய கலம்பகச் செய்யுளும் என்று வருகின்றமையால், பாட்டியல் மரபு என்ற நூலின் காலம் முத்தொள்ளாயிரத்துக்குப் பிற்பட்டதென்று முடிவு செய்யலாம்; அது எட்டாம் நூற்றாண்டு என்று தெரிகின்றமையின், பாட்டியல் மரபு ஒன்பதாம் நூற்றாண்டுக் குரியதா யிருக்கலாம்.

## மாமூலர் பாடிய மாமூலம்

மாமூலர் என்பவர் மாமூலம் என்ற ஒரு பாட்டியல் நூல் செய்தார் என்று நவநீதப் பாட்டியல் உரையால் அறிகிறோம். மாமூலம் என்ற பெயரால் இங்கும் பத்து நூற்பாக்கள் காணப்படுகின்றன. இவை எழுத்துப் பொருத்தத்தில் முதற் சீருக்குரிய குற்றம், தானப்பொருத்தம், கணப்பொருத்தம், கலம்பகத்தின் செய்யுள் தொகை, அந்தணர் முதலி யோருக்குரிய சித்திரச் செய்யுளுக்கு ஆவதோர் நெறி; இசைச் செய்யுள் திறம், கவி கமகன் வாதி வாக்கி என்ற நால்வகைக் கவிஞர் இலக்கணம் என்ற பொருள்களைக் கூறுகின்றன. இவற்றுள் கவி என்ற முதற் பகுதி இறந்து போயிற்று. இவ்வாறு நாம் பார்க்கும் பொருள்கள் பொருத்தவியல், இனவியல் என்னும் பிரபந்தவியல், பொதுவியல் ஆகிய மூன்றுக்கும் உரியன என்பதைக் காணலாம். எனவே, மாமூலம் என்பது ஒரு முழுப் பாட்டியல் நூலாய் இருத்தல் கூடும். இந்நூல் கிடைக்கவில்லை. பன்னிரு பாட்டியலில் இதன் பெயர் காணப்படவில்லை. தானப்பொருத்தம் கணப்பொருத்தம் கூறுகின்ற இரு நூற்பாக்களை மாமூலம் என்று பெயர் குறிப்பிட்டு இலக்கண விளக்கப் பாட்டியலுரை தருகிறது; கணப்பொருத்தத்துக்குரிய நூற்பா எட்டு அடிகளைக் கொண்டது. யாப்பருங்கல விருத்தியில் ஆகவும் கெட வும் பாடவல்லோர் வரிசையில் கபிலர் பரணர் கல்லாடர் மாமூலர் என்று இவர் பெயரும் சேர்த்துச் சொல்லப்பட்டுள்ளது.

மாமூலர் என்ற பெயரில் ஒரு சங்கப்புலவர் இருந்திருக்கிறார். அவர் அகநானூறு குறுந்தொகை நற்றிணை ஆகியவற்றில் 30 பாடல்கள் பாடியிருக்கிறார்; அகநானூறு 27, குறுந்தொகை 1; இவை யாவும் பாலை; நற்றிணையில் பாலை 1, குறிஞ்சி 1. இவர் வேறு பாட்டியல் பாடிய மாமூலர் வேறு; பிந்தியவர், பாட்டியல் அகத்தியரின் காலமாகிய 8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருக்கக் கூடும்.

## முள்ளியார் கவித்தொகை

முள்ளியார் என்பவர் செய்த பாட்டியல் நூலாகும். இதன் பாடல்கள் எட்டு நவநீதப் பாட்டியல் உரையில் தரப்பட்டுள்ளன. கலம்பகத்துக்குரிய செய்யுள் தொகை, பல்சந்தமாலை, சின்னப்பூ, தசாங்கம், புகழ்ச்சிமாலை என்ற பொருள்களை இவை கூறுகின்றன. இவற்றால் இந்நூல் பிரபந்தங்களை மட்டும் கூறுகின்ற சிறு இலக்கண நூல் என்று தெரிகிறது.

பெருவாயில் என்ற ஊரில் வாழ்ந்த ஒரு முள்ளியார் பதினெண் கீழ்க்கணக்கினுள் ஒன்றான ஆசாரக்கோவை என்ற சிறப்பான நூலைப் பாடியிருப்பது நன்கறிந்த செய்தி. இவர் காலமும் பாட்டியல் முள்ளியார் காலமும் ஒன்றே.—எட்டாம் நூற்றாண்டு. இருவரும் ஒருவரே என்று முடிவு செய்வதற்குத் தக்க ஆதாரம் இல்லை.

பன்னிரு பாட்டியலில் தொகுக்கப் பெற்ற சூத்திரங்களால் 15 ஆசிரியர் பாட்டியல்கள் தெரியவருகின்றன. அவர்களுள் பின்வரும் எழுவரும் பிரபந்த இலக்கணம் கூறும் நூற்பாக்களை அங்குச் செய்திருக்கிறார்கள்.

## கோவூர்கிழார்

இவர் சங்கப்புலவர்; குறுந்தொகையில் ஒரு பாடலும், நற்றிணையில் ஒன்றும், புறநானூற்றில் 15 பாடல்களும் பாடியிருக்கிறார். பன்னிரு பாட்டியலில் இவர் பாடியவை 53 நூற்பாக்கள். இவ்வாறு இலக்கியம் இலக்கணம் இரண்டும் பாடியோர் வெவ்வேறு புலவராவர்.

## சீத்தலையார்

மங்கலவெள்ளை, தாண்டகம் என்ற இரு பிரபந்தங்களையும் இவர் குறிப்பிடுகிறார். சீத்தலைச் சாத்தனார் என்று இவரைச் சொல்லும் அவசியமில்லை.

## சேந்தம் பூதனார்

இவர் பல பிரபந்தங்களைக் குறிப்பிடுகிறார். சீர்க்கணத்தையும் கூறுகிறார். இவர் வேறு, சங்க நூல்களில் 7 பாடல் பாடிய சேந்தம் பூதனார் வேறு.

## நற்றத்தனார்

இவர் எட்டாம் நூற்றாண்டு, அகத்தியர் மாணாக்கருள் ஒருவர். வேந்தன் குடைமங்கலம், ஒருபோகு ஆகியவற்றைக் கூறுகிறார்; ஒரு சூத்திரம் மட்டும் வெண்பா. செய்யுளிலக்கணமும் விரிவாகச் செய்தார் போலும். பல நூற்பாக்களை யாப்பருங்கல விருத்தி காட்டுகிறது. இவர் பாட்டியல் தொல்காப்பியர் போன்ற சிறப்புடையவர் போலும்; இவர் நூல் நற்றத்தர் யாப்பு என ஒரு மேற்கோள் செய்யுளில் வைத்துப்பாடப் பெற்றிருக்கிறது. இவர் நூல் நத்தத்தம்; பெயர் நத்தத்தனார் என்றும் வழங்கியிருக்கக் காண்கிறோம்.

## பல்காயனார்

மூன்று பிரபந்தங்களைக் கூறும் இவருடைய நூற்பாக்கள் பன்னிரு பாட்டியலுள் உள்ளன. இவர் நூல் பல்காயம் என்று பெயர் பெறும். செய்யுளிலக்கணம் பற்றிய இவருடைய சூத்திரங்கள் பல யாப்பருங்கல விருத்தி மேற்கோளாய் மிக்க சிறப்புடன் காட்டப்படுகின்றன. ஓரிடத்தில் இது பல்காயனார் மதம் என்றும் காட்டப்படுகிறது.

## பெருங்குன்றூர்கிழார்

இவர் சங்க நூல்களில் பதிற்றுப் பத்தில் ஒன்பதாம் பத்தையும் வேறு பதினொரு பாடல்களையும் பாடியவர். பன்னிரு பாட்டியலில் இவர் பெயரால் இருபது நூற்பாக்கள் உள்ளன. இவர் சங்கப்புலவரிலும் வேறானவர் என்பதில் ஐயமில்லை.

## மாபூதனார்

இவர் பெயரால் பன்னிரு பாட்டியலில் ஐந்து நூற்பாக்கள் உள்ளன.

# பிரபந்த மரபியல்

நூற்பாவினாலான இச்சிறு பாட்டியல் இலக்கண நூற் பகுதி பிரபந்த இலக்கணம் உரைப்பதற்கென்றே வந்தது. மிகவும் பொடிந்துள்ள ஓர் ஏட்டைப் பார்த்து எழுதிய திருத்தமில்லாத காகிதப் பிரதியை ஆராய்ந்தே பின்வரும் குறிப்புக்கள் எழுதப் பெறுகின்றன.

## நூல்

இந்நூல் 35 நூற்பாக்களை உடையது. இவை இரண்டடிச் சிறுமையும் பதினைந்தடிப் பெருமையும் உடையன. கிடைத்துள்ள நூற் பகுதியில் கடவுள் வாழ்த்துக் காணப்படவில்லை; இல்லை போலும். நூலின் முதற் செய்யுள், 'பிள்ளைக்கவி முதல் புராண மீறுகத்—

தொண்ணூற்றுறெனும் தொகையதான—பிரபந்தங்களைக் கூறும் பிரபந்த மரபியல்' என்று நூற் பெயர் சொல்லுகிறது. இதனுல் இதன் பெயர் பிரபந்த மரபியல் என்பதும், இது 96 பிரபந்தங்களையும் சொல்வ தென்பதும் தெளிவு.

நூலின் இறுதியில், 'பிரபந்த மரபியல்பு முற்றும், ஆக இயல்பு ஐந்துக்கும் பாயிரம் செய்யுளியல்பு.........மூலபாடம் முற்றும், முருகனே தெய்வம்' என்று எழுதப்பெற்றுள்ளது. (புள்ளி வைத்த இடம் ஏட்டில் பொடிவு.) இயல் என்பதை ஏடு பார்த்து எழுதினவர் இயல்பு என்றெழுதுகிருர். முதற்பா, பிரபந்த மரபியல் என்று சொல்கிறதே யன்றி, மரபியல்பு என்று சொல்லவில்லை. இனி, இச்சொற்களைக் கொண்டு, இந்நூல் ஒரு விரிந்த நூல் என்றும், இதன்கண் பாயிரம், செய்யுளியல், பொருத்தவியல், பொதுவியல், பிரபந்தவியல் என்ற ஐந்து இயல்கள் இருந்தன என்றும், இப்போது கிடைத்துள்ள பகுதி, நூலின் ஐந்தாவது இயல் மட்டுமே என்றும் கருதலாம். (பொதுவியல் என்பது ஒழிபியல் என்ற பெயரோடு மூன்ரும் இயலாகச் சிதம்பரப் பாட்டியலில் உள்ளது. பிற இயல்களிற் கூறப்படாத பொருள்களை இவ்வியல் கூறும்.) இக்கருத்தின்படி, கடவுள் வாழ்த்து முதலியன பாயிரவியலில் இருந்திருக்கக் கூடும். பொதுவியல் என்பது வச்சணந்தி மாலையிலுள்ள பொதுவியல் போல, செய்யுள், பொருத்தம், பிரபந்தம் என்ற மூன்று இயல்களிலும் சொல்லப்பெருத பிற பொருள்களைக் கொண்டிருந்தது என்று நாம் துணியலாம். இப்போது கிடைக்கும் பகுதியிலுள்ள முதல் 21 நூற்பாக்களே பிரபந்தங்களைக் கூறும் பகுதி. எஞ்சிய 14 நூற்பாக்களும் பிற பொதுப் பொருள்களைக் கூறுவன. அப் பொருள்களைப் பின்வருமாறு நிரல்படக் காட்டலாம்:

| நூற்பா எண் | பொருள் |
|---|---|
| 2—21 | பிள்ளைக்கவி முதல் புராணம் ஈருகவுள்ள 96 பிரபந்த இலக்கணம். |
| 22 | நூல்கள் பெயர் பெறும் முறை |
| 23 | கையறத்துக்கு ஆகாத பா, வாழ்த்துக்கு உரிய பா |
| 24 | நாற்சாதிக்கும் உரிய பாக்கள் |
| 25—27 | நாற்பாவுக்கும் உரிய நிலம் நிறம் நாள் இராசி கோள் |
| 28—29 | கவிஞன் இலக்கணம் |
| 30 | நால்வகைக் கவிஞர் |
| 31 | நூல் அரங்கேற்றும் முறை |
| 32—33 | தமிழ்க் குலப்பெண்ணும் அவளுடைய சுற்றத்தாரும் |
| 34 | பரிசில் வழங்காதான் அழிவு |
| 35 | குற்றம் இல்லாத பாட்டும் குற்றம் உடைய பாட்டும் அவற்றின் பயனும். |

## காலம்

சொல் தொடர் கருத்து ஒற்றுமையாலும், பொருள்வைப்பு முறையின் ஒற்றுமையாலும், பிரபந்த மரபியலைத் தழுவியே சிதம்பரப் பாட்டியல் செய்யப்பெற்றது என்று முன்னமே காட்டினேம். சிதம்பரப் பாட்டியல் செய்தவர் பரஞ்சோதியார். அவருடைய தந்தை சைவ மகா புராணம், சொக்கநாதர் உலா முதலான சிறப்பான நூல்கள் பாடிய பெரும் புலவரான புராணத் திருமலைநாதர். அவர் சிதம்பர புராணத்தைச் சகம் 1430இல் (கி. பி. 1508இல்) செய்துள்ளார் என்று அந்நூற்பாயிரம் கூறுகிறது. இதுகொண்டு, புராணத் திருமலைநாதர் காலம் 1500--25 என்றும் அவர் புதல்வர் பரஞ்சோதி காலம் 1525–50 என்றும் சொல்லலாம். சிதம்பரப் பாட்டியலுக்கும், பிரபந்த மரபியலுக்கும் உள்ள முழு ஒற்றுமையைப் பார்க்கும்போது அந்த நூலுக்குரிய காலமாகிய 1525–50க்குச் சற்றுமுன், அதாவது 1500–25க்கு உரியது பிரபந்த மரபியலின் காலம் என்று நாம் முடிவு செய்யலாம்.

## ஆசிரியர்

நூலின் முழுப்பகுதியும் கிடைக்காதபோது, ஆசிரியரைக்குறித்து எச்செய்தியும் விளங்காமலிருப்பதில் வியப்பில்லை. இருப்பினும் ஒரு குறிப்புச் சொல்லத் தோன்றுகிறது. வெண்பாப் பாட்டியல் (புற) 'குலவரவு காரிகை யாப்பிற் புராணமேயாம்' என்று கூறுகிறது; 'குலவரவு முதலாயினவற்றைக் காட்டுவது புராணக் கதையாம்' என்பது அதன் உரை. குலவரவு காரிகையாப்பிற் சொன்ன தனியான பழைய நூல் இல்லை.[1] கம்பராமாயணத்தில்தான் குலமுறை கிளத்து படலம் என்ற ஒரு தனிப்பகுதி உண்டு; அது விருத்தப்பா; ஒரு பெரு நூலின் பகுதி; ஒன்பதாம் நூற்றாண்டு. ஒருகால் இதைக் கருத்தில் இருத்தியே வெண்பாப் பாட்டியலுடையார் (12 நூ.) குலவரவு காரிகை யாப்பிற் பாடினால் புராணமாகும் என்றார் போலும். முன்னுள்ள பன்னிரு பாட்டியலும் பின் வந்த நவநீதப் பாட்டியலும் புராணத்தைச் சொல்ல வில்லை. பெருங் காப்பியத்தைத் தொடர்நிலைப் பாட்டு என்று பன்னிரு பாட்டியல் கூறுகிறது; வெண்பாப் பாட்டியலும் நவநீதப் பாட்டியலும் விரிவாய்க் கூறுகின்றன. ஆனால், பெருங்காப்பியத் தன்மையில் சில குறைந்தால் அது காப்பிமாகும், புராணமாகும் என்று பிரபந்த மரபியலும் சிதம்பரப் பாட்டியலும் கூறுகின்றன; காலம் 16ஆம் நூற்றாண்டு. இந்த நிலையைச் சிறிது ஆராய்தல் பொருந்தும். பன்னிரு பாட்டியலின் காலத்தில் புராணம் இல்லை. வெண்பாப் பாட்டியலின் காலத்தில், குல முறை கிளத்து படலம் ஏற்பட்டிருந்தது; அது பற்றிப்போலும், அந் நூலுடையார் காரிகையாப்பில் வந்தால் புராணமாய்க் கொள்ளலாம்

1. கலிங்கத்துப் பரணியிலும் சோழர் உலாக்களிலும் இராச பாரம்பரியம் என்ற குலவரவுப் பகுதி உண்டு. இது கலித்தாழிசையும் கலிவெண்பாப் பகுதியும் ஆகும்.

என்றார். நவநீதப் பாட்டியலுடையார் புராணத்தைச் சொல்லவில்லை. ஆனால் பின் வந்த பிரபந்த மரபியலுடையாரும் சிதம்பரப்பாட்டிலுடையாரும் புராணத்தைச் சொல்கிறார்கள். இடைப்பட்ட காலத்தில், சிறந்த சைவ புராணங்களான கந்த புராணமும் திருவாதவூரடிகள் புராணமும் (நம்பி திருவிளையாடற் புராணமும்) தோன்றியிருந்தன. சைவரான இவ்விரு பாட்டியலுடையாரும் இந்த வரலாற்று நிலைமையையும் கருத்தில் கொண்டு, புராணத்தையும் பிரபந்த வகையுள் பெருங் காப்பியம் போலக் கூட்டிக்கொள்வதற்கு ஓர் அமைதி கண்டார்கள் என்று சொல்லத் தோன்றுகிறது.

சிதம்பரப் பாட்டியலுடையார் புராணத்தைக் குறிப்பிடுகிறார். அவருடைய தந்தை புராணத் திருமலை நாதர் என்று பிரசித்தி பெற்றவர்; பெரியதாகிய சைவ மகா புராணம் பாடியவர். ஒரு கால் அவரே புராணத்தையும் இலக்கண மரபுக்குள் அமைத்தால் நல்லது என்று கருதி, தாமே பிரபந்த மரபியல் செய்து அதனுள் புராணத்தைக் குறிப்பிட்டாரோ என்ற ஐயம் எழுகின்றது. இதற்கு ஒரே ஆதாரம், இதை முழுமையும் அடியொற்றிப் பரஞ்சோதியார் தம் சிதம்பரப் பாட்டியலைச் செய்திருப்பதாகும். பிறர் நூலை இவ்வாறு முழுமையும் அடியொற்றிச் செய்வதைவிட, ஒரு பெரும் புலவர் தம் தந்தையின் நூலைத் தழுவிச் செய்வதே இயல்பு. இது முடிவான கருத்தல்லா விடினும், மேலும் நன்கு சிந்திக்கத் தக்க பொருள்.

அல்லது, பரஞ்சோதியார் பிரபந்த மரபியல் பாடியவருடைய நேர் மாணாக்கரா யிருந்தார் என்று கொள்வதிலும், பெருங் கவிஞராய்ப் பல நூல்கள் செய்தஅவர் தந்தையான புராணத் திருமலை நாதரே இப் பாட்டியல் இலக்கணமும் செய்தார் என்று கருதுவது எளிது.

## மரபு என்ற நூற் பெயர்

நூலுக்கே மரபு என்ற பெயர் நீண்ட காலமாக வழக்கில் உண்டு. அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்துக்கு உரை எழுத ஆதாரமாய்க் கொண்ட ஐந்து நூல்களில் ஒன்று, அறிவனார் செய்த பஞ்சமரபு என்பது. யாப்பருங்கல விருத்தியுடையார், பாட்டியல் மரபு, பாட்டியல் மரபுடையார் என்று ஒரு பாட்டியல் நூலையே குறிப்பிடுகிறார். பன்னிரு பாட்டியலுடையார், தாம் எடுத்துக் கொண்ட பொருளைக் கூறும்போது,

> ....................முன்னோர் பொருள் நெறி
> கூட்டி யுரைப்பல் பாட்டியல் மரபே

என்று கூறுகிறார். 'விருந்தே தானும், புதுவது கிளந்த யாப்பின் மேற்றே' என்ற தொல்காப்பியச் செய்யுளியற் சூத்திரவுரையில், 'அவை முத்தொள்ளாயிரமும், பின்னுள்ளார் பாட்டியலின் மரபிற் கூறிய

கலம்பகச் செய்யுள் முதலியவற்றைப் பாடுதலுமாயிற்று' என்று நச்சினார்க்கினியர் எழுதுவதால், பாட்டியலாகிய இலக்கணப்பகுதிக்கே பாட்டியல் மரபு என்ற பெயர் வழங்கியமை தெளிவு. அப்படியே பின் வந்த வெண்பாப் பாட்டியலுரைகாரர், 'இஃது எடுத்துக் கொண்ட பொருள் யாதோ எனின், பாட்டியன் மரபு' என்றும், 'பரந்த பாட்டியன் மரபுகளிற் கரந்து கிடந்த பொருளையெல்லாம் ஒரு கோவைப் படுத்துதல் காரணமென்றுணர்க' என்றும் இருமுறை கூறியிருப்பது காணத்தக்கது. பாட்டியல் நூல்களையே பாட்டியல் மரபு என்று இவர் கூறுகிறார். மேலும், தொல்காப்பிய இயல்கள் பல, மரபு என்ற பெயரமைப்பையே உடையன. எழுத்ததிகாரத்தில்—நூல் மரபு, மொழி மரபு, தொகைமரபு ; சொல்லதிகாரத்தில் விளி மரபு; பொருளதிகாரத்தில்—மரபியல். இவை போலவே நம் நூலும் பிரபந்த மரபியல் என்று பெயர் பெற்றிருத்தல் பொருந்தக் கூடியதே.

## பிரபந்தம் தொண்ணூற்றாறு

96 என்ற வரையறை இலக்கண பூர்வமாக எந்த நூலிலும் சொல்லப்படவில்லை என்பதை முன்பு குறிப்பிட்டோம். பின்னல் (கி. பி. 1732 இல்) சதுரகராதி சொல்கிறது. அந்த அளவுக்கு அது பயனுடையதென்றாலும், அதை ஆதார நூலாகக் கொள்வதற்கில்லை. 96ஐக் கணக்கிடும் முயற்சியை இதுவரை யாரும் மேற்கொள்ளவில்லை ; வையாபுரிப்பிள்ளையே இந்த முயற்சியைத் தமது நவநீதப் பாட்டியல் பதிப்பில் மேற்கொண்டிருப்பதோடு பல பாட்டியல் நூல்களும் கூறும் பிரபந்த அட்டவணை, சதுரகராதியின் 96க்கு ஓர் அகராதிக்கிரமமான அட்டவணை, பல பாட்டியல் நூல்களிலும் காட்டப்பட்ட பிற மிகைப் பிரபந்தங்களுக்கு அட்டவணை எனப் பல அட்டவணைகள் தந்திருக்கிறார். ஒவ்வொரு பாட்டியலும் எத்தனைப் பிரபந்தங்களைக் கூறுகிறது என்ற அட்டவணையும் அங்குள்ளது. அதன்படி, நவநீதப் பாட்டியல் பிரபந்தங்கள் 44 ; மிகைப் பாடல்களில் சொல்லப்பட்டவையும் சேர்த்து, பிரபந்தங்கள் 106. அட்டவணையைப் பார்க்கும்போது, சதுரகராதி யுடையார் தமது 96 என்னும் பட்டியலுக்கு நவநீதப்பாட்டியலையே (மிகைப் பாடல்கள் உட்பட) மூலமாகக் கொண்டிருக்கிறார் என்று தெரிகிறது.

அவ்வட்டவணையில் பிள்ளையவர்கள், பிரபந்த மரபியல் பிரதியை ஆராய்ந்து இதிற்சொல்லிய பிரபந்தங்களையும் கணக்கிட்டு, இவை 66 என்று கணக்கிட்டிருக்கிறார். அப்படியானால், இம்மரபியலுடையார், தாம் 96 என்று கூறிய பிரபந்தங்களைத் தாமே சொல்லவில்லை என்றாகிறது. இவர் 96ஐயும் சொன்னார் என்று கருதி இவர் நூலை ஆராய்ந்த போது, 96ஐக் கணக்கிடும் வழியும் புலப்பட்டது. அதை மேலே விளக்கி உரைப்போம்.

குடை செங்கோல் நாடு ஊர் சிலை வாள் வேல் குதிரை யானை— விருத்தம் என்று சொன்னவிடத்து இவை ஒவ்வொன்றையும் ஒரு பிரபந்தமாகக் கணக்கிடவேண்டும். குடைவிருத்தம் செங்கோல்விருத்தம் நாட்டுவிருத்தம் ஊர்விருத்தம் வில்விருத்தம் வாள்விருத்தம் வேல் விருத்தம் குதிரைவிருத்தம் யானைவிருத்தம் என ; ஆக இவை ஒன்பது ஆகின்றன.

ஆற்றுப்படையை நான்காகக் கணக்கிட வேண்டும். புலவராற்றுப் படை, பாணராற்றுப்படை, கூத்தராற்றுப்படை, பொருநராற்றுப்படை என. பன்னிரு பாட்டியல் விறலியாற்றுப்படையைக் கூறுகிறது. வேறெந்தப் பாட்டியலும் கூறவில்லை என்று முன் குறிப்பிட்டோம்.

மாலைபத்துக் கூறுகின்ற நூற்பாவில், வெட்சி மாலை கரந்தை மாலை வஞ்சி மாலை காஞ்சி மாலை நொச்சி மாலை உழிஞை மாலை தும்பை மாலை வாகை மாலை தானை மாலை தாரகை மாலை எனத் தனித்தனி பத்துக் கணக்கிட வேண்டும்.

இனி, இவை போலவே 16ஆம் நூற்பாவையும் விரித்துப் பொருள் செய்ய வேண்டும். நூற்பா பின் வருவது.

**கருது பொருள் இடம் காலம் தொழிலின்**
**முப்பான் நாற்பான் எழுபான் தொண்ணூறு**
**நூருன் வெண்பாக் கலித்துறையி னுதல்**
**மன்னுமவ் வெண்ணுன் மாலை மஞ்சரி**
**காஞ்சி மாலை முல்லைகலி சதகமென்று**
**இயலும் செய்யுட் கேற்ற பெயரே.**

இதிலடங்கிய பிரபந்தங்களைக் கணக்கிடும் போது, வையாபுரிப்பிள்ளை யவர்கள், 'நால்வகை மாலை, எண்ணுலும் பெயர் பெறும் என்று குறிப்பிட்டு, பொருள் மாலை, இட மாலை, கால மாலை, தொழில் மாலை என்று நான்கு பிரபந்தங்களாக மட்டும் கணக்கிட்டார். இது பொருந்தாது. பொருள் இடம் காலம் தொழில் என்ற நான்கும் முப்பது முதல் நூறு வரை எண்ணுல் பெயர் பெற்ருலும், பெயர்முடிவு மாலை, மஞ்சரி, காஞ்சி மாலை, முல்லை, கலி, சதகம் என்று அமையும்; அதாவது திருச்சதகம் நூறு, திருத்தொண்டர் சதகம் நூறு, ஈங்கோய் மலை (மாலை) எழுபது, கார் நாற்பது (மாலை) என்பன போல அமையும். இன்னும் விரித்தால், பொருள் முதலிய நான்காலும் வரும் மாலை நான்கு, மஞ்சரி நான்கு, காஞ்சி மாலை நான்கு, முல்லை நான்கு, கலிநான்கு, சதகம் நான்கு—ஆக இருபத்து நான்கு பிரபந்த வகைகள். இவ்வாறு கொள்ளவே, முற் கூறிய விரிவுகளையும் கூட்டிப் பார்க்கும்போது, பிரபந்தங்கள் 96 என்று அமையக் காணலாம். இதை எண்ணிட்டுத் தனியே அட்ட வணையில் காட்டியிருக்கிருேம். ஆகவே மரபியலாசிரியர் பிரபந்தம் 96

என்று தொகை சொன்னதோடு, 96ஐயும் விளக்கியுரைத்திருக்கிறார் என்றே நாம் கருதவேண்டும்.

## இந்நூலில் சொல்லப்படாத பிரபந்தங்கள்

இந்நூல் தோன்றிய காலத்துக்கு முன் இலக்கியத்தில் ஆட்சியில் இருந்த பல பிரபந்த வகைகளை இந்நூல் குறிப்பிடவில்லை. அத்தகையவை சிலவற்றை இங்குக் குறிப்பிடுவோம். தாண்டகம் பதிகம் எழுகூற்றிருக்கை என்பன பற்றி முன்னமே குறிப்பிட்டோம். அப்பருடைய திருத்தாண்டகமும் திருநேரிசையும், திருமங்கையாழ்வாரின் பாடலில் திருநெடுந்தாண்டகம் திருக்குறுந்தாண்டகம் என்று சொல்லப்படுகின்றன. துயிலெடை நிலை, யாண்டு நிலை என்று வழங்கிய துறைகள் பின்னால் பள்ளியெழுச்சி பல்லாண்டு என்றாயின. இவற்றையும் இந்நூல் கூறவில்லை.

இனி சிலப்பதிகாரத்துள், பிரபந்தம் என்று கருதத்தக்க சில அமைப்புக்கள் காணப்படுகின்றன. இவை யாவும் பிற்காலத்தில் பிரபந்தங்களாகி யிருக்கின்றன. அம்மானைவரி திருவம்மானை என்ற பதிகமும் திருவாசகத்தில் உள்ளது. குன்றக்குரவை, ஆய்ச்சியர் குரவை முதலான பல குரவைப் பாட்டுக்கள், கந்துகவரி என்ற பெயருள்ள பந்தடி, வள்ளைப்பாட்டு—இது உலக்கைப் பாட்டு என்ற பெயரில் பிற்காலப் பரணிப் பிரபந்தங்களில் காணப்படுகிறது.

பின்னும் சில : மறம்—இரு பிரபந்தங்கள் பதினோராந் திருமுறையில் உள்ளன. உந்தி—திருவாசகத்தில், சாழல்—திருவாசகத்திலும் பெரிய திருமொழியிலும். பாவைப்பாட்டு—ஆண்டாள் பாடல், திருவாசகப் பாடல். தாலாட்டு—ஆழ்வார் பாடல்களில்; பிற்காலத்தில் தனிப்பிரபந்தமாகவே வளர்ந்துள்ளது. சிற்றம்பலநாடி தாலாட்டு, கீதாசாரத் தாலாட்டு. பூவல்லி முதலாயின.

இவற்றைப் பிரபந்த மரபியலோ பிற பிரபந்தப் பாட்டியல்களோ சொல்லவில்லை. தத்துவராயர் பாடுதுறையில் (15ஆம் நூற்றாண்டு) எண்ணற்ற பிற்காலப் பிரபந்த வகைகள் காணப்படுவதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. இவற்றைக் கருத்திலிருத்திப் பார்த்தால், பாட்டியல் கூறும் பல பிரபந்தங்கள் வழக்கில் இல்லை, வழக்கில் இருந்த பலவற்றைப் பாட்டியல் கூறவில்லை என்று சொல்லலாம்.

## சிறப்புச் செய்திகள்

நூற் பொருளைத் தொகுப்பாகத் தொடக்கத்தில் கூறினோம். சில சிறப்புச் செய்திகளை இங்குக் குறிப்பிடுவோம். இறுதி ஐந்து நூற்பாக்களும் தனிச் சிறப்புடையவை. நாற்பாவின் சாதி, நிலம், நிறம், நாள், ஓரை (இராசி), கோள் ஆகியவை கூறி, கவிஞன் இலக்கணம் நாற்

கவிகள் என்ற பொருள்களை முடித்த பிறகு, இந்நூலாசிரியர் 31ஆம் நூற்பாவில் அரங்கேற்றத்தை விரிவாய்க் கூறுகிறார். அக்காலத்தில், நூலின் அரங்கேற்றம் மிகவும் சிறப்பாய்க் கருதப்பெற்றது.[1] நல்ல முகூர்த்தத்தில் நாமகளை வழிபட்டு நூலைக் கேட்பிக்க வேண்டும் என்று மட்டும் வெண்பாப் பாட்டியல் கூறுகிறது. ஆனால் நூலின் அரங்கேற்றம் பிரபந்த மரபியலில் விரிவாய்ச் சொல்லியிருக்கக் காண்கிறோம்; சிதம்பரப்பாட்டியலும் இதை அடியொற்றியே பாடுகிறது. அரங்கேற்றக் கருத்துக்களை மரபியலாசிரியர் பிங்கல நிகண்டிலிருந்து எடுத்தார் என்று தெரிகிறது. நிகண்டின் பொருட்போக்குக்கு அதிகம் தொடர்பில்லாவிட்டாலும், அரங்கேற்றத்தைப் பிங்கல நிகண்டு விரித்துரைக்கிறது. ஒப்புநோக்கும் பொருட்டு அதனைக் கீழே தருகிறோம்:

**பாடுங் கவிதை நாடுறக் கொள்ளின்,**
**தோரணம் நாட்டித் துகிற்கொடி எடுத்து,**
**வார்முர சியம்ப மறையோர் வாழ்த்த**
**விழுத்தகு கோலத்து விரித்தபூங் கலிங்கத்துப்**
**பழிப்பில் பாலிகை பல்லுஊ முளையின்**
**விளக்கு நிறைகுடத்து விதானப் பந்தரில்**
**துளக்கமில் பல்வகைத் தூணிரைப் பொதியில்**
**பல்கிளை நெருக்கிற் பாவையர் பல்லாண்டின்**
**மல்குவனப் பமைந்த வளமனை நாப்பண்**
**வெண்துகில் உடுத்து வெண்பூச் சூடித்**
**தன்தவி சிருத்தித் தான்அயல் இருந்து**
**மங்கலச் செய்யுள் மகிழ்ந்து கேட்டுப்**
**பொன்னும் ஆடையும் பூணும் கடகமும்**
**இன்னவை பிறவும் கொடுத்துஏழ் அடிநிலம்**
**பாவலன் பின்சென்று ஒழிகென நிற்றல்**
**பூவலர் நறுந்தார்ப் புரவலன் கடனே.**

இரண்டையும் ஒப்புநோக்கும்போது அதிகமான ஒற்றுமை இருப்பது புலனாகும். வேறுமோர் தவிசின் இருத்தலும், புவியளித்தலும் மரபியல் அதிகமாய்ச் சொல்கிறது. ஏழடி சென்று மீள்வதை இரண்டும் கூறுகின்றன.

32ஆம் நூற்பா கவியைத் தமிழ்க்குலப்பெண்ணென முழு உருவகம் செய்து காட்டுகிறது. 33ஆம் நூற்பா அப்பெண்ணின் சுற்றத்தார் யாரென்பதைப் புனைந்து கூறுகிறது. தந்தை—புலவன்; தாய்—தரித்திரம்; கேட்போர்—மாதவர்; படிப்பவன்—தமையன்; புகழ்ந்துகொள்

1. அக்காலத்தில் மட்டுமல்ல. இக்காலத்திலும் புத்தக வெளியீட்டு விழா மிகவும் சிறப்பான ஒரு விழா. புத்தகத்தின் பொருளோ தகுதியோ எப்படியிருப்பினும், பொருளுடையவர் ஆடம்பரமாக வெளியீட்டு விழா நடத்துவது நாகரிகமாகியிருக்கிறது.

வோர்—உறவின் முறையோர்; பரிசில் கொடுப்பவன் – பர்த்தா. அபூர்வ மான கற்பனை. புலவன் வறுமையை மணந்தவன் என்பது எத்துணைச் சுவையான கருத்து![1] 32—33 நூற்பாக்களின் பொருள் வேறெந்தப் பாட்டியலிலும் கூறப்பெறவில்லை.

34ஆம் நூற்பா, பாடலைக் கேட்டுப் பரிசில் கொடாதவன் கிளை யொடும் அழிவான் என்று கூறுகிறது. இது பற்றிப் பிங்கல நிகண்டு கூறுவதும் (1372 நூற்பா) அறிவது பயன்தரும் :

**பரிசில் ஈயாப் பாவிதன் பனுவலைத்**
**தெரிதர எழுதிச் செம்பூச் சூடித்**
**தன்மனைப் புறத்தும் சாமுண்டி முன்றினும்**
**பன்னகம் வாழும் பழம்பதி தன்னினும்**
**மயானத் திடத்தினும் மறுகு தன்னினும்**
**தியானித் திருந்து செந்தீக் கொளுத்த**
**ஈராறு திங்களின் இறுதியாம் என்பது**
**ஆதிப் புலவன் அறைந்த மொழியே.**

இதே பொருளைச் சிதம்பரப் பாட்டியல் கூறுவதும் காண்க.

**உடம்படச்செய் யான்செய்யுட் பிறர்பாற் கூறில்**
**உற்றதிரு வவனிடைப்போ யொதுங்கு மன்றித்**
**திடம்பெறச்செய் யுள்வரைந்து செம்பூச் சூட்டித்**
**தெருவுமயா னம்புற்றுக் காளி கோட்டத்**
**திடந்தனிலங் கவன்தன்னை நினைந்து சுட்டால்**
**ஈராறு திங்க டனில் இறுதி யாவன்**
**தொடர்ந்துசெயா துனநொந்தாற் சுற்றத் தோடுந்**
**தொலைவனிஃ துண்மை, அகத் தியன்தன் சொல்லே.**

## பிரபந்த மரபியலும் சிதம்பரம்பாட்டியலும்

பிரபந்த மரபியலை ஆராயும்போது, இதற்கும் 16ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தோன்றிய விருத்தப்பாவாலான சிதம்பரப்பாட்டி யலுக்கும் முழு ஒற்றுமை இருப்பது தெரிகிறது. பிந்தியது உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல், பொருத்தவியல், பிரபந்தவியல் என்ற ஐந்து இயல்களைக் கொண்டது. பிரபந்த மரபியலின் முழு நூலானது, இவ்வமைப்பைத் தழுவி, பாயிரம், செய்யுளியல், பொருத்தவியல், பொது வியல், பிரபந்த மரபியல் என்ற ஐந்து இயல்களைக் கொண்டிருக்கலா மென்று தொடக்கத்தில் சொன்னோம். இங்குள்ள பிரபந்த மரபியலே சிதம்பரப் பாட்டியலில் பிரபந்த வியலாயுள்ளது. இரண்டிலும் சொல்லப்

1. ஏட்டின் பொடிவினால் இந்நூற்பாவில் இரண்டு அடிகளை நிறைவு செய்ய இயலவில்லை.

பட்ட பிரபந்தங்களையும் பொருளையும் அவற்றின் ஒற்றுமையையும் பின்னே ஓர் அட்டவணையாகக் காட்டியிருக்கிறோம். இது பற்றிச் சில செய்திகள் இங்குக் கூறத்தகும்.

பெரும்பான்மையான பிரபந்த இலக்கண நூல்கள் அமைந் துள்ளதைப்போல, இவ்விரண்டும் பிள்ளைத்தமிழை வைத்தே தொடங்கு கின்றன. பிரபந்தங்களின் வரிசை யமைப்பு, மற்றவற்றில் இப்படியிருந்த போதிலும், இவ்விரண்டிலும் முழுமையும் ஒன்றாகவே உள்ளது. இரண்டும் பரணி பெருங்காப்பியம் காப்பியம் புராணம் என்றே முடிக்கின்றன. புராணத்தையும் ஒரு பிரபந்தமாகச் சொல்லும் பாட்டியல் நூல்கள் இவ்விரண்டும் வெண்பாப் பாட்டியலுமே; மூன்றும் புராணத்தை இறுதிப் பிரபந்தமாகக் கூறி முடிக்கின்றன.

பிரபந்தங்களின் தொகையும் இரண்டிலும் ஏறக்குறைய ஒன்றாகவே உள்ளது. பிரபந்தமரபியலில் காணப்படும் வருக்கக் கோவை மற்றதில் இல்லை. பொருள் இடம் காலம் தொழில் என்னும் நான்கினுள் ஒன்று பற்றி 30, 40, 70, 90, 100 வெண்பா அல்லது கலித்துறையால் பாடுவது, அவ்வவ் வெண்ணால் மாலை, மஞ்சரி, காஞ்சிமாலை, முல்லை, கலி, சதகம் என்று பெயர் பெறும் என்று பிரபந்தமரபியல் கூறுகிறது. ‘அப்பேணல் மாலையும் எண்ணால் மருவும் பேராம்’ என்று மட்டும் சிதம்பரப் பாட்டியல் கூறுகிறது. மாலை மஞ்சரி முதலான வேறுபட்ட பெயர்களைச் சொல்ல வில்லை. இரண்டுக்கும் வேறுபாடு இவ்வளவே.

அடுத்தபடியாக, பிரபந்தங்களை விளக்குமிடத்து இரண்டில் வரும் சொல்லும் தொடரும் முழுமையும் ஒன்றாகவே இருக்கக் காண்கிறோம். எடுத்துக்காட்டாகப் பரணிப் பிரபந்தத்தைக் குறிப்பிடுவோம். மரபியல் 19ஆம் பாடல் பின் வருவது:

> **படைபுக்கு ஆயிரம் பகடற ஒன்னார்**
> **போரில் எதிர்ந்து பொரும்அர சனுக்கு:**
> **கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு, பாலை**
> **நிலம்,காளி கோட்டம், நிலைஇய கழுது**
> **காளிக்குப் பேய்சொல்லல், அப்பேய்க்குக் காளிசொலல்**
> **அதனால் தலைவன் கீர்த்தி அருளுதல்,**
> **அவன்செலல், புறப்பொருள் தோன்றஆர்ப் பரித்துப்**
> **போராடல், பொருகளம் விரும்பல்: இவற்றை**
> **நாற்சீ ராதியின் நண்ணும்ஈ ரடியின்**
> **ஏருது பரணி இயம்புதல் நெறியே.**

சிதம்பரப் பாட்டியலின் 41ஆம் விருத்தம் பரணி இலக்கணம் கூறுகின்றது:

படைபுக்கா யிரம்வேழம் எதிரார் போரிற்
படைப்போர்செய் தானுக்குக் கடவுள் வாழ்த்து,
கடைதிறப்பு, பாலைநிலம், காளி கோட்டம்
கழுதுநிலை, காளிக்குப் பேய்சொலல், பேய்க்குத்
தொடர்காளி சொல்லல், அதனுற் றலைவன் கீர்த்தி
சொல்லல்,அவன் சேறல்,புறப் பொருள்தோன் றப்போர்
அடுதல், களம் விரும்பல்: இவை நாற்சி ராதி
அடிஇரண்டில் ஏருமல் பரணி பாடே.

இரண்டையும் ஒப்பு நோக்குமிடத்து, சொல் தொடர் கருத்து ஒற்றுமை எத்துணைச் சிறப்பா யுள்ளது என்பது நன்கு விளங்கும். இது மட்டு மன்று: பரணிப் பிரபந்தத்தின் இறுதிப்பகுதியில் கூறப்படும் உறுப்புக் களாகிய கூழ் அடுதல், கூழ் வார்த்தல், தலைவனை வாழ்த்துதல் என்ற பகுதிகள் இரண்டிலுமே சொல்லப்பெறவில்லை. இவ்வகையான ஒற்று மையால் ஒரு கருத்துத்தெளிவாகும். அதாவது நூற்பாவாலான பிரபந்த மரபியல் முதலில் தோன்றியது. அதைப் பார்த்து, அதை முழுமையும் தழுவிப் பரஞ்சோதியார் தம் சிதம்பரப் பாட்டியலைச் செய்தார் என்பது. தொடர்ந்து மேலும் சில கருத்துக்களைக் கூறி முடிப்போம்.

பிரபந்தங்களைக் கூறி முடித்தபின் பிரபந்த மரபியலானது நூலுக்குப் பெயர் அமையும் முறை, கையறம், வாழ்த்து, கவிஞன் இலக்கணம், கவியைக் கேட்டற்சிறப்பு, பரிசில் வழங்காதவன் அழிவு, குற்றம் உடைய பாட்டு, இல்லாத பாட்டு என்ற பொருள்களைப் பேசுகிறது. சிலவற்றைச் சிதம்பரப் பாட்டியலும் அப்படியே பேசுகிறது. நாற்சாதிக்குரிய பா, நாற்பாவுக்குமுரிய நிலம், நிறம் நாள் இராசிகோள், நால்வகைக் கவிஞர், தமிழ்க் குலப்பெண், அவள் சுற்றத்தார் என்று அந்நூல் கூறும் பொருள்களைச் சிதம்பரப் பாட்டியலின் மரபியல் கூறவில்லை. வேறுபாடு இவ்வளவே. கவிஞன் பரிசில் பெறுது இதயம் நொந்தால் பாடல் பெற்றவன் அழிவான் என்று அகத்தியர் நூல் கூறிற்று என்று இந்நூல் கூறுகிறது (*36*):

இங்ஙனம் இயற்ருது இதயம் நொந்துகொண்டு
இருக்கினும் கிளையொடும் இறுதியாவன் என்று
ஓதினது அகத்தியர் உண்மைநூல் நெறியே.

சிதம்பரப் பாட்டியலும் இப்படியே சொல்லுகிறது (*46*):

ஈராறு திங்கள்தனில் இறுதி யாவன்
தொடர்ந்து செயா துளம் நொந்தால் சுற்றத் தோடும்
தொலைவன், இஃதுண்மை, அகத்தியன்தன் சொல்லே.

இரண்டு நூல்களும் இக்கருத்து அகத்தியர் தம் நூல் என்கின்றன. அகத்தியர் நூல் என்பது 9ஆம் நூற்ருண்டில் இருந்த அகத்தியர் செய்த

பாட்டியலாகும். இவ்விரு நூல்களும் அகத்தியர் நூல்வழி வந்தன என்பதும் தெரிகிறது.

இதுகாறும் கூறிய கருத்துக்கள், நூற்பாவாலாகிய பிரபந்த மரபியல் முதலில் தோன்றியது, விருத்தப் பாவாலாகிய சிதம்பரப் பாட்டியல் அதைத் தழுவிப் பின்னர் தோன்றியது என்ற முடிவை அடிப்படையாகக் கொண்டு சொல்லப்பெற்றன. இருப்பினும், பிரபந்தங்களைக் குறிப்பிடும்போது, இருநூல்களும் அமைத்துள்ள சொற்களை ஆராயும் போது, ஒருகால் சிதம்பரப் பாட்டியல் முதலில் தோன்றியிருந்து அந்நூல் செய்த ஆசிரியர் பரஞ்சோதியாரின் மாணுக்கரொருவர் விருத்தப்பாவில் இலக்கணம் இருப்பதைவிட நூற்பாவில் இருப்பதே சிறப்பு என்று கருதி விருத்தத்தின் தொடர்களின் தொடக்கத்தில் இரண்டொரு சொற்களைப் பெய்து அப்படி அப்படியே நூற்பாவாக ஆக்கினுர் என்றும் கருதக் கூடும். சிதம்பரப் பாட்டியலில் காணப்படாத பல பொருள்கள் பிரபந்த மரபியலில் காணப்படுகின்றன. பிள்ளைக்கவியின் பாடல் தொகை (பி. ம. 3.) சிதம்பரப்பாட்டியலில் இல்லை. வருக்கக்கோவை (பி. ம. 7.) சிதம்பரப்பாட்டியலில் இல்லை. பிரபந்தம் தொண்ணூற்ருறு என்பதைப் பிரபந்த மரபியல் முதல் பாடல் கூறுகிறது. சிதம்பரப் பாட்டியல் கூறவில்லை. நாற்சாதிக்கும் உரிய பா, நாற்பாவுக்கும் உரிய நிலம், நிறம், நாள், கோள், ஓரை ஆகியவை சிதம்பரப்பாட்டியலில் இல்லை. நாற்கவிஞன் இலக்கணம் இல்லை. தமிழ் குலப்பெண், பெண்ணின் சுற்றத்தார் என்ற பகுதியும் இல்லை.

எனவே சிதம்பரப் பாட்டியல் கூறுகின்ற பொருளைப் பிரபந்த மரபியல் அப்படியே எடுத்தமைத்தும், விரித்தும் தனி நூல் செய்திருக்கிறது என்று கருதுவதும் பிழையாகாது. சிதம்பரப் பாட்டியலின் காலம் 1525-50 என்றும், இதனுல் பிரபந்த மரபியலின் காலம் 1500-25 ஆக இருக்கலாம் என்றும் குறிப்பிட்டிருந்தோம். இங்குக் காட்டியபடி பாட்டியலைத் தழுவி மரபியல் வந்தது என்ருல், அதற்குப் பிற்பட்ட காலமாகிய 1550-75 ஆகிய கால எல்லை இதற்குரியது என்று கொள்வது பிழையாகாது. எப்படி இருப்பினும், காலம் 16ஆம் நூற்ருண்டு என்பது பொருந்துவதே.

## பதிப்புரை

பிரபந்த மரபியல் நூற்பாவால் இயன்றது. பாக்கள் நான்கடிச் சிறுமையும் பதினுறடிப் பெருமையும் உடையன. பதினுறடிக்கு மேல் போகக்கூடாதென்று இவர் வரையறை செய்துகொண்டு பாடியிருக்கிருர. பெருங்காப்பிய இலக்கணம் கூறும் நூற்பா ஒன்று மட்டும் 16 அடி, 14 அடியில் ஆறு நூற்பாக்கள் (7, 8. 12, 14, 31, 34) நூற்பாவால் இயன்றமையால், பா ஒவ்வொன்றும் அடியளவால் விரிந்தும் போகலாம், சுருங்கியும் இருக்கலாம். ஆசிரியர் தம் பாடல் ஒவ்வொன்

றையும் வரையறை செய்து கொள்வதற்கு என்ன அளவையைக் கொண்டார் என்பது விளங்கவில்லை. ஏனெனில், சில பிரபந்தங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட நூற்பாக்களில் சொல்லப்படுகின்றன—பிள்ளைத் தமிழ் 2 (2, 3); கலம்பகம் 3 (4, 5, 6). பல பிரபந்தங்கள் ஒரே நூற்பாவிலும் சொல்லப் பெறுகின்றன—7, 8, 9 முதலான நூற்பாக்களைப் பார்க்க.

நூற்பாக்கள் 35 என்பது ஏட்டில் காணப்படும் எண்; இவற்றுள் அமைந்த மொத்த அடிகள் 311. பிரபந்தங்களைத் தனியே பிரித்துணரும் பொருட்டு, சில சமயம் நூற்பாக்களைப் பகுதி பகுதியாகப் பிரித்துப் பதிப்பித்திருக்கிறோம். பிரபந்தத் தலைப்புக்கள் நூலில் இல்லை. புதிதாய் அமைக்கப் பெற்றவை.

நூற்பாவின் கீழேயுள்ள விளக்கக் குறிப்புக்களில் குறித்த பிரபந்தத்துக்கு எடுத்துக் காட்டாக, இயன்ற வரையில் காலத்தால் முதலில் தோன்றிய அவ்வகைப் பிரபந்தத்தையே காட்டியிருக்கிறோம். சில வகைகளில் மிகவும் பிற்காலத்திலேயே பிரபந்தங்கள் தோன்றியிருந்தாலும், அவற்றைக் காட்டவில்லை.

மூல ஏடு மிகவும் பொடிந்து போய், அதிலிருந்து பிரதி செய்த காகிதப் பிரதியையே யாம் பார்க்க நேர்ந்தது. மூல ஏட்டைப் பார்க்க இயலவில்லை. ஏடும் இன்று கிடைக்காது. பிரதி செய்தவர் புலமை படைத்தவராய் இல்லாமையால், பிரதியில் பிழைகள் மிகவும் அதிகம், விடுதலும் அதிகம். இதைப் பார்த்தால், இதை ஒன்றும் செய்ய முடியாதென்றே தோன்றும். எனினும் மிகவும் முயன்று, பொருள் தொடர்பைக் கொண்டும் சிதம்பரப் பாட்டியல், பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல் என்பவற்றின் துணை கொண்டும், இயன்றவரை ஊகித்தறிந்து, பொடிந்து போன எழுத்துக்களையும் சொற்களையும் பெய்து பொருந்திய முறையில் இங்கு நிறைவு செய்யப் பெற்றுள்ளன. இவ்வாறு செய்த இடங்கள் இருதலைப் பகரக்குறி யிட்டுக் காட்டப் பெற்றுள்ளன.

இந் நூலிலுள்ள 35 நூற்பாக்களில், நூற்பெயர் கூறும் முதல் நூற்பாவும், இறுதியில் பொது இலக்கணம் சில கூறும் 14 நூற்பாக்களும் (22-35) நீங்கலாக இடையிலுள்ள 20 நூற்பாக்களிலேயே ஆசிரியர் 96 பிரபந்த இலக்கணங்களையும் அமைத்துச் சொல்வது சிறப்புடையது. ஆசிரியர் பெயர் தெரியாவிட்டாலும், தமிழ்ச் சுவை தேரும் சிறந்த பண்பாளர் என்பது, இறுதியில் (32-3) கவிதையைத் தமிழ்க்குலப் பெண்ணென உருவகம் செய்திருப்பதாலும் அவளுடைய சுற்றத்தாராகப் பிற நிலைமைகளைக் காட்டுவதாலும் நன்கு அறிய முடிகிறது. அரங்கேற்றல், பரிசு வழங்காதவன் அழிவான் எனல், குற்றமுடைய

பாட்டு, குற்றம் இல்லாத பாட்டு என்ற பொருள்களை இவர் முன் வந்த பாட்டியல் நூல்களையும் நிகண்டு நூல்களையும் நன்கு ஆராய்ந்து பாடியிருப்பது போற்றற்குரியது.

இவ்வாசிரியர் பாடியதாகத் தெரிகின்ற ஐந்து பகுதிகளில் இறுதிப் பகுதியே இப்போது கிடைத்து அச்சிடப் பெறுகிறது. ஏனைய பகுதிகள் கிடைக்காது போனமை பெருங்குறையே.

இந்நூல் வெளியீடு, தமிழ் வரலாற்று வளர்ச்சிக்கு மிகுதியும் பயன் படுவதாகும். இதை விரைந்து வெளியிட முன் வந்த அரசினர் தொன்னூல் நிலையச் சுவடி நிலையத்தாரையும் அதன் காவலர் பேராசிரியர் திரு. சம்பத் அவர்களையும் பெரிதும் பாராட்டுகிறேன்.

திருச்சிற்றம்பலம்.
1973.

மு. அருணசலம்.

# பிரபந்த மரபியல்

## 1. நூற்பெயர்

1 வானவர் ஏத்தும் மறையோர் முதலிய
மக்களின் னோர்க்குத் தக்க தன்மையிற்
பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈருகத்
தொண்ணூ[ற் ருறெனும்] தொகைய தான
முற்பக ரியல்[பை] முன்னுறப் பாடும்
பிரபந்த மரபியலது பிரபந்த மரபியலே.

குறிப்பு: இப்பாடல் இந்நூலின் பெயர் பிரபந்த மரபியல் என்று கூறுகிறது. பிள்ளைக்கவி—பிள்ளைத் தமிழ். தொண்ணூற்ருறு என்று எண்ணிச் சொல்வது வரலாற்றுச் சிறப்புடையது. இருதலைப் பகரத்துள் உள்ள பகுதி ஏட்டில் பொடிந்துபோய் ஊகித்து எழுதியது.

## 2. பிரபந்த இலக்கணம்

*பிள்ளைக்கவி*

2 செறிகொலை நீக்கித் தெய்வம் கா[ப்பெ]னத்
தொகை[யளவு] வரையும் இசைவகுப் பகவல்
விருத்தந் தன்றல் வினவுமுறை காப்புச்
சாற்றுசெங் கீரை தால்சப் பாணி
வழங்கு [முத்தம் வாரா]னை அம்புலி
சிறுபறை சிற்றில் சிறுதேர் பத்தும்;
ஈற்றில் மூன்ருெழித்து ஏந்திழை யார்தமக்கு
உறுகிழங்கு அம்மானை ஊசல் [அமைய],
மூன்றுமுத லிருபத் தொன்றனுள் ஒற்றைப்
பெறுமதி கொளலாம் பிள்ளைக் கவியே.

சிதம்பரப் பாட்டியல் 28. பல பாட்டியல் நூல்கள் பிள்ளைத் தமிழி லிருந்தே பிரபந்த வரிசையைத் தொடங்குகின்றன. மூன்று முதல் இருபத்தொன்று வரையுள்ள ஒற்றை மாதங்கள் முறையே பத்துப் பருவங்களுக்கும் பொருந்துகின்ற வயதாகும். வகுப்பகவல்

விருத்தம்—ஆசிரியச் சந்த விருத்தம். வாரானை—வருகைப் பருவம். மன்னர் முடிசூடிய பின்னர் பிள்ளைப் பாட்டுப் பெறுர் என்பது பன்னிரு பாட்டியல் தரும் ஒரு சிறப்பு இலக்கணம் (178). அதனுள் இப்பாட்டினிலக்கணம் விரிவாக 28 நூற்பாக்களில் சொல்லப் பட்டுள்ளது. பிங்கல நிகண்டு பல சூத்திரங்களில் பிள்ளைத் தமிழைக் கூறுகிறது. பிள்ளைத் தமிழின் முகப்பில் இன்ன மரபாருக்கு இன்னவகைப் பாடல் பெய்து வைக்க வேண்டும் என்றும் இது கூறுகிறது. முதல் பிள்ளைத் தமிழ், ஒட்டக்கூத்தர் பாடிய குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ் (12 ஆம் நூற்றுண்டு).

*பிள்ளைக் கவியின் பாடல் தொகை*

**3** **இமையவர் வேதியர் இ[யல்புடை ஊ]வசியர்**
**சூத்திரர் என்னச் சொற்றஐ வருக்கு**
**முறையே நூறு முதலறு பான்வரை**
**கணிக்கும் பிள்ளைக் கவி[யின் தொகை]யே.**

சிதம்பரப் பாட்டியலில் இப்பொருள் இல்லை. கலம்பகத்தில் தான் இன்ஞருக்கு இத்தனைப் பாடல் என்பது சொல்லப் படுமே தவிர, பிள்ளைத் தமிழில் இவ்வாறு சொல்வது வேறு பாட்டியல்களில் சொல்லப்படவில்லை. எனினும், பருவத்துக்குப் பத்துப் பாடல் என்பதைப் பிற ஆசிரியர் ஐந்து, மூன்று என்றெல்லாம் குறைத்துப் பாடியிருக்கவும் காண்கிறோம். (சான்று: செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ்—5, பழனி பிள்ளைத் தமிழ்—3; போல்வன).

*கலம்பக உறுப்புக்கள்*

**4** **ஆர்புயம், தவம்,மதங்கு, அம்மானை, காலம்,**
**குறம்,மறம், களி, மடக்கு, ஊசல், வண்டு, ஊர்,**
**சித்து,இரங் குதல்,சம் பிரதம், [தழை,பாண்,]**
**கைக்கிளை, தூதுஇவை கலம்பகக் கூற்றே.**

**சித. 29.** இவற்றுள் கார் கூறவில்லை. தழை, பாண் என்பன ஏட்டின் பொடிவால் ஊகித்து எழுதப்பட்டன. இவ்விடத்துக் கார் இருந்திருக்கவும் கூடும். மடக்கு, யாப்பின் விசேடமாகக் கருதி நீக்கினல், உறுப்புக்கள் 18 ஆகின்றன. கலிப்பா யாப்பின் விசேடமான ஒருபோகு என்பது பிற பாட்டியல்களில்

உறுப்பாகவே சொல்லப்பட்டது, இங்குக் குறிக்கப் பெறவில்லை. குறம் பிற்காலப் பாட்டியல்களிலே தான் சொல்லப்படுகிறது; வெண்பாப் பாட்டியல் சொல்லவில்லை.

### கலம்பக இலக்கணம்

5 வெண்பாக் கலித்துறை வேண்டிவற் றென்றால்
வண்ணக முன்னு[ற வரு]முத லுறுப்பு
வினவில் ஒருபோகு வெண்பாக் கலித்துறை
அகவல் விருத்த மாயும்வே றகவல்
வெண்பாக் கலித்துறை [ஆசிரியம்] வஞ்சித்துறை
மருட்பா வெண்டுறை வஞ்சி கலியினம்
இவற்றை அந்தாதித்து இயம்பிய கூற்றுற்
கலந்து பாடுவது கலம்ப[கம் என்ப.]

சித. **29.** நந்திக் கலம்பகமே முதல் கலம்பகம், 9 ஆம் நூற்றாண்டு.

### கலம்பகப் பாடல் தொகை

6 நூறு தேவர் ; தொண்ணூற் றைந்து
பார்ப்பார்க்கு ; அரசர் தொண்ணூறு; அமைச்சர்க்கு
எழுப.்.து ; ஐம்பான் வைசியர்க்கு ; ஆறைந்து
சூத்திரற்[கு என்ப,இதன் இ]யல்புணர்ந் தோரே.

சித. **29.** முப்பான் உழவர்க்கு என்று கூறும். பார்ப்பார், அமைச்சர் என்று இவர் கூறியிருப்பது பன்னிரு பாட்டியலைத் தழுவி (214). இங்குக் கூறப்பட்ட இலக்கணத்துக்குப் பொருந்த நந்திக் கலம்பகத்துக்குத் தொண்ணூறு பாட்டுக்களே உரியன என்பது அந்நூற் பதிப்பாசிரியர் அ. கோபாலையர் குறிப்பு: அதனுள்ளும் நூலிற் சேர்க்கத் தக்க மிகைப் பாடல்களாக 22 காணப்படுகின்றன. பிற கலம்பகங்கள் நூறினும் குறைந்தனவாகக் காணப்படவில்லை. நம்பியாண்டார் நம்பி பாடிய ஆளுடைய பிள்ளையார் கலம்பகம் என்பது, அடியவரும் தேவரேயாதலால், நூறு பாடல் இருக்கத் தக்கது. ஆனால் கிடைக்கும் நூலில் 49 பாடல்களே உள்ளன. கலம்பகம் அந்தாதியாய் மண்டலித்து வரும் நூலாதலால், அந்நூல் அபூர்த்தி என்றே கொள்ள வேண்டும்.

### *பன்மணி மாலை*

**7 அறைந்த கலம்பகத்து அம்மனை ஊசல்**
**ஒருபோகு என்பன ஒழியச் சிறப்பித்து**
**அந்தா தித்துநூறு அறைவது பன்[மணி**
**மாலை என்ப] ;**

சிதம். 30. தொடர்நிலைச் செய்யுளாய் அந்தாதித்து வரும் நூலுக்கு உதாரணமாய் இப்பிரபந்தத்தை யாப்பருங்கல விருத்தியுரை இருமுறை எடுத்துக் காட்டுகிறது. எனினும், இவ்விலக்கணம் அமைய முற்காலத்தில் பாடப்பட்ட நூல் இன்று இல்லை. பிற்காலத்தில் தோன்றிய நூல், வைத்தியநாத தேசிகர் பாடிய திருவாரூர்ப் பன்மணிமாலை (17 நூ).

### *வெண்பா அந்தாதி, கலித்துறை அந்தாதி*

**கலித்துறை மன்னிய**
**வெள்ளை நூறந் தாதித்து வருவது**
**[தனித்தனி அ]ந்தாதி ;**

சிதம். 30. காரைக்காலம்மையாருடைய அற்புதத் திருவந்தாதி, முதலாழ்வார் அந்தாதிகள் என்பன வெண்பா அந்தாதிக்கு எடுத்துக்காட்டுக்கள் (5-6 நூ). நம்மாழ்வார் பாடிய திருவிருத்தம் கலித்துறை அந்தாதிக்கு எடுத்துக் காட்டு (9 நூ).

### வருக்கக் கோவை

**உயிரும்மெய் வருக்கத்து**
**அடைவில் வருபொருள் துறையிற் கலித்துறை**
**[அகப்பொருள் அமைய உலகெ]லா மதிப்ப**
**வழுத்தும் இயல்பது வருக்கக் கோவை ;**

இது சிதம்பரப் பாட்டியலில் இல்லை. பண்டை வருக்கக்கோவைப் பிரபந்தம் எதுவும் இல்லை. பிற்காலத்தில் நெல்லை வருக்கக்கோவை முதலியன தோன்றின (16 நூ.)

### *கோவை*

**தூண்டும் அகப்பொருள் துறைவளர்ந் தமையக்**
**கருதிநா னூறு கலித்துறை யா[கக்]**

காத லன்புறு காந்திருவ மணத்திற்
கொடிச்சியும் ஊரனும் குலவுநெறி நடப்பது
அகப்பொருட் கோவை யாமென மொழிப.

சித. 30. கோவை என்று பிற்காலத்தார் வழங்குவதே இங்கு அகப்பொருட் கோவை எனப்படுகிறது. நானூறு என்ற வரையறை அமைந்தது திருக்கோவையினால்; பன்னிரு பாட்டியல் நானூறென்றே கூறும். முதல் கோவை பாண்டிக் கோவை; அதன் பாடல்கள் நானூற்றிலும் மிக்க அதிகமாய் இருந்திருக்கும் (7 நூ.) திருக் கோவை 9 ஆம் நூற்றாண்டு.

*இரட்டைமணிமாலை, இணைமணிமாலை,*
*மும்மணிக் கோவை*

8 [கருதும் வெண்பாக்] கலித்துறை விரவி
இருபது வழுத்துவது இரட்டைமணி மாலை;
வெண்பா தொகைமுதற் பாக்கலித் துறைநன்கு
இணைய இயம்புவது இணைமணி மாலை;
அகவல் வெண்பாக் கலித் துறையின்
முப்பது விரவின் மும்மணிக் கோவை;

சித. 31. முதலாவது எழுந்த இரட்டைமணி மாலை, காரைக் காலம்மையார் பாடியது (5-6 நூ.) இணைமணி மாலைக்கும் தொகை இருபதே யாகும்; ஆனால் இப்பிரபந்தமெதுவும் இப்போது இல்லை. மும்மணிக் கோவைகள் எண்ணிறந்தன. முதல் மும்மணிக் கோவை சேரமான் பாடிய திருவாரூர் மும்மணிக் கோவை (8 நூ.).

*ஒலியந்தாதி*

வகுப்பின் ஈரெண் [வண்ணச்] செய்யுளுள்
ஓங்கிய முப்பான் ஒலியந் தாதி.

சித. 31. பதினாறு கலைவகுத்த ஈரொலி வண்ணம் முப்பது கூடி அந்தாதியாக வருவது ஒலியந்தாதி (நவநீதப் பாட்டியல் பழையவுரை). பழமையான ஒலியந்தாதி இல்லை. கந்தர் ஒலியந் தாதி முதலியன புதிதாய்ச் செய்யப் பெற்றவை. முக்தி நிச்சய வுரையில் வெள்ளியம்பலவாணத் தம்பிரான் (சு. 1700) ஒலியந்தாதி வழங்குவ போலும் என்று எழுதுகிறார். நூல் இல்லை.

### இருபா இருபது

**வெள்ளைமுன் அகவல்பின் விரவின் இருபான்**
**இயம்புவது இருபா இருபஃது;**

சிந. **31.** முதல் இருபா இருபது என்பது, அருணந்தி சிவாசாரியார் பாடிய இருபா இருபது என்ற சித்தாந்த சாத்திர நூல் (13 நூ).

### பயோதரப் பத்து, நயனப்பத்து

**இணைந்து**
**மன்னு பயோதரம் அம்பகம் இவற்றை**
**ஆசிரிய விருத்தம் கலித்துறை யொன்றின்**
**ஏற்க வருணித்து ஈரைந்து சொல்வது**
**அப்பெயர்ப் பத்தென அறைந்தனர் புலவர்.**

சிந. **31.** இவ்விரு பிரபந்தங்களும் இன்று இல்லை. விருத்தம் என்றும் வழங்கும்; கலித்துறையை விருத்தம் என வழங்குதலை அப்பர், நம்மாழ்வார் திருவிருத்தங்களில் காணலாம்.
பயோதரம்-தனம்; அம்பகம்-கண்.

### தசாங்கப் பத்து

**9 வெள்ளை பத்தில் தசாங்கத்தைப் புகழ்ந்து**
**பகர்தல் தசாங்கப் பத்தாம்; அவற்றைத்**
**தொண்ணூ றெழுப.ஃது ஐம்பான் வெள்ளையில்**
**அமை[மவுற மொழித லாகும்] சின்னப்பூ;**

சிந. **32.** தசாங்கம் யாவை என்பது இங்குச் சொல்லவில்லை. இந்நூற்பாவின் பிற்பகுதியில் சொல்லப்பட்டவை (அடுத்த தலைப்பினைப் பார்க்க) குடை, செங்கோல், நாடு, ஊர், சிலை, வாள், வேல், பரி, தந்தி என்ற ஒன்பது. முதல் தசாங்கம் மாணிக்கவாசகர் தம் திருவாசகத்துள் பாடிய 19ஆம் பதிகம். அங்குக் கூறியுள்ளவை பெயர், நாடு, ஊர், ஆறு, மலை, ஊர்தி, படை, முரசு, மாலை, கொடி என்ற பத்து; திரு அண்டப் பகுதியிலும் இப்பத்தையுமே சொல்கிறார். இந்நூற்பா சொல்லுபவற்றில் நாடு, ஊர், படை, ஊர்தி என்ற நான்கையே இங்குக் காண்கிறோம். தசாங்க உறுப்புகள் நூலுக்கு நூல் வேறுபடவும் காண்கிறோம்.

தசாங்கம் பெறத்தக்கார் அமரரும் அரசருமே (நவநீதப் பாட்டிய லுரை 40). தசாங்க உறுப்புப் பத்தையும் ஒரே பாட்டில் வரப் பாடுவது தசாங்க வருணனை என்று பெயர் பெறும். தசாங்கம் பத்தே வெண்பாக் கொண்டது. தசாங்கத்தயல் என்பது முன் கூறிய தசாங்கத்துக் கயலாயுள்ளது. ஆசிரிய விருத்தத்தால் பாடப் பெறும். தசாங்கம் பல உள்ளன. தசாங்கத்தயல் இன்று இல்லை;

சின்னப்பூ என்ற நூறுபாடல் கொண்ட பிரபந்தம் தத்துவராயர் பாடியிருக்கிறார். (15 நூ.) வேறு இல்லை. நூற்றிலும் குறைந்த பாடல் உடையதாக எதுவும் இல்லை.

### *குடை, செங்கோல், நாடு, ஊர், சிலை, வாள், வேல், பரி, யானை—விருத்தங்கள்*

**எழிற்குடை செங்கோல் நாடுஊர் சிலைவாள்**
**அணிவேல் பரிதந்தி இவற்றைத் தனியே**
**அகவல் விருத்தம்ஈ ரைந்தின் மேவ**
**உரைக்கில் அவ்[வவ்] விருத்த மாகும்.**

சித. **32.** இங்குக் கூறிய பத்து அங்கங்களுள் ஒவ்வொரு பொருளைக் குறித்தும் பத்து ஆசிரிய விருத்தம் பாடுவது அவ்வப் பெயருடைய விருத்தமாகும். அருணகிரி நாதர் பாடிய வேல் விருத்தம் (15 நூ.) உள்ளது. வேறு இவ்விலக்கணம் அமைந்த விருத்தம் அருமை.

### *ஊசல்*

**10 ஆசிரிய விருத்தம் கலித்தா ழிசையில்**
**ஒன்ரு ஒன்பான் தாழிசை போக்கிற்**
**சுற்றத் தளவில் சொல்வது ஊசல்.**

சித. **33.** நவநீதப் பாட்டியல் பொன்னூசல் என்று கூறும். திருவாசகத்தில் மாணிக்க வாசகர் பாடிய திருப்பொன்னூசல், பொன்னூசல் ஆடாமோ என்ற மகுட முடையதாய் ஒன்பதே பாடல் கொண்டிருக்கிறது. இது ஆறடி கொண்ட கொச்சகக் கலிப்பா. (காலம் 9 நூ.) சிலப்பதிகாரத்தில் நான்கடியின் மிக்கு வந்த தாழிசைகளாக ஆடாமோ ஊசல் என்ற மகுடமுடைய ஊசற்

பாட்டுக்கள் மூன்று உள்ளன. தத்துவராயர் தம் பாடுதுறையுள் ஒரு பொன்னூசல் பாடியிருக்கிறார். பிற்காலத்தில் பிள்ளைப் பெருமாளையங்கார் (?) பாடியது திருவரங்க நாதர் ஊசல்.

### வருக்கமாலை

**மொழிமுதல் உயிர்மெய் வருக்கத்தொகை போற்றி**
**அகவலாற் புகல்வது வருக்க மாலை.**

சித. 33. வருக்கமாலை என்ற பண்டைய நூல் இல்லை. எனினும் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் என்ற நீதி நூல்களும் (12 நூ.) அப்பர் சுவாமிகள் பாடிய சித்தத் தொகைத் திருகுறுந் தொகை என்ற பதிகமும் (30 பாடல்) 7 நூ. வருக்க முறையைப் பற்றி அமைந்தவை. கலம்பகத்துள், வரியின் முதல் எழுத்துக்கள் அ முதல் ஔ வரை அமைய 12 அடிகள் உடைய ஆசிரியப்பா வருக்க மோனை என்ற பெயரில் காணப்படும்.

### மும்மணிமாலை நான்மணிமாலை

**வெண்பாக் கலித்துறை அகவற் பாமூ[ன்று**
**அந்தா தித்]து முப்ப·ஃது இயம்பின்**
**மும்மணி மாலை,இம் முப்பதின் மேல்வர**
**ஆசிரி யம்பத்து அந்தா தித்து**
**நவில்வ தாகும் நான்மணி மாலையே.**

சித. 33. மும்மணி மாலைக்கு எடுத்துக்காட்டுக்கள் இல்லை. நான்மணி மாலைகள் பல. பழமையானது பட்டினத்தார் பாடிய கோயில் நான்மணி மாலை (10 நூ).

### அலங்கார பஞ்சகம்

**11 ஆதிப்பாக் கலித்துறை யாசிரிய[ம் வஞ்சி]**
**மனவிருத் தத்தோடு வண்ணம் இசையஈ,**
**ரைந்தின் அலங்காரத் தந்தா தித்துப்**
**பாடுவது அலங்கார பஞ்சக மென்ப.**

சித. 34. பண்டைநூல் இல்லை. ஈரைந்து என்று இவர் சொல்வது பிற பாட்டியல்களில் ஐந்தென்றே சொல்லப்படுகிறது.

ஐந்தைந்தாக நூறுவரையில் இருக்கலாம் போலும். சிதம்பரப் பாட்டியல் 'வகுப்பு ஐந்தால் உரைத்தல்' என்றே சொல்கிறது. இது ஒரு வண்ணப் பிரபந்த மாகும்.

### அட்ட மங்கலம்

**விரும்பும் எட்டு மனவிருத்தம் தோறும்**
**தெய்வங் காப்பாய்ச் சிறந்த சுபகரத்து**
**அந்தா தித்து இயம்பல் அட்டமங் கலம[ாம்];**

சித. **34.** பண்டைப் பிரபந்தம் இல்லை.

### நவமணிமாலை, ஒருபா ஒருபது

**விருத்தமொன் றந்தாதித் தொன்பது வழங்கல்**
**நவமணி மாலை;ஓர் பாவின்அந் தாதித்து**
**ஈரைந்தாகச் சொல்வது ஒருபா ஒருபதாகும்.**

சித. **34.** நவமணிமாலை நவரத்தினமாலை என்று சொல்லவும் பெறும். அந்தாதித்து வரவேண்டும் என்பதைச் சிதம்பரப் பாட்டியல் சொல்லவில்லை. வேதாந்த தேசிகர் பாடிய நவரத்தினமாலை, பல்வகை விருத்தங்களும் கொண்டது. (14 நூ.) திருஞான சம்பந்தர் பாடிய நவரத்தினமாலை, மணியே என்ற மகுடமுடைய கட்டளைக் கலித்துறை. (16 நூ). இரண்டும் பத்துப் பாடல்கள் கொண்டவை. ஒருபா ஒருபது, பதினோராந் திருமுறையில் பட்டினத்தார் பாடிய திருவொற்றியூர் ஒருபா ஒருபஃதாகும் (10 நூ). நவமணிமாலை வெண்பா முதலாக வேறு பட்ட பாவும் பாவினமுமாக ஒன்பது செய்யுள் அந்தாதித்துப் பாடுவது என்று சதுரகராதி கூறுகிறது. இக்கருத்து இலக்கண விளக்கப் பாட்டியலைத் தழுவிச் சொல்லப் படுகின்றது.

### பல்சந்த மாலை

**12** **அகவல் விருத்தம் வகுப்பிவை யொன்றிற்**
**பத்து முதலா நூறு வரைபல்**
**சந்த மேவர அந்தா தித்துச்**
**சாற்றுவது பல்சந்த மாலை என்ப**

சித. **35.** நூல் இல்லை.

## ஆற்றுப்படை

[புலவர் பா]ணர் கூத்தர் பொருநர் என்று
ஓது நால்வருள் ஒருவரை அகவலால்
அங்கொரு தன்மை ஆற்றுப் படுத்துப்
பகர்வது ஆற்றுப் ப[டையென மொழிப].

சிந. **35.** இந்நான்குக்கும் எடுத்துக்காட்டுகள் முறையே திரு முருகாற்றுப்படை, சிறுபாண் பெரும் பாணாற்றுப் படைகள், கூத்தராற்றுப்படை என்னும் மலைபடுகடாம், பொருநராற்றுப்படை என்னும் இவை நான்கும் பத்துப்பாட்டுள் அடங்கியவை. இவை நான்கும் சங்க இலக்கியமான பத்துப்பாட்டுள் - அடங்கியவை; காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன். நான்கும் தனிநிலைச் செய்யுளான நீண்ட அகவற்பாக்கள். தொல்காப்பியன் பொருளதி காரத்தில் (நூற்பா 91)

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்

என்று கூறியிருப்பது இங்குக் காணத்தக்கது. கூத்தர், பாணர், பொருநர், விறலியர் என்ற நான்கு ஆற்றுப்படைகளை அவர் குறிப் பிட்டார். 'பக்கம்' என்றதனானே அச்செய்யுட்களைக் கூத்தராற்றுப் படை, பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, விறலியாற்றுப்படை, முருகாற்றுப்படையென வழங்குதலும் ஆற்றினருமையும் அவனூர்ப் பண்பு முதலியனவுங் கூறுதலுங் கொள்க. பன்னிருப்பாட்டில் புலவர், பாணர், பொருநர், விறலியர், கூத்தர் என்ற ஐவரைக் கூறுகின்றது. இவ்வைவருள் விறலியர் என்பது பிற்காலத்தில் விடுபட்டது போலும். ஒரு கால் பாணர் என்பதில் பெண்பாலான விறலியரும் அடங்கினர் என்று ஆசிரியர் கருதினர் போலும். ஆற்றுப்படை நூல்கள் பிற்காலத்தில் பல. புலவராற்றுப்படையே மிகுதி. நக்கீரருடைய திரு முருகாற்றுப்படை புலவராற்றுப்படை எனக்கருதிய போதிலும் அது புலவராற்றுப்படை யாகாது என்பது நச்சினார்க்கினியர் கருத்து (நூற்பா 91 உரை) ஆற்றுப்படை தனிப் பிரபந்தமாய் இருப்பது அன்றி கலம்பகத்தில் உறுப்பாகவும்

வருவதுண்டு. புறப்பொருள் வெண்பாமாலையில் நான்கு பாடல்கள் முறையே பாணர் கூத்தர் பொருநர் விறலியர் ஆற்றுப்படைகளைக் கூறுகின்றன (216—219).

*பாதாதிகேசம், கேசாதிபாதம், அங்கமாலை*

பாதாதி கேசம் கேசாதி பாதம்
எண்ணுன் குறுப்பும் ஏற்க வருணித்துக்
கலிவெண் பாவால் கட்டுரை செய்வது;
அவ்வப் பெயரின் அங்க வகை[யை
விள]ம்பி யொழுங்கின் வெளிவிருத் தத்தால்
வழுத்துவது அங்க மாலை யாமே.

**சிந. 35.** பாதாதி கேசம் கேசாதி பாதமாகிய வருணனைகள் தோத்திரங்களிலும், பேரிலக்கியங்களிலும் வருமேயன்றித் தனித்து வருவதில்லை. கலிவெண்பாவாலான நூல் இல்லை. பெரியாழ்வார் திருமொழியில் முதற்பத்து இரண்டாம் பதிகம் 21 பாடல்கள் பாதாதி கேசமான அமைப்புக் குறிப்பிடத் தக்கது. இதனுள் குறிப்பிட்ட உறுப்புக்களைப் பின்னும் விரித்து அமைத்துள்ளன பன்னிரு பாட்டியலும், நவநீதப் பாட்டியலும். அங்கமாலைக்கு எடுத்துக்காட்டு அப்பர் சுவாமிகள் பாடிய திரு அங்க மாலை (7 நூ).

*மங்கல வெள்ளை, மெய்க்கீர்த்தி வஞ்சி*

மாசில் குலமகளை வகுப்பு வெண் பாவினுல்
[வருபொரு ளுரைத்தலாய் ஒன்ப] தொன்ப
தாகப் பாடின் மங்கல வெள்ளை;
வஞ்சிப் பாவிற் கிரீட வேந்தர்
மெய்க்கீர்த்தியை வருத்து மெய்ம்மையி லு[ள்ள
கீர்த்தி யுரைப்பதுமெ]ய்க் கீர்த்தி வஞ்சி.

**சிந. 36.** வகுப்பு-சந்த விருத்தம். மங்கல வெள்ளை நூல் இல்லை. மங்கல வள்ளை என்னவும் பெறும். சோழர் போன்ற பேரரசர் சாசனங்களில் வரும் பிரசஸ்தி என்கிற தொடக்கப்பகுதி யாகிய மெய்க்கீர்த்தி தவிர வேறு இப்பெயருள்ள தனிப் பிரபந்தம் இல்லை.

*பெருமகிழ்ச்சி மாலை, நாம மாலை, கைக்கிளை மாலை*

குணப்பெய ரடுக்கிக் கொம்பனை யார்க்கு
வஞ்சியின் அகமிக மகிழ உரைப்பது
பெருமகிழ்ச்சி மாலை; இ[ப்படி ஆடவற்கு]
நயந்து பாடுவது நாம மாலை;
காமம் ஒருதலையது கைக்கிளை மாலை.

சித. 36. பெருமகிழ்ச்சி என்பது, பெரும் புகழ்ச்சி மாலை என்றும், புகழ்ச்சி மாலை என்றும் பிற பாட்டியல் நூல்களிற் காணப் படுகிறது. கைக்கிளை மாலைக்கு ஆசிரியமும், வஞ்சியும் விலக்கு. இப்பிரபந்தங்கள் இல்லை. வஞ்சிப் பாட்டில் பெண்ணைப் பாடினால் புகழ்ச்சிமாலை; ஆடவனைப் பாடினால் நாமமாலை. கைக்கிளை மாலை என்ற தலைப்பினுள் தலைவிக்குப் பருவரல் விளைப்பவர் இருபத்திருவர், காமன் ஐங்கணை என்ற பொருள்களும் பன்னிருபாட்டியல் கூறும்.

*உலா*

14 தேவர் மக்களிற் சிறந்தோன் [செவிலியர்
பாங்கினும் கை]யினும் பொலியப் பவனிவரு
குடிமகன்; குலமுத லியஅடை யாளம்
குறிப்பிற் கலிவெண் பாவிற் கழறி
அவனைத் தெரு [வணைய ஏழ் பருவத்துக்
கண்டோ]ர் உவக்கக் கவின்தரும் வயதேழ்
பேதை; பன்னொன்று பெதும்பை; பன்மூன்று
மங்கை; பத்தொன்பான் மடந்தை; ஐயைந்து
அரிவை; முப் பஃது தெரிவை; நாற்பான்
பேரிளம் பெண் எனும் பெண் முத லானோர்
தொழ உலாப் போந்தது உலா.

சித. 37. உலாப் பிரபந்தத்தைப் பன்னிரு பாட்டியல் மிகவும் விரித்துக் கூறும் (24 நூற்பா). வயதினளவும் வேறுபடும். அங்கு பேதை 5-8; பெதும்பை 9-10; மங்கை 11-14 மடந்தை 15-18; அரிவை 24 வரை; தெரிவை 29 வரை; பேரிளம் பெண் 36. இதுவன்றி மேலும் ஒரு சூத்திரத்தில் வயதே சொல்லப் பட்டிருக்கவும் காணலாம். சூத்திரம் 221-7. அடிக்குறிப்பிற் பார்க்க. உலா உலாப்புறம், புறஉலா எனவும் சொல்வதுண்டு. சேரமான் பெருமாள் பாடிய ஆதி உலாவே முதல் உலாவாகும். (8 நூ.)

### இன்பமடல்

தலைவன் பேர்க்கு
உற்ற தொடை [எதுகை யொ]ன்றிலீன் பத்தை
உயர்த்தொரு தலையா யோங்கிய காமத்து
இசைப்ப தாகும் இன்ப மடலே.

சித. **37.** பன்னிரு பாட்டியலே இக்கருத்தை விரித்துரைக் கிறது. இன்பமடல், வளமடல் என்னவும் பெறும். தத்துவராயர் இதைக் கலிமடல் என்பார். பெண்டிர் மடலேறார்; கடவுளர் தலைவராய் வருடமிடத்து அவரும் மடலேறுதல் உண்டு என்பது மரபு. இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டுக்கள் திருமங்கையாழ்வார் பாடிய பெரியதிருமடல், சிறியதிருமடல் இரண்டும் (8 நூ.)

### உலாமடல்

**15** தருணநன் மாதையோர் தலைவ[ன் கண்டு
உ]றுப்புநல னுவந்து உட்குறிப் புரைந்தும்
கனவினிற் சேர்ந்தும் காமுற இணையான்
துணிவன் மடலெனச் சொல்லுவது உலாமடல்.

சித. **38.** உலா மடலுக்கு இலக்கியம் காளமேகப் புலவர் செய்த சித்திரமடல் போன்றவை (15 நூ.)

### அனுராக மாலை, தூது

பாங்கற்குப் புணர்[ந்த கனவினால் தனது
இன்னல் வருணித்தல் அனுராக மாலை;
இருதிணை யுடன் அமை யயலை உரைத்துத்
தூதுசொல விடுவது தூது. இவைகலிவெண்
பாவினால் விரித்துப் பகர்[வது மரபே].

சித. **38.** சிதம்பர பாட்டியலானது, உலா, இன்பமடல், உலா மடல், அனுராக மாலை, தூது என்ற ஐந்தும் முற்பா (வெண்பா) என்று மட்டும் சொல்கிறது. கலிவெண்பா என்று சொல்லவில்லை. இவ்வைந்தனுள் அனுராகமாலை இன்று இல்லை. ஏனைய நான்கும் உள்ளன. தூது என்ற பிரபந்த வகையை முன் வந்த பாட்டியல்கள் கூறவில்லை. இந்நூலே முதலில் கூறுகிறது. தூதுரைத்தற்கான

வாயில்கள்பத்து என்று பின் வந்த நூல்கள் உரைக்கும். உமாபதி சிவாசாரியர் தம் குருவின் மீது பாடிய நெஞ்சுவிடு தூது என்ற பிரபந்தமே முதல் தூதுப் பிரபந்தம் (1480).

*பொருள், இடம், காலம், தொழில் பற்றிய மாலை, மஞ்சரி, காஞ்சிமாலை, முல்லை, கலி, சதகம்*

**16** கருது பொருள்இடம் காலம் தொழிலின்
முப்பான் நாற்பான் எழுபான் தொண்ணூறு
நூறுன் வெண்பாக் கலித்துறை யினுத[ல்
மன்னுமவ் வெ]ண்ணுன் மாலை மஞ்சரி
காஞ்சி மாலை முல்லைக்கலி சதகமென்று
இயலும் செய்யுட் கேற்ற பெயரே.

சித. **38.** பொருள், இடம், காலம், தொழில் இந்நான்கை 30, 40, 70, 90, 100, வெண்பா அல்லது கலித்துறையால் பாடுவது அவ்வவ் வெண்ணமைந்த மாலை, மஞ்சரி, காஞ்சி மாலை, முல்லை, கலி, சதகம் என்று பெயர் பெறும். உதாரணங்கள் :- கார் நாற்பது —காலம் ; இன்னு நாற்பது —பொருள்; ஈங்கோய் மலை எழுபது— இடம் ; களவழி நாற்பது, ஏர் எழுபது—தொழில். இவ்வாறு பிறவும் கொள்க. திருத்தொண்டர் சதகம், திருச்சதகம்— பொருளால், நூறு. திருப்பண்ணியர் விருத்தம்—தொழிலால், எழுபது. தொண்ணூறு பாடல் உடைய நூல் எழுந்ததாகத் தெரியவில்லை.

*வெட்சி மாலை முதலிய ஏழு, தானைமாலை*

**17** வெட்சிநிரை கொள்ளல் ; த[விர்தல் கரந்]தை
மாற்றூர் பாற்செலல் வஞ்சி ; ஊன்றல்
காஞ்சி ; மதிலைக் காத்தல் நொச்சி ;
சுற்றல் உழிஞை ; தும்பை பொருதல் ;
வென்று மிகுபுகழ் [விளைத்தல் வா]கை ;
தானையை விரித்தல் [தானை மாலை] ;
இவை யொன்பதும்
எப்பாட் டாலும் முப்பஃ தியம்பின்
அப்பெயர் வர்க்கத்து அவ்வம் மாலை.

சித. 39. இங்குச் சொல்லப் பட்டவை வெட்சிமாலை, கரந்தை மாலை, காஞ்சிமாலை, நொச்சிமாலை, தும்பைமாலை, வாகைமாலை என்ற எட்டும், மேலும் தானைமாலை என்ற ஒன்றும் ஆக ஒன்பது. இவை எப்பாவாலும் முப்பது சொல்லத்தக்கன. இருபத்தேழு நட்சத்திரங்களையும் ஒட்டித் தானையின் அகலத்தை உரைப்பது தானைமாலை நூல் இல்லை.

### தாரகை மாலை

தாரகை [இருபத் தேழையும் தகைபெறச்
சொல்லணி வகுப்பி]ல் தூசி யணிதக
வழுத்துதல் தாரகை மாலை என்ப.

சித. 39. தூசிப் படையின் அணிவகுப்பை நட்சத்திரங்கள் இருபத் தேழுடன் பொருத்திச் சொல்வது தாரகை மாலை. (பாட்டு 27 என்பது பன்னிரு பாட்டியல் 305) நூல் இல்லை.

### தசப் பிராதுற்பவம்

18. பகர்தெசப் பிராதுற் பவம்பத் தான
அரிபிறப்பு ஆசிரிய விருத்த[ம் பத்தால்
வாழ்கென] வழுத்துதல்;

குறிப்பு:— சித. 40. இது உற்பவமாலை, அரிபிறப்பு, தசப்பிரா துற்பவ மாலை, என்ற பெயர்களாலும் வழங்கப்பெறும்; தசாவதாரங் களையும் ஆசிரிய விருத்தத்தாற் பாடித் தலைவனைக் காக்கவெனத் துதித்தல். இப்பெயருடைய அல்லது இப்பொருளுடைய நூல் எதுவும் தமிழில் இல்லை.

### நாழிகை வெண்பா

ஈசர்க்கு எண்ணான்கு
திருந்து நாழிகையிற் சிறப்பின் வெண்பாவால்
நவில்வ தாகும் நாழிகை வெண்பா;

சித. 40. இப்பிரபந்தப் பெயர் நாழிகைக்கவி, செய்யுள், கடிகை வெண்பா என்றும் வழங்கப்படும். அரசருக்கும் தேவருக்கும் உணர்த்தும் நாழிகைகளை முப்பத்திரண்டு வெண்பாவாற் பாடுவது.

இந்நூல் ஈசர் என்று மட்டும் கூறுகிறது: சிதம்பரப் பாட்டியல் 'மன்னர்க்கு ஈசர்க்கு' என்று அரசரையும் சேர்த்தே கூறுகிறது. நவநீதப் பாட்டியல் உரை (2) வெண்பா முப்பத்திரண்டு பாடுவது கைக்கிளை என்று கூறுகிறது. இது பொருந்துவதாகத் தெரியவில்லை. நாழிகை வெண்பாப் பிரபந்தம் இன்று இல்லை. பன்னிரு பாட்டியல் பாட்டு முப்பதென்றே கூறும் (292.)

*செருக்கள வஞ்சி, வரலாற்று வஞ்சி, ஆனைத் தொழில்.*

செருக்கள வஞ்சி [செருக்கள]ங் கூறல்;
வரலாற்று வஞ்சி பலவரலாறு ஓதல்;
பொருமதக் களிற்றைப் பொருநர் எதிர்கண்டு
அமரிற் சேர்த்தல் ஆனைத் தொழிலிவை
[முந்திய பா]வின் மொழிவ தாமே.

சித. 40. செருக்கள வஞ்சி, பத்து விருத்தம் பாடுதல் எனப் பன்னிரு பாட்டியல் கூறும்; செருக்களத்தில் வீரரும் மாவும் பட, பேயும், கழுகும் அவர் உடலைத் தின்று ஆடுவதைக் கூறுவது.

வரலாற்று வஞ்சி, குலமுறை சிறப்பு முதலியவற்றை வஞ்சிப் பாவால் கூறுவது. கொல்லும் யானையை அரசன் பற்றிச் சேர்த்தல் யானைத்தொழில்; யானை யடக்கும் தொழில் போலும்; வாதோரண மஞ்சரி, யானைவஞ்சி என்றும் சொல்லப்பெறும். பன்னிரு பாட்டியல் இதற்குப் பதின்மூன்று நூற்பா கூறுகிறது; யானையின் இலக்கணம் முதலியனவும் விரிவாய்க் கூறுகிறது. இந்நூல்கள் இல்லை.

*பரணி*

19. படைபுக்கு ஆயிரம் பகடற ஒன்னார்
போரில் எதிர்ந்து பொரும்அர சனுக்குக்
கடவுள் வாழ்த்து, கடை[திறப்பு, பாலை]
நிலம், காளி கோட்டம், நிலையிய கழுது,
காளிக்குப் பேய்சொலல், அப்பேய்க்குக் காளி
சொலல், அதனால் தலைவன் கீர்த்தி அருளுதல்,
அவன்செலல், [புறப்பொருள் தோ]ன்ற ஆற்பரித்துப்
போராடல், பொருகளம் விரும்பல்: இவற்றை
நாற்சீ ராதியின் நண்ணுமீ ரடியின்
ஏருது பரணி இயம்புதல் நெறியே.

சிந. 41. பகடு-யானை. பன்னிரு பாட்டியல் எழுநூறு யானை என்று கூறும் இச்சூத்திரம் கூறும் உறுப்புக்களுக்கும் மேலாக செருமிகு களத்திடை அடு கூழ்வார்த்தல், பரவுதல் முதலிய உறுப்பு களைப் பன்னிரு பாட்டியல் (241) கூறும். பரணி இலக்கியங் களுள்ளும் காணப்படும். கிடைக்கின்ற முதற் பரணி கலிங்கத்துப் பரணி (11நூ); இதற்கு முன்னும் பரணிப் பிரபந்தங்கள் சில செய்யப் பெற்றிருந்தன.

### பெருங்காப்பியம்

**20.** பெருங்காப் பியநிலை பேசுங் காலைப்
பாடுநெறி வணக்கம் பாதவாழ்த்து இவற்றொன்று
ஏற்புடைத் தாகி முன்வர வியன்று
நாற்பொருள் ந[யக்கும் நடைநெறித் தாகி
தன்னிக ரில்லாத் தலைவ]ன் மலைகடல்
நாடுநகர் பருவம் நீடும் இருசுடர்த்
தோற்றமென் றினைய தொகுதியிற் புனைந்துபெண்
வேட்டல் முடிகவித்தல் பூம்பொழில் நுகர்தல்
புனலாடல் கள்ளுண்டல் மகிழ வூடல்
புதல்வரைப் பெறுதல் கலவியிற் களித்தல்
இன்ன செய்கையின் நன்னடைத் தாகி
மந்திரந் தூது செலல்,போர் வென்றி
சந்தியிற் றொடர்ந்து சருக்கம் இலம்பகம்
பரிச்சேதம் என்னும் பான்மையின் விளங்கி
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றவர் புனையும் பெற்றிய தாமே.

சிந. 42. இந்நூற்பா முழுமையும் அப்படியே பெருங்காப்பிய இலக்கணங் கூறுகின்ற தண்டியலங்காரம் எட்டாம் சூத்திரத்தை எடுத்து வைத்திருக்கிறது. இந்நூலாசிரியர் தம் நினைவிலிருந்து இச் சூத்திரத்தை அமைத்துக் கொண்டார் போலும்; அதுபற்றி எழுந்த சில மாறுதல்கள் மட்டும் இதில் காணப் படுகின்றன.

### காப்பியம், புராணம்

**21.** கூறு மதிற்சில குறைபா டெனினும்
பெருங்காப் பியத்திற் பிறிதென [வாகா]

அறம்பொருள் இன்பம்வீ டவற்றின் மேலாம்அவ்
அறமுத னன்கினு மாக்கப் பெறுவது
காப்பியம்; புராணமாய்க் கருதப் பெறுமே.

சிது. 43. புராணத்தைப் பிரபந்த வகையுடன் சேர்த்து முந்தைய ஆசிரியர் கூறினர் இலர். இந்நூலாசிரியர் காலத்திலும், இதற்கு முன்னும் புராணங்கள் மிகவும் அதிகமாகச் செய்யப் பெற்றிருந்தமையால், இவர் இதையும் ஒரு பிரபந்தவகை என்று கூறினர் போலும்.

*3.* பொது இலக்கணம்

நூற் பெயர் எய்தும் முறை

22. ஆசி[ல் முதனூல் பொருளோடு அறி]வு
தன்மை மிகுதியே செய்வித்தோன் கருத்தன்
இடுகுறி இவற்றால் எய்தும் பெயரே.

சிது. 43. முதனூலால் பெயர் பெற்றது—இராமாயணம், பாரதம். பொருளால் பெயர் பெற்றது—புறநானூறு. அளவால் பெயர் பெற்றது பதிற்றுப்பத்து, நூற்றந்தாதி. தன்மையால் பெயர் பெற்றது சிந்தாமணி, நன்னூல். மிகுதியால் பெயர் பெற்றது—களவியல்; செய்வித்தோனால் பெயர் பெற்றது—வச்சணந்தி மாலை, பாண்டிக்கோவை. கருத்தனால் பெயர் பெற்றது—தொல்காப்பியம், திவாகரம். இடுகுறியாற் பெயர் பெற்றது—நிகண்டு.

கையறத்துக்கு ஆகாத பா

23. கலியும் வஞ்சியும் கையறம் உரைத்தற்கு
ஆகா என்ப அறிந்திசி னோரே.

சிது. 43.

வாழ்த்துக் குரிய பா

எவையும் வாழ்த்தினுக்கா மேவும் பாவே.

சிது. 43.

நாற்சாதிக்கும் உரிய பா

24. வெண்பா முதனாற் பாவும் அவ்வவற்றோடு
ஒத்து நடைபெறும் ஒருமூன் றினமும்

மறையவர் முதல்நா[ன் மரபின்வந் தோ]ற்குப்
பா மர பென்ப அறிந்திசி னோரே.

இக்கருத்து, சிதம்பரப் பாட்டியலில் இல்லை. அந்தணர், அரசர், வைசியர், வேளாளர் என்னும் நான்கு வகுப்பிற்கும் முறையே வெண்பா, அகவல், கலிப்பா, வஞ்சிப்பா என்ற பாக்களும் அவற்றின் பேதங்களும் உரியன (நவநீதப் பாட்டியல் 80).

*நாற்பாவுக்கும் உரிய நிலம் நிறம் நாள்*

**25.** முல்லை குறிஞ்சி மூசு மருதம்
நெய்தல் என்ன எய்து நானிலமும்;
திகழும் வெண்மையும், செம்மையும் பொன்மையும்
கருமையு மாகக் கருது நானிறமும்;
அறுமீன் கொடுநுகம் அனுடம் அவிட்டம்
என்னும் நான்குமென்று இன்னவை முறையே
வெண்பா முதல[ா மேவுநா]ற் பாவும்
கொள்ளும் மரபாம் குறிக்குங் காலே.

இது சிதம்பரப் பாட்டியலில் கொள்ளப்படவில்லை. இப்பகுதியை இந் நூலாசிரியர் பன்னிரு பாட்டியலைத் தழுவி அமைத்தார் (162-5). ஆனால் இங்குள்ள முறை அந்தணர் அரசர் வேளாளர் வைசியர் என மாறி உள்ளது கவனிக்க.

*நாற்பாவுக்கும் உரிய ஓரை (இராசி)*

**26.** ஆசிரியம் வஞ்சி கலிவெண் பாவென்று
இம்முறை யாய்வைத் தியம்பு[ங் காலை
மீனம் கடகம் தேளே என்றும்
சிங்கம் தனுவே மேடம் என்றும்
இடபம் கன்னி மகரம் என்றும்
துலாம்குடம் மிதுனம் ஓரை என்றும்]
ஒட்டி ராசிமரபு ஓர்தல் நெறியே.

இங்கு இராசிகள் பன்னிரு பாட்டியலைத் தழுவிப் பெய்யப் பட்டன; இப்பகுதி ஏட்டில் இறந்து போயிற்று; முன் போல அந்தணர்: அரசர், வேளாளர், வணிகர் என்று முறையே கொள்க.

### நாற்பாவுக்கும் உரிய கோள்

27. மதிகுரு வெள்ளை; [செங்கதிர்] செவ்வாய்
இன்னகவல்; புகர்வஞ்சி; புந்திசனி கலியே;
கோளமை நாற்பாவும் கொள்ளும் மரபே.

இரண்டாம் அடி பிழைபட்டிருந்தது. பன்னிரு பாட்டியல் கொண்டு திருத்தி அமைக்கப்பட்டது. மதி, குரு—சந்திரன், வியாழன்; வெள்ளை—வெண்பா; செங்கதிர்—சூரியன்; புகர்—சுக்கிரன் (வெள்ளி); புந்தி—புதன்.

### கவிஞன் இலக்கணம்

28, 29. பாடுமுறை செய்யுட் பாவின் விகற்பின்
தெளிந்து நூற்புலமையும் செப்பும் ஒருவன்
பாட வல்லபா வலன்தகு நலம்குணம்
தெய்வம் கொள்கை மேம்பாட் டொழுக்கம்
செல்வம் மேன்மை உளனாய், உட்புறம்
[அழகும் சமயநூல் பிறநூல் அறிந்து]
உவக்கும் பிறபாடை நூல்இலக் கணநூல்
தேர்ந்து விரைவிற் பாடுநா வினனாய்,
உறுகண் ணுறுப்பிற் குறைவு [நோய்] இலனாய்,
[நாற்பொருள் உணர்ந்துநற் க]லைக்கு ஞானியாய்ச்
செப்பும் நான்கும் புலமைத் திறனே.

சித. 44. நான்கு - மேன்மையுளனாய், நாவினனாய், நோயிலனாய், ஞானியாய் இருத்தல். காகிதப் பிரதியில் 28 என்ற பாடல் எண் இடப்படவில்லை; முடிவில் மட்டும் 29 என்ற எண் உள்ளது. ஆகவே இந்நூற்பாவுக்கு 28, 29 என்ற எண்ணிட்டோம். ஒருகால் பிறைக் குறியிட்ட இடங்களில் இறந்துபோன வரிகளோடு 28 என்ற நூற்பா முடிந்திருக்கலாம்.

### நாற்கவி

30. அவற்றுள்,
ஆசுமுதல் நாற்பாவும் அவனியில் மெச்சப்
பாவினா[ங் கொண்டு] பாடுவோன் கவி[யே];
நாட்டிய அரும்பொருள் செப்பொருள் நடையாக்

காட்டி யேவிப கரிப்போன் கமகன்;
ஏதுவும் மேற்கோளும் எடுத்துக் காட்டிய
தன்மையில் நன்கே தன்கோள் நிறீஇ
வாதிற் பிறர்கோள் மறுப்பவன் வாதி;
அறமுதல் நூற்பொருட் பயனும் அத்திறத்திற்
கேட்கவே [திறம்படப் பாடு]வோன் வாக்கியென்று
இசைக்கும் மன்நாற் புலமையோன் இயல்பே.

நவநீதப் பாட்டியல் 87ஆம் சூத்திரமும் அதன் உரையும் இந்நால் வகைக் கவிகளின் இயல்பை நன்கு பல மேற்கோள்களுடன் விளக்கும். திவாகர நிகண்டும் பிங்கல நிகண்டும் காண்க.

### *அரங்கேற்றற் சிறப்பு*

**31.** செய்யுட் கொளுமிடம் சித்திரத் துகிலின்
அரத்த விதானத்து அலங்கல் நாற்றித்
[தோரணம் க]தலித் துவசம் உயர்த்திப்
பூரண கும்பம் பொன்முளைப் பாலிகை
வெண்பொரித் தீபம் மிளிர்தர அமைத்துப்
பல்லியம் இயம்பப் பாவையர் ஆடப்
பாணரும் மகளிரும் பல்லாண் டிசைதர
அந்தணர் நசைதர வாழ்த்த ஒண்பூ
மலராடை புனைந்தொரு தவிசின் மேவி
எதிராய் வேறுமோர் தவிசின் இரு[ந்து
மங்கலப் பாடல் ஏ]ற்றுள மகிழப்
பொன்புவி வத்திரம் பூண்பன பிறவும்
உதவி ஏழடி புலவ னுடன்போய்
மீள்வது கடனென விளம்பினர் மேலோர்.

சித. **45.** பிங்கல நிகண்டிலும் அரங்கேற்றம் விரிவாய்க் கூறப்பட்டிருக்கக் காணலாம். ஒண்பூ-வெண்பூ.

### *தமிழ்க்குலப் பெண்*

**32.** [மொழி]யின் மதுரங் கனிந்த பொருட்கவி,
சொல்வாய் யோனி சூதகம் இலக்கியம்
வாய்ந்தநா இலிங்கம் மனம்வாக் குழைகல்
கலவி [கரணம் கருது]வ வேட்கை

விந்து இலக்கணம், மேவல் நிறுவுதல்
கருப்பம் அக்கவியிற் காட்டுமுச் சீரிற்
சேர்ந்த எழுத்தே சேயாய் முற்றி
ஓங்கிடு சீ[ரென ஒண்சுவை கல]ந்து
சிறந்தமுச் சீரிற் பிறந்து வளர்தலால்
தமிழ்க்குலப் பெண்ணெனச் சாற்றல் தகுமே.

*பெண்ணின் சுற்றத்தார்*

**33**. தந்தை புலவன், தாயவள் தரித்திரம்,
அக்கவிப் பொருளை அணியாய் விரித்து
வசனிக்கக் கேட்போர் மாதவர் ஆகும்;
சந்தப் பெ[ாருளைச் சபையினர் உளங்கொளச்]
சதிரிற் படிப்போன் தமைய னகும்;
பொலிந்த குழுவிற் புகழ்ந்து கொள்வோர்
உறவின் முறைஎன்று ஓத லாகும்;
இன்பமுற் றதனை [எழிலுடன் கேட்டு]ப்
பரிசு கொடுப்போன் பர்த்தா ஆமே.

32, 33ஆம் பாடற் பொருள்கள் வேறெந்தப் பாட்டியலிலும் காணப் பட்டில.

*பரிசில் வழங்காதவன் அழிவு*

**34.** கொள்ளான் பனுவலைக் கொள்வோன் தனக்குப்
பெயர்முத லவற்றைப் [பெயர்த்தும் அழித்து
மீட்டொரு பேரின் விரைந்ததிற் சேர்த்தி]
மொழிந்த வழுக்களான் முன்மொழி எடுத்து
வைத்தவன் இயற்பெயர் தோறும் மான
செய்யுட் பெயர்த்துச் செந்நூற் சுற்றி
அதன்மிசைச் செம்மலர் அணிவுறச் சாற்றிக்
கவர்த்த தெருப்புறத்துங் கா[ளிகோட் டத்தினும்
[உவர்ப்புறு மயானத்து] மெருக்கஞ் சிரித்துப்
பாம்[புறை புற்றினும்]பாழ்மனை யிறப்பினும்
ஆங்கவன் தனைநினைந்து அகம்நொந்து சுடி[னே
ஈராறு திங்களில் இறுதி யாவ]ன்;
இங்ஙனம் இயற்ருது இதயம் நொந்துகொண்டு

இருக்கினும் கிளையொடும் இறுதி யாவனென்று
ஓதினது அகத்தியர் உண்[மைநூல் நெறியே.]

**சிந். 46.** பரிசில் கொடாதவன் அழிவான், அவனை அழித்தற்குப் புலவன் என்னென்ன செய்ய வேண்டும் என்று பிங்கலந்தையே முதல் முதலாக இரு நூற்பாக்களால் விரித்துக் கூறுகிறது. (1371-73) இந்நூலாசிரியர் இக்கருத்தை எடுத்துத் தம் நூலில் அமைத்தார். 'செந்தீக் கொளுத்த, ஈரறு திங்களின் இறுதி யாவன் என்று ஆதிப் புலவன் அறைந்த மொழியே' என்று பிங்கலர் கூற, அதை இவ்வாசிரியர் அகத்தியர் என்கிறார். இதையே சிதம்பரப் பாட்டியல் எடுத்து 'இஃதுண்மை அகத்தியன்தன் சொல்லே' என்று இருமுறை கூறுகிறது (46-47).

*குற்றமில்லாத பாட்டும் குற்றமுடைய பாட்டும் பலனும்*

**35.** எழுந்து முதலிய இலக்கணம் ஐந்தினும்
மங்கல முதலாய் வகுத்தமுன் மொழியினும்
சான்றோர் விதித்த தன்மையின் வழுவாது
தொடையின் முறையில் நிற்கக் கேட்கச்
செல்வமும் சீர்த்தியும் சிறக்கும், வாழ்நாள்
தருமகப் பேற்றொடு தரும முடைத்தாய்
மனத்துயர் நோயி[ன்றி மரபும் நீடும்;
வழுவுறத் தொகுக்கும் அக்கவி கேட்கில்
செல்வம் அகலும், தீரா நோயுறும்,
சுற்றமும் புகழும் சூனிய மாகும்,
கால மிருத்தும் க[டுகி வந்திடும்;
சகத்தவர்க் கீதன்றித் தேவர்க் கென்னிற்]
றப்பாதிப் பலன்கவி சாற்றின வற்கே.

**சிந். 47.** பிரபந்த மரபியல்பு முற்றும்.
ஆக இயல்பு ஐந்திற்குப் பாயிரம் செய்யுளியல்பு..................... மூலபாடம்[1] முற்றும். முருகனே தெய்வம்.

1. இங்கு விடுபட்ட பகுதி 'பொருத்தவியல், பொதுவியல், பிரபந்தமரபியல்' என்பதாகும்; இத்தனைக்கும் மூலபாடமே இந்த ஏடு. கிடைத்த பகுதி பிரபந்த மரபியல் மட்டுமே என்று தெரிகிறது.

# பிற் குறிப்பு

**பக்கம் 2, வரி 1 :** உரி இயல், தொடர்புபற்றி உவம மரபியல்களோடு இங்கு சேர்த்துக் கொள்ளப்பட்டது. உரி இயலிலிருந்து விரிந் தவை நிகண்டு நூல்கள்.

வரி 17 : மெய்ப்பாடு : அகம் புறம் இரண்டுக்கும் பொது. இருப்பினும் மிகுதிபற்றியே இங்கு அகப் பொருள்களோடு தொடர்புபடுத்திச் சொல்லப்பட்டது.

**பக்கம் 6, வரி 21 :** முத்தொள்ளாயிரம்; தொள்ளாயிரம் என்று எண்ணுப் பெயரால் வருவதால் இதுவும் இனிய நாற்பது ஐந்திணை ஐம்பது என்பனபோல ஒரு பிரபந்தமாய்க் கருதப்பட்டது போலும்.

**பக்கம் 14, வரி 6 :** பொருத்தம் பத்து ; இங்குப் பன்னிரு பாட்டியலாசிரியர் கொண்ட முறையைத் தழுவிப் பன்னிரு பொருத்தங்கள் சொல்லப்பட்டுள்ளன.

**பக்கம் 20, வரி 29-30 :** புறப்பொருள் பன்னிரண்டு; தொல்காப்பியர் புறப்பொருள் ஏழாகவே பகுத்துக் கூறுகிருர். ஆதலால் பிற்காலத்தில் பன்னிரண்டாகப் பிரித்து அதனுள் முதலாவதாக அமைந்த வெட்சிப் படலத்தை அவர் செய்திருக்கமாட்டார் என்பது தெளிவு.

**பக்கம் 24, வரி 33 :** பிரபந்தங்கள் 91 என்பதை 81 என்று திருத்திக் கொள்க.

• **பக்கம் 29, வரி 10 :** பண்டிலமும்-மண்டிலமும்.

**பக்கம் 56, வரி 2 :** பாட்டில் புலவர் என்ற சொல் இல்லை. புலவர் என்பதற்குப் பதிலாக விறலி என்றும் இருக்கலாம்; தொல்காப்பியர் விறலி என்றே கூறினுர் என்று அடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. எனினும் பண்டைக்காலத்தில் விறலியாற்றுப் படை என்ற தனிப்பாடல் புறநானூற்றில் காணப்பட்டபோதிலும், தனிப் பிரபந்தம் இல்லை. ஆனுல் சங்க காலத்துப் பத்துப் பாட்டினுள் முதற் பாட்டாகிய திருமுருகாற்றுப்படை புலவராற்றுப்படை என்றே உரைகாரர் கூறுவதால், இங்கு புலவர் என்ற பாடம் சொல்லப்பட்டது.

**க்கம் 42,** வரி *17 :* அப்பேணல்-அப்பேரால் என்று திருத்துக.

**பக்கம் 51,** வரி *16 :* இவ்வரியில் சீர் அமைதி பெறவில்லை. 'அகவல் வெண்பாக் கலித்துறை தம்மின்' என்று இருந்தால், சீர்கள் நிறைவு பெறும்.

**பக்கம் 53,** வரி *17 :* பத்து அங்கங்களுள்—ஒன்பது அங்கங்களுள் என்று திருத்துக.

**பக்கம் 58,** வரி *17 :* குடிமகன் - குழமகன் என்று திருத்துக. சில உலாப் பிரபந்தங்களுள் தொடக்கப் பகுதி குழமகன் என்றே கூறப்பெறும்; இதை முதனிலை என்பதுமுண்டு.

**பக்கம் 60,** வரி *3 : 1480—1310* என்று திருத்துக.

**பக்கம் 63,** வரி 22: பெருங்காப்பியம்: தண்டியலங்காரத்துக்குமுன் (12ஆம் நூற்றாண்டு) பெருங்காப்பியங்கள் பல தோன்றி யுள்ளன. ஆனால் அவற்றின் இலக்கணம் எங்கும் சொல்லப் பெறவில்லை. தொல்காப்பியர், பெருங்காப்பியம் என்ற பெயரைச் சொல்லாவிட்டாலும், அவர் கூறும் எண்வகை வனப்பினுள் தொன்மைதோல் விருந்து என்பவற்றுள் பெருங் காப்பியமும் அடங்கும் என்று உரையாசிரியர் கருதுவர்.

**பக்கம் 64,** வரி *11 :* அறிவு-அளவு என்று திருத்துக.

**பக்கம் 65,** நூற்பா 25 : நாற்பா ஆவன வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்ற முறையாகும். இவற்றுக்குள் ஐந்தாம் அடியில் சொல்லப்பட்டது; அறுமீன்–கார்த்திகை முதலாக ஏழு, வெண்பாவுக்கு; கொடுநுகம்-மகம் முதல் ஏழு நாள் ஆசிரியப்பாவுக்கு; அனுடம்–அனுடம் முதல் ஆறு நாள் கலிப்பாவுக்கு; அவிட்டம்–அவிட்டம் முதல் ஏழுநாள் வஞ்சிப் பாவுக்கு என்று கொள்க.

**பக்கம் 66,** நூற்பா 27 : நூற்பாக்கள் 24, 25, 26, 27 நான்கும் பாட்டியலுள் பொருத்த வியற் பகுதியின் கருத்தைக் கூறுவன.

## பிரபந்த வளர்ச்சி

பிரபந்தங்களை ஒரு தொகுப்பாக நோக்கும்போது, எத்தனையோ கோணங்களில் நோக்க இடமுண்டு. தொகுப்பான பிரபந்தங்கள் பொருளாலும் யாப்பாலும் பாகுபாடுகள், விரிவுகள், சித்திரக் கவி யமைப்பு, அகப்பொருள் புறப்பொருள் பற்றிய பாகுபாடு, பாடல்பெறுந் தலைவனுடைய பருவம் குறித்தவை, நெடும்பாட்டுக்கள், குறும்பாட்டுக்கள் என இவை எத்தனையோ வகையாராய்ச்சிக்கு இடங் கொடுக்கும். இங்கு இவற்றின் கால முறையை மட்டும் சுட்டிச் சில சொற்கள் கூற விரும்புகிறோம்.

சங்க காலம் என்று பேசும்போது, அங்கு ஆற்றுப்படைகளும் அந்தாதியும் (பதிற்றுப்பத்தில்) காண்கிறோம். அடுத்துச் சிலப்பதிகார மாகிய காப்பிய காலத்தில், பெருங்காப்பியம் (காப்பியம்) ஊசல் என்ற பிரபந்த அமைதிகளைப் பார்க்கிறோம்.

அடுத்ததாகிய பாசுர காலம் என்று கருதத்தக்க நீண்டகாலப் பகுதியில் (3-9 நூற்றாண்டுகள்) பலவகைப் பிரபந்தங்கள் எழுகின்றன. வெண்பா அந்தாதிகள் (காரைக்காலம்மையார் முதலாழ்வார்கள்); இரட்டைமணிமாலை, பதிகம் (இரண்டும் காரைக்காலம்மையார்) இவற்றின் காலம் 4-6 நூற்றாண்டுகளாகலாம்.

7 ஆம் நூற்றாண்டில் திருஞானசம்பந்தருடைய திரு எழுகூற்றிருக்கை மாலைமாற்று மாலை (இவற்றைப் பிரபந்தங்களாகப் பிரபந்த மரபியல் கொள்ளவில்லை). அப்பருடைய திரு அங்கமாலை, வருக்கமாலை (சித்தத்தொகைத் திருக்குறுந்தொகை). பாண்டிக்கோவை என்ற முதற் கோவையும் இக்காலத்துக்குரியது.

8 ஆம் நூற்றாண்டில் சேரமான் பாடிய திருக்கைலாய ஞான உலா, திரு ஆரூர் மும்மணிக்கோவை, பெரியாழ்வார் பாடிய பாதாதிகேசம், பிள்ளைத் தமிழ்ப் பகுதிகள், திருமங்கை மன்னன் பாடிய திருமடல் இரண்டு. (பாவைப்பாட்டு, பள்ளி யெழுச்சி).

9 ஆம் நூற்றாண்டில் மாணிக்கவாசகர் பாடிய ஊசல் (திருப்பொன்னூசல்), சதகம் (பதிற்றுப்பத்தந்தாதி எனத்தக்க திருச்சதகம்), தசாங்கம். நானூற்றுக்கோவை (திருக்கோவையார்). கலித்துறை அந்தாதி (நம்மாழ்வார் பாடிய திருவிருத்தம்). கலம்பகம் (நந்திக் கலம்பகம்).

10 ஆம் நூற்றுண்டில் நான்மணிமாலை, ஒருபா ஒருபது (பட்டினத்தார் பாடிய கோயில் நான்மணிமாலை; திருவொற்றியூர் ஒருபா ஒருபது), மெய்க்கீர்த்தி (முதல் இராசராசன் ஆட்சியில் தொடங்கு கிறது).

11 ஆம் நூற்றுண்டு - பரணி (கிடைக்காத கொப்பத்துப்பரணி கூடல் சங்கமத்துப் பரணி; கிடைக்கிற முதற் பரணி கலிங்கத்துப் பரணி 1105).

12 ஆம் நூற்றுண்டு - புராணம் (திருத்தொண்டர் புராணம்), தனி ஆண்பாற் பிள்ளைத்தமிழ் (ஒட்டக்கூத்தர் பாடிய குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்); ஆட்டப் பாடல்களாக 100 வகைகளை அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகிறுர்.

13 ஆம் நூற்றுண்டு - இருபா இருபது (அருணந்திசிவாசாரியர்).

14 ஆம் நூற்றுண்டு - தூது (உமாபதி சிவாசாரியர் பாடிய நெஞ்சு விடு தூது).

15 ஆம் நூற்றுண்டு - உலா மடல் (காளமேகப்புலவர் பாடிய சித்திர மடல்). வேல் விருத்தம் (அருணகிரிநாதர்) பிரபந்தப் பட்டியலில் சேராத எண்ணற்ற பிரபந்தங்களைத் தத்துவராயசுவாமிகள் தமது பாடுதுறையுள்ளும் அடங்கன் முறையுள்ளும் பாடியிருக்கிறுர்.

16 ஆம் நூற்றுண்டு – வருக்கக் கோவை (நெல்லை வருக்கக்கோவை, பதிற்றுப்பத்தந்தாதி (வரதுங்கராம பாண்டியர் பாடிய திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி).

17 ஆம் நூற்றுண்டு பெண்பாற் பிள்ளைத் தமிழ் (மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழ்), பன்மணிமாலை (வைத்தியநாத தேசிகர்).

18 ஆம் நூற்றுண்டு. குறம், குறவஞ்சி, பள்ளு, நொண்டி நாடகம் முதலாக எண்ணற்ற புதுப் பிரபந்த வகைகள் தோன்றத் தொடங்கு கின்றன.

அனுபந்தம் 1

## ஐந்திலக்கணமும் பாட்டியல் நெறியும்




18 யாப்பியல்
(எழுத்து அசை சீர் தளை அடி தொடை ஓத்து;
செய்யுளியல், ஒழிபியல்)
பாட்டியல்
(செய்யுளியல்)
19 முதன் மொழி இயல்
19a பொருத்த இயல்
20 செய்யுள் மொழி இயல்
21 பொது மொழி இயல்
(செய்யுளியல்)
24 இனவியல்
24a பிரபந்த மரபியல்
25 உறுப்பு இயல்
26 செய்யுள் இயல்
27 ஒழிபு இயல்
22 எழுத்து இயல்
23 சொல் இயல்
பிரபந்த இயல்
மரபு இயல்

## விளக்கக்குறிப்பு

இதன் முன்னே உள்ள அட்டவணையில், ஐந்திலக்கணங்களும், அவற்றுடன் இணைந்த பாட்டியலின் தோற்றமும், அதன் பிரிவுகளும் இன்றுள்ள எல்லாப் பாட்டியல் நூல்களின் பிரிவுகளும் பொருத்திக் காட்டப் பட்டுள்ளன.

இவற்றுள் *1, 2, 3* என்ற மூன்றும் முத்தமிழ். *2, 3* பண்டை இசை நாடகத் தமிழ் நூல்கள்; இன்று இல்லை. *4, 5, 6* என்ற மூன்றும் தொல்காப்பியத்தின் பிரிவுகளான மூன்று அதிகாரங்கள். பொருளதிகாரம் என்பதன்கீழ் அதன் பிரிவுகள் அகப் பொருள் புறப் பொருள் பிற பொருள்கள் என்று சொல்லப்பட்டு, இம்மூன்றின் பிரிவுகளாக தொல்காப்பியப் பொருளதிகார இயல்கள் காட்டப் பட்டுள்ளன.

*7-15* இவை தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் ஒன்பது இயல்களாகும்.

*4, 5, 6, 13, 16* இவ்வைந்துமே ஐந்திலக்கணம் என்னப்பெறும். இறையனுர் அகப் பொருள் குறிப்பிடும் யாப்பதிகாரம் என்பது, *13*ஆம் எண் குறிப்பிடும் செய்யுளியலாகும். *9* களவியல் என்ற பொருள் மட்டுமே இறையனுர் களவியல் கூறுவது.

*14-15* பிற்கால அணியிலக்கணம் என்னும் அலங்கார சாஸ்திரம் இவ்விரு இயல்களிலிருந்தே கிளைத்தது.

*17* உவமான சங்கிரகம் என்ற பெயருடைய சிறு நூல்கள் சில உள்ளன. இவை தொல்காப்பியம் கூறும் உவமையிலிருந்து தோன்றின என்று முழுமையும் சொல்ல இயலாவிட்டாலும், பன்னிரு பாட்டியலில் உள்ள சூத்திரங்களிலிருந்து (*193, 194*) பிற்காலத்தில் கிளைத்தனவாகும்.

*18* இங்குக் கூறப்பட்ட பிரிவுகள் யாப்பருங்கலத்தில் ஓத்துக்கள் என்று வருவன.

பாட்டியலின் பிரிவாகச் செய்யுளியலையும் கூறுவன பிரபந்த மரபியலும் சிதம்பரப் பாட்டியலும்.

*19, 20, 21* இவை வெண்பாப் பாட்டியல் நவநீதப் பாட்டியற் பகுதிகள்.

22, 23, 24 பன்னிரு பாட்டியற் பிரிவுகள். இப்பாட்டியல் செய்யுள் மொழியியல், பொது மொழியியல்கள் ஆகிய இரண்டின் பொருளையும் இனவியல் (24) என்ற பொருளால் சொல்லுகிறது. இனவியலே பிரபந்தவியல், மரபியல் என்ற இரு பொருளாய்ச் சொல்லத் தக்கது.

25, 26, 27, 19a, 24a இவையே பிரபந்த மரபியல், சிதம்பரப் பாட்டியல் ஆகிய இரண்டின் பிரிவுகள்.

அனுபந்தம் 2

## பிரபந்த மரபியல் கூறும்

# 96 பிரபந்தங்களின் அட்டவணை

| பிரபந்த வரிசை எண் | பிரபந்தப்பெயர் | நூற்பா எண் | பிரபந்த வரிசை எண் | பிரபந்தப்பெயர் | நூற்பா எண் |
|---|---|---|---|---|---|
| 1 | அகப்பொருட்கோவை | 7 | 32 | சின்னப்பூ | 9 |
| 2 | அங்கமாலை | 12 | 33 | செங்கோல் விருத்தம் | 9 |
| 3 | அட்டமங்கலம் | 11 | 34 | செருக்களவஞ்சி | 18 |
| 4 | அலங்கார பஞ்சகம் | 11 | 35 | தசப்பிராதுற்பவம் | 18 |
| 5 | அனுராக மாலை | 15 | 36 | தசாங்கம் | 9 |
| 6 | ஆற்றுப்படை—புலவர் | 12 | 37 | தாரகைமாலை | 17 |
| 7 | ,, பாணர் | 12 | 38 | தானைமாலை | 17 |
| 8 | ,, கூத்தர் | 12 | 39 | தும்பைமாலை | 17 |
| 9 | ,, பொருநர் | 12 | 40 | தூது | 15 |
| 10 | ஆனைத்தொழில் | 18 | 41 | நயனப்பத்து | 8 |
| 11 | ஆனைவிருத்தம் | 9 | 42 | நவமணிமாலை | 11 |
| 12 | இணைமணி மாலை | 8 | 43 | நாட்டுவிருத்தம் | 9 |
| 13 | இரட்டைமணிமாலை | 8 | 44 | நாமமாலை | 13 |
| 14 | இருபா இருபது | 14 | 45 | நாழிகைவெண்பா | 18 |
| 15 | இன்பமடல் | 14 | 46 | நான்மணிமாலை | 10 |
| 16 | உலா | 14 | 47 | நூற்றந்தாதி வெண்பா | 7 |
| 17 | உலாமடல் | 15 | 48 | ,, கலித்துறை | 7 |
| 18 | உழிஞைமாலை | 17 | 49 | நொச்சிமாலை | 17 |
| 19 | ஊசல் | 10 | 50 | பயோதரப்பத்து | 8 |
| 20 | ஊர்விருத்தம் | 9 | 51 | பரணி | 19 |
| 21 | ஒருபாஒருபது | 11 | 52 | பரிவிருத்தம் | 9 |
| 22 | ஒலியந்தாதி | 8 | 53 | பல்சந்தமாலை | 12 |
| 23 | கரந்தைமாலை | 17 | 54 | பன்மணிமாலை | 7 |
| 24 | கலம்பகம் | 4 | 55 | பாதாதிகேசம் | 12 |
| 25 | காஞ்சிமாலை | 17 | 56 | பிள்ளைக்கவி | 1 |
| 26 | காப்பியம் | 21 | 57 | புராணம் | 21 |
| 27 | குடைவிருத்தம் | 9 | 58 | பெருமகிழ்ச்சிமாலை | 13 |
| 28 | குழமகன் | 14 | 59 | பெருங்காப்பியம் | 20 |
| 29 | கேசாதிபாதம் | 12 | 60 | மங்கலவள்ளை | 13 |
| 30 | கைக்கிளைமாலை | 13 | 61 | மும்மணிக்கோவை | 8 |
| 31 | கையறம் | 23 | 62 | மும்மணிமாலை | 1 |

| பிரபந்த வரிசை எண் | பிரபந்தப்பெயர் | நூற்பா எண் | பிரபந்த வரிசை எண் | பிரபந்தப்பெயர் | நூற்பா எண் |
|---|---|---|---|---|---|
| 63 | மெய்க்கீர்த்திவஞ்சி | 13 | 72 | வேல்விருத்தம் | 9 |
| 64 | வரலாற்றுவஞ்சி | 18 | 73–96 | | |
| 65 | வஞ்சிமாலை | 17 | | பொருள் இடம் காலம் | |
| 66 | வருக்கக்கோவை | 7 | | தொழில் பற்றிய மாலை, | |
| 67 | வருக்கமாலை | 10 | | மஞ்சரி, காஞ்சிமாலை, | |
| 68 | வாகைமாலை | 17 | | முல்லை, கலி, சதகம் என்ற | |
| 69 | வாள்விருத்தம் | 9 | | பெயரால் வரும் பிரபந்த | |
| 70 | வில்விருத்தம் | 9 | | வகைகள் 24 | 16 |
| 71 | வெட்சிமாலை | 17 | | | |

இதில் கூறப்பெற்றுள்ள பிரபந்தங்கள் சிலவற்றுக்கு நூல்களில் வழங்கும் வேறு பெயர்களைக் கீழே காண்க: அகப்பொருட்கோவை–கோவை; ஆனைத்தொழில்–வாதோரணமஞ்சரி; இன்பமடல்–வளமடல்; ஊசல்–பொன்னூசல்; தசப்பிராதுற்பவம்–அரிபிறப்பு, உற்பவமாலை நாழிகைவெண்பா–கடிகைவெண்பா, நாழிகைச்செய்யுள்; பிள்ளைக்கவி–பிள்ளைத்தமிழ்; பெருமகிழ்ச்சிமாலை-புகழ்ச்சிமாலை.

அநுபந்தம் 3

# பிரபந்தமரபியல்-சிதம்பரப் பாட்டியல் ஒப்புமை

| பிரபந்த எண் | பிரபந்தப் பெயர் | பிரபந்த மரபியல் நூற்பா | சிதம்பரப் பாட்டியல் விருத்தம் |
|---|---|---|---|
| 1 | பிள்ளைத்தமிழ் | 2–3 | 28 |
| 2 | கலம்பகம் | 4–6 | 29–30 |
| 3 | பன்மணி மாலை | 7 | 30 |
| 4–5 | வெண்பா அந்தாதி, கலித்துறை அந்தாதி | 7 | 30 |
| 6 | வருக்கக் கோவை | 7 | — |
| 7 | அகப் பொருட் கோவை | 7 | 30 |
| 8–14 | இரட்டை மணிமாலை, இணைமணி மாலை, மும்மணிக் கோவை, ஒலியந்தாதி, இருபா இருபது, பயோதரப்பத்து, நயனப்பத்து | 8 | 31 |
| 15–16 | தசாங்கம், சின்னப்பூ | 9 | 32 |
| 17–25 | குடை செங்கோல் நாடு ஊர் சிலை வாள் வேல் பரி யானை-விருத்தம் ஒன்பது | 9 | 32 |
| 6–29 2 | ஊசல், வருக்கமாலை, மும்மணிமாலை, நான்மணிமாலை | 10 | 33 |
| 30–33 | அலங்கார பஞ்சகம், அட்டமங்கலம், நவமணிமாலை, ஒருபா ஒருபது | 11 | 34 |
| 34–41 | பல்சந்த மாலை; ஆற்றுப்படை-புலவர், பாணர், கூத்தர், பொருநர்; பாதாதி கேசம், கேசாதிபாதம், அங்கமாலை | 12 | 35 |
| 42–46 | மங்கலவெள்ளை, மெய்க்கீர்த்திவஞ்சி, பெருமகிழ்ச்சிமாலை, நாமமாலை, கைக்கிளை மாலை | 13 | 36 |
| 47–49 | குழமகன், உலா, இன்ப மடல் | 14 | 37 |
| 50–52 | உலாமடல், அநுராக மாலை, தூது | 15 | 38 |

| பிரபந்த எண் | பிரபந்தப் பெயர் | பிரபந்த மரபியல் நூற்பா | சிதம்பரப் பாட்டியல் விருத்தம் |
|---|---|---|---|
| 53–76 | பொருள் இடம் காலம் தொழில் பற்றிய மாலை மஞ்சரி காஞ்சிமாலை முல்லை கலி சதகம் (24) பிரபந்தங்கள் | 16 | 38 |
| 77–86 | வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி நொச்சி உழிஞை தும்பை வாகை; தானைமாலை, தாரகைமாலை | 17 | 39 |
| 87–91 | தசப்பிராதுற்பவம், நாழிகை வெண்பா, செருக்களவஞ்சி, வரலாற்றுவஞ்சி, ஆனைத்தொழில் | 18 | 40 |
| 92 | பரணி | 19 | 41 |
| 93 | பெருங்காப்பியம் | 20 | 42 |
| 94–95 | காப்பியம், புராணம் | 21 | 43 |
| | நூல் பெயர் பெறும் முறை | 22 | 43 |
| 96 | கையறம், வாழ்த்து | 23 | 43 |
| | நாற்பாவுக்கும் உரிய சாதி | 24 | — |
| | நாற்பாவுக்கும் உரிய நிலம் நிறம் நாள் | 25 | — |
| | நாற்பாவுக்கும் உரிய இராசி | 26 | — |
| | நாற்பாவுக்கும் உரிய கோள் | 27 | — |
| | கவிஞன் இலக்கணம் | 28–29 | 44 |
| | கவிஞர் நால்வர் | 30 | — |
| | கவியைக் கேட்டற் சிறப்பு | 31 | 45 |
| | தமிழ்க்குலப் பெண் | 32 | — |
| | அவள் சுற்றத்தார் | 33 | — |
| | பரிசு வழங்காதோன் அழிவு | 34 | 46 |
| | குற்றமில்லாத பாட்டும் குற்றமுடைய பாட்டும் பயனும் | 35 | |

# செய்யுள் முதற் குறிப்பு அகராதி


| செய்யுள் | பாட்டெண் | செய்யுள் | பாட்டெண் |
|---|---|---|---|
| அகவல் விருத்தம் | 12 | தந்தை புலவன் | 33 |
| அவற்றுள் ஆசு | 30 | தருணநன்மாதை | 15 |
| அறைந்த கலம்பக | 7 | தேவர் மக்கள் | 14 |
| ஆசிரியம் வஞ்சி | 26 | நூறு தேவர் | 6 |
| ஆசிரிய விருத்தம் | 10 | பகர்தெசப்பிராது | 18 |
| ஆசில் முதனூல் | 22 | படைபுக்கு ஆயிரம் | 19 |
| ஆதிப்பாக் கலி | 11 | பாடுமுறை செய் | 28-9 |
| ஆர்புயம் தவம் | 4 | பெருங்காப்பிய நிலை | 20 |
| இமையவர் வேதியர் | 3 | மதிகுருவெள்ளை | 27 |
| எழுத்து முதலிய | 35 | மாசில் குலமகள் | 13 |
| கருது பொருள் | 16 | முல்லை குறிஞ்சி | 25 |
| கருதும் வெண்பா | 8 | மொழியின் மதுரம் | 32 |
| கலியும் வஞ்சியும் | 23 | வானவர் ஏத்தும் | 1 |
| கூறுமதிற்குல | 21 | வெட்சி நிரை | 17 |
| கொள்ளான் பனுவ | 34 | வெண்பாக்கலி | 5 |
| செய்யுட்கொளுமிடம் | 31 | வெண்பா முதனூற் | 24 |
| செறிகொலை நீக்கி | 2 | வெள்ளை பத்தில் | 9 |